# இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 18 சுடர் - 01




ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்


விஜய வருடம்
மார்கழி - தை

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

December 2013
- January 2014

## திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் 2013 டிசம்பர் 07ஆம் 08ஆம் திகதிகளில் நடந்த நாவலர் மாநாட்டு காட்சிகள்



கலாநிதி முருகேசு கதிர்காமநாதன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், பேராசிரியர் சி. பத்மநாதன்



சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்புரையாற்றுகிறார்.



மன்னார் அறநெறிப் பாடசாலைகள் இணையத்தின் தலைவர் சிவஸ்ரீ மகா தர்ம குமார குருக்கள் உரையாற்றுகிறார்.



முதலமைச்சர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் சிறப்புரையாற்றுகிறார்.






சைவவித்தகர் சசிதரன், கலாநிதி பிரசாந்தன், கம்பவாரிதி ஜெயராஜ், கலாநிதி ஆறு. திருமுருகன் மாமன்ற தலைவரினால் கௌரவிக்கப்படுகின்றார்கள்.





மன்னார் நகரில் நல்லூர் ஆதீன முதல்வர் ஆரம்பித்து வைத்த ஊர்வலம், பாரத நாட்டின் இந்திய துணைத் தூதுவர் மாண்புமிகு மகாலிங்கம் மற்றும் பிரமுகர்களுடன் ஆரம்பமாகி வரும் காட்சி



வழிபாட்டை முடித்துக்கொண்டு திருத்தலத்திலிருந்து வெளியே வரும் முதலமைச்சர் மாண்புமிகு. சி. வி. விக்னேஸ்வரன்





மாநாட்டில் உரையாற்றும் மாமன்றத் தலைவர் திரு. க. நீலகண்டன், இந்து சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்



இந்திய துணைத் தூதுவர் மாண்புமிகு மகாலிங்கத்தை மாமன்ற பொதுச் செயலாளர் கௌரவிக்கிறார்.



மன்னார் சித்தி விநாயகர் கல்லூரி மாணவிக்கு முதலமைச்சர் கணினி ஒன்றினை மாமன்றத்தின் சார்பில் அன்பளிப்பாக வழங்குகிறார்.

உ
சிவமயம்

தீபம் – 18

# இந்து ஒளி

சுடர் – 01

விஜய வருடம் தைத் திங்கள் 9ஆம் நாள் (22.01.2014)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே!

### திருவாசகம்

கடையவனே எனைக் கருணை யினாற்
கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே விட்டி டுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோசமங் கைக்கு அரசே
சடையவனே தளர்ந் தேன்எம் பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே!

### திருவிசைப்பா

பாலும் அமுதமும் தேனு மாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும் என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கு நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோடு
ஆலு மதற்கே முத லுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே!

### திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேர்ந்தன் எனைப
புகுந்தாண்டு கொண்டா ருயிர்மேல
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

சொல்லுவ தறியேன்வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளிஎன்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துள் ஆடும்சேவடி போற்றி என்ன!

திருச்சிற்றம்பலம்

## இயற்கை வழிபாடு

உலகில் தோன்றிய மதங்களில் இந்துமதம் தனித்துவ மானது. இயற்கையை தெய்வமாகக் கண்டவர்கள் இந்துக்கள். இயற்கைத் தெய்வமாகிய சூரியனை தினமும் காலையில் இந்துக்கள் வழிபாடு செய்வர். கண்கண்ட தெய்வமாக சூரியனைப் போற்றும் இந்துக்கள் பல நாமங்கள் கூறி சூரியனை வாழ்த்துவர். பகலவன், தினகரன், கதிரவன், ஞாயிறு, ஆதித்தன், உதயன் எனப் பல நாமங்கள் தமிழ் இலக்கியங்களில் சூரியன் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் சிலப்பதிகார செய்யுளில் "ஞாயிறு போற்றுதும்" என இளங்கோ அடிகள் சுட்டிக்காட்டுவர். முதல் நூலாகிய வேதத்தில் விண்சார்ந்த தெய்வங்களுள் ஒன்றாக சூரியனை முதன்மைப்படுத்தப்படுகின்றது. இதிகாசங்களிலும் சூரியனின் சிறப்பு எல்லையற்றது எனப் போற்றப்படுகின்றது. மெஞ்ஞானிகள் மட்டுமன்றி விஞ்ஞானிகளும் சூரியனின் ஆட்சி பற்றி அபரிமிதமாக கூறுகின்றார்கள். இத்தகைய மேன்மை மிக்க சூரியனுக்கு சைவத்தமிழர் பண்பாட்டில் உயர் மதிப்புக் கொடுத்தனர். நித்திய அநுட்டான விதி, சிவ பூசைத்தத்துவம், மகா கும்பாபிஷேக விதிமுறை அனைத்திலும் சூரிய வழிபாட்டின் மேன்மை விதந்துரைக்கப்பட்டுள்ளது.

### ஊரெழு
### ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
### மகா கும்பாபிஷேக
### சிறப்பிதழ்



மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" பதினேழு வருடங்களை நிறைவு செய்து கொண்டு, பதினெட்டாவது வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ள மகிழ்ச்சிகரமான காலப்பகுதி இது. "இந்து ஒளி"யின் வளர்ச்சிப் பாதையில் பதினெட்டாவது வருடத்தின் முதலாவது இதழை (தீபம்-18 சுடர்-01) ஊரெழு அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டிய சிறப்பிதழாக வெளியிடுவதையிட்டு மாமன்றம் பெருமகிழ்ச்சியடைகிறது. இந்த சிறப்பிதழை விநாயகப் பெருமானின் திருப்பாதத்தில் சமர்ப்பணம் செய்கிறோம்.

எம் நித்திய வாழ்வோடு இரண்டறக் கலந்து விளங்கும் இயற்கைத் தெய்வமாகிய சூரியனை நன்றியோடு போற்றித் துதிக்கும் நாளாக தைப்பொங்கல் திருநாளை நாம் கொண்டாடுகிறோம். தைபிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். புதிய சிந்தனையோடு புதுப்பானையில் பொங்கிப் படைத்து தமது குல தெய்வங்களை மன்றாடி சூரியக்கடவுளுக்கு பொங்கலை அர்ப்பணம் செய்யும் பாரம்பரியம் தொடர்கின்றது. வாழ்வில் புத்தெழுச்சியை ஏற்படுத்தும் பொங்கல் நன்னாளில் சூரிய வழிபாட்டுடன் உழுது பயிர் செய்யும் உழவரையும் போற்றும் பண்பாடு தொடர்கின்றது.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழவுத் தொழில் செய்யும் உழவர் பெருமக்கள் என்றும் நன்றிக்கு உரியவர்கள். இவர்களின் மேன்மையை "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" எனக் குறிப்பிடப்படுவது கருத்திற் கொள்ள வேண்டும்.

உழவரைப் போற்றும் இந்துக்கள் தம் உழைப்புக்கு காரணமாக விளங்கும் மிருகங்களை வணங்கத் தவறுவதில்லை. பட்டிப் பொங்கல் நன்னாள் ஆறறிவு மனிதன் ஐந்தறிவு மிருகங்களுக்கு நன்றி சொல்லி வாழ்த்தும் திருநாள். என்றும் எமது மூதாதையர் உயர்ந்த பண்போடு இயற்கை தந்த செல்வங்களை பேணினர். அப்பண்பாட்டை நாம் பேண வேண்டும். இத்தகைய பண்டிகை நாட்களில் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் பேணி உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தை பிறந்தால் சுப காரியங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் ஆயத்தமாகி விடுவார்கள். திருக்கோயில் கும்பாபிஷேகம், திருமணம், வீடு குடிபுகல், புதிய தொழில் ஆரம்பித்தல் எனப் பல கைங்கரியங்களை இக்காலப்பகுதியில் நிறைவேற்றுவர். எம்மண்ணில் போர்ச் சூழலிலும் திருக்கோயில்களை பேணுவதில் மக்கள் பெரிதும் அக்கறை செலுத்தினர். பல லட்சம் ரூபா செலவு செய்து திருக் கோயில்களை பேணுவதிலும் மக்கள் அக்கறை செலுத்தினர்.

வட புலத்தில் ஊரெழு என்னும் பழம் பெரும் கிராமத்தில் எழுந்தருளியுள்ள வீரகத்தி விநாயகர் திருக்கோயில் புனருத் தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. இத்திருக்கோயிலில் விநாயகப் பெருமானின் முகூர்த்தங்கள் அனைத்தும் சிற்பமாக வடிவமைக்கப் பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கையை தன் அகத்திலே தாங்கும் ஆனைமுகப் பெருமானின் திருவருளால் இவ்வைய கத்தில் அனைவரும் வாழ்வாங்கு வாழ பிரார்த்திப்போமாக!

**திகட சக்கரச் செம்முக மைந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்!**

ISSN : 2012 - 9645

## வாழ்த்து

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு
விஜய வருடம் மார்கழி - தை
22.01.2014



ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா [உள்நாடு] | ரூபா 300.00 [தபாற் செலவு தனி] |
| வருடாந்தச் சந்தா [வெளிநாடு] | US டொலர் 15 |



## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720


இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


# HINDU OLI

**Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
**Markazhi - Thai**
**22.01.2014**



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price : | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**


**Next Issue**
**MASI - PANKUNI**



ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்



# உலகெலாம் உணர்ந்து போற்றப்படும் விநாயகர்

இந்துக்களின வழிபாட்டு மரபில் விநாயகர் வழிபாடு முதன்மையானது. இவ்வழிபாட்டின் சிறப்பை கீழைத்தேயத்தவர்கள் மட்டுமன்றி மேலைத்தேயத் தவர்களும் நன்கு அறிந்து வருகின்றனர். விநாயகரை வணங்குவதில் மதங்களை மொழிகளை இனங்களைக் கடந்த ஆர்வம் பிரவாகிப்பதை உணரக் கூடியதாகவுள்ளது. கீழைத்தேயத்தில் பாரததேசத்திற்கு அப்பால் விநாயக வழிபாடு பன்நெடுங்காலமாக இருந்துள்ளமையை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சீனப் பண்பாட்டிலும் தென்கிழக்காசியப் பாரம்பரியங்களிலும் விநாயகரை ஒத்த வழிபாட்டு மரபுகள் எச்சசொச்சமாக இன்றும் காணப்படுகிறது. ஆபிரிக்க அமெரிக்கக் கண்டங்களிலும் பூர்வீகமான மிருகவழிபாட்டில் யானைக்குரிய தனித்துவம் இருந்துள்ளதை சில அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்துக்கள் சகல உலகமும் உள்ளடக்கிய தத்துவ வடிவமாக விநாயக வடிவத்தைக் கருதுகின்றனர். பிரபஞ்சம் முழு வதையும் காப்பதற்காக இறைசக்தி மனிதன், மிருகம், பூதம் என்ற அம்சங்களோடு விளங்குவதாக விநாயகருக்குச் சில நூல்கள் விளக்கம் சொல்லுகின்றன. எதுவாக இருப்பினும் அருள் நிறைந்த வடிவம் என்ற காரணத்தினால் காலங்களைக் கடந்து இவ்வழிபாட்டு அடையாளம் நிலைபெற்றுள்ளது.



விநாயகர் வழிபாட்டில் எளிமை முதன்மை பெறுகிறது. மண்ணில், மஞ்சளில், பசுவின் சாணத்தில் இத்தெய்வத்தைப் பூசிக்கலாம் என்பது ஓர் அற்புதமான தத்துவமாகும். அறுகம்புல் ஒன்றே போதுமெனக் கருதுவது இதன் அடுத்த அபூர்வம். மாடமாளிகை, பிரமாண்டக் கோபுரம் இவற்றில் மட்டுமல்ல சிறியதில் சிறியதாய் இறை வெளிப்படும் என்ற பேருள் தத்துவத்தை விநாயகர் வழிபாடு எம்மிடையே விளக்குகிறது. எல்லாம் கடந்த கடவுள் எல்லாரையும் விட எளிமையானவர் என்பதை பிள்ளையாரை வழிபடும் முறை மிக ஆழமாக விளக்குகின்றது. மூலப்பொருளும் முடிவுப் பொருளும் ஒன்றே என்ற உண்மைத் தத்துவத்தை உலகுக்குணர்த்துகின்ற விநாயகர் தத்துவத்தை சிந்திக்க சிந்திக்க ஆச்சரியமும் அற்புதமும் அகத்திலே உருவாகும். ஈழத்திருநாட்டில் வாழ்ந்த எம் முன்னோர்கள் விநாயகர் வழிபாட்டை மிகக் கவனமாகப் பேணினர். எல்லாச் சுபகாரியங்களிலும் பிள்ளையாரைப் பிடித்து வைத்தே ஆரம்பிப்பர். எந்தக் கோயிலிலும் மூலவருக்கு முந்திய பூசையாகப் பிள்ளையாருக்கு மதிப்புக் கொடுப்பர். அவ்வகையில் பலநூற்றாண்டு காலப்பழமை மிக்க விநாயகர் கோயில்கள் ஈழநாட்டின் எல்லாத் திசைகளிலும் தோற்றம் பெற்றுப் பாதுகாக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் ஊரெழு கிராமத்தில் பலநூறு வருடங்களுக்கு முன் உருவாகிய வீரகத்தி விநாயகர் ஆலயத்தைப் பற்றி யான் நன்கறிவேன். இத்திருக்கோயில் அழகுக் கோயிலாகக் காட்சியளிக்கிறது. இத்திருக்கோயிலை தரிசிக்கும் பாக்கியமும் இக்கோயில் அடியவர்க்கு சைவநற்சிந்தனை சொல்லும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இவ்வாண்டில் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு மகாகும்பாபி ஷேகம் நடைபெற இருப்பதை அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். இவ்வாலய அறங்காவலர் திரு.க.சண்முகநாதன் அவர்களை கடந்த சில வருடங்களாக நான் நன்கறிவேன். அன்னாரது ஆற்றுப்படுத்தலில் இத் திருக்கோயில் பெருவளர்ச்சி கண்டு வருகிறது. இத் திருக்கோயில் சிறக்க இறையருளை வேண்டி அன்பர்கள் அனைவருக்கும் நல்லாசிகளையும் வாழ்த்தையும் தெரிவித்து அமைகிறேன்.

ஓம் சாந்தி

**தொண்டுநாதன்**

**சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினம் விஜய வருடம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (10.04.2014) வருகிறது. அன்று முதல் ஒருவருடகாலம் சிவயோக சுவாமிகளின் நினைவு ஆண்டாக அனுஷ்டிப்போமாக!**

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
## பிரதம குரு பிரம்மஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள் அவர்களது
# ஆசிச் செய்தி



"யக்ஞக துலாபகம் நித்தியம்
நிர்மலம் நிருபத்திரவம் தஸ்மை
மகானு பாவாய விக்னேசாய
நமோ நமக!"

ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடமாகத் திகழ்கிறது. பக்தர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும், மன ஒருமைப்பாட்டிற்கும் வழிசெய்வன ஆலயங்களே. அதற்கு மேலாக சைவ சமயிகளின் பண்பாட்டு விழுமியங்களை பேணிப்போற்றுவனவாகவும் விளங்குகின்றன.

அந்தவகையில் சிறப்புப்பெறும் ஊரெழு மடத்துவாசல் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியிருப்பதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். கும்பாபிஷேகம் என்பது எல்லாவகையான குறைபாடுகளும் நீங்கி, திருவருள் விளக்கம் மேம்படுவதற்குரிய பெருஞ்சாந்தியாகும். இதன் மூலம் ஆலயம் மேலும் சிறப்புபெறுவதுடன், இங்கு எழுந்தருளியிருக்கும் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான், ஊரெழுப் பதி மக்களுக்கு வெற்றியின் நாயகனாகவிருந்து தடைகளை தகர்த்தி இன்பமுடன் வாழ வழிநல்குவான் என ஆசி வழங்கிப் பிரார்த்திக்கிறேன்.

இந்த மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் சிறப்பிதழை வெளியிடுவது பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். இந்து மாமன்றத்தின் இருமாத ஆன்மீக இதழான "இந்து ஒளி" மகா கும்பாபிஷேக சிறப்பிதழாக மலர்ந்து மணம் வீசுகிறது. இந்து மாமன்றத்தின் இத்தகைய நல்ல முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

சுபமஸ்து.

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபைத் தலைவர்
## திரு. க. சண்முகநாதன் அவர்களது
# வாழ்த்துச் செய்தி



வெவ்வினையை வேரறுக்க வல்ல விநாயகப் பெருமான் ஊரெழு கிராமத்தில் வீரகத்தி விநாயகராக கோயில் கொண்டு அருள்பாலித்து வருகிறார்.180 வருடகால வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பில் கடந்த பதின்மூன்று வருடங்களுக்கும் மேலாக நானும் இணைந்திருந்து பணியாற்ற கிடைத்த சந்தர்ப்பமானது விநாயகப் பெருமானின் திருவருள் என்றுதான் சொல்லவேண்டும்.ஆலய வளர்ச்சியில் மற்றுமொரு நிகழ்வாக புனருத்தாரணப் பணிகளைத் தொடர்ந்து மகாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியிருக்கிறது.

இலங்கையில் சமயப் பணிகளுடன் சமூகநலப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்லும் அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டு வரும் இருமாத ஆன்மீக இதழான "இந்து ஒளி" இம்முறை எமது ஆலயத்தின் மகாகும்பாபிஷேக சிறப்பிதழாக வெளிவந்திருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்து மாமன்றத்துடன் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. நல்லூரிலுள்ள இந்து மாமன்ற யாழ் பணிமனையின் கட்டிடவேலைகளை எனது பொறுப்பிலுள்ள "ஜெயசன்யன்" நிறுவனமே மேற்கொண்டது. கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் ஆலய வீதியில் அமைக்கப்பட்ட வீரகத்தி விநாயகர் மணிமண்டபத்தை, அப்போது இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவிருந்தவரும், இப்போதைய தலைவருமான திரு.கந்தையா நீலகண்டன் அவர்களும், அவரது துணைவியாரும் திறந்து வைத்தார்கள். இந்த வகையில் ஆரம்பமான இந்து மாமன்றத்திற்கும் ஆலயத்திற்கும் இடையிலான தொடர்பின் மற்றுமொரு அம்சமாகவே, இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" எமது ஆலயத்தின் மகாகும்பாபிஷேக சிறப்பிதழாக மலர்ந்திருக்கிறது. இது ஆலய நிர்வாக சபையினரான எங்களுக்கும், கிராம மக்களுக்கும் மகிழ்ச்சி தரும் விஷயமாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இத்தகைய நற்பணிக்காக மாமன்றத்தினருக்கு, குறிப்பாக மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் வெளியீட்டுக் குழுவினருக்கும், ஆலய நிர்வாக சபையின் சார்பாக இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன், இந்து மாமன்றத்தின் நல்ல பணிகள் மேலும் சிறப்புடன் அமையவேண்டும் என ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருவருள் துணைகொண்டு வாழ்த்துகிறேன்.

இறைபணி என்பது அறிந்தோ அறியாமலோ பிறர் வற்புறுத்தியோ, மனமின்றியோ, அல்லது பெயருக்காகவோ செய்வதல்ல. இறைபக்தி அவரவர் வாழ்க்கையில் தானாகவும், அவர்களது பெற்றோரின் வழிநடத்தலினாலும்தான் ஏற்படுவது இயற்கை. அந்த வகையில் நாம் செய்யும் ஒரு பங்கு இறைதொண்டின் பலன், பலவகையிலும் எமக்கு திரும்பி வந்து சேரும். இது நேரில் நாம் கண்ட உண்மையாகும். இறைவனை நம்புங்கள்.

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

# ALL CEYLON HINDU CONGRESS

( Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)



## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர்
## திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் வழங்கிய
## வாழ்த்துச் செய்தி

வடபுலத்தை ஆண்டாண்டு காலமாக வாழ வைப்பது அச்செம்மண்ணில் ஆன்மீகமும் கல்வியும் என்றால் மிகையாகாது. அந்த அறுவடைகளில் பயன் பெற்ற ஒருவன் என்ற உரிமையில் அச்சிறப்பை என்றும் மெச்சி எல்லாம் வல்ல எம்பெருமான் தந்த திருவருள் என்று போற்றி வணங்குபவன் சிறியேன்.

யாம் மண்ணில் வளர்ந்த பழக்கம் இன்றும் பிள்ளையார்சுழி போடாமல் எதனையும் எழுதாத பழக்கத்தில் தோய்ந்தவன் யான். மூலைமுடுக்கெல்லாம் முதல்வன் விநாயகனுக்குச் சிலை எடுத்து அவன் அருளுடன் சகல காரியங்களையும் ஆரம்பித்துவரும் ஆன்மீகப் பெருமைமிக்க வடமாகாணத்தின் வளம்மிக்க கிராமமான ஊரெழுவில் அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமான் எழுந்தருளி அக்கிராமத்து மக்களை உயர வைத்து வருகிறார்.

சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்த ஆலய வீதியில் அமைக்கப்பட்ட மணிமண்டபத்தை திறந்து வைக்க அடியேனையும் இல்லத்துணைவியையும் வரவழைத்து விநாயகப் பெருமானின் அருளைப்பெற வழிவகுத்த நண்பர் திரு. க. சண்முகநாதன் அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடப் பணிகளில் வெறும் கட்டிட அமைப்பாளராக இல்லாது மாமன்றத் தொண்டர்களில் ஒருவராக உழைத்தவர். அவர் இந்த ஆலய நிர்வாகத்திற்கு தலைமை தாங்கி நடத்துவதே திருவருள் என்றுதான் கூறவேண்டும்.

ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஊரெழு மக்களுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும், உலகெல்லாம் பரந்து வாழும் எமது உடன் பிறப்புகளுக்கும் அருள்புரிய வேண்டி வணங்கி நிற்கின்றோம்.

இந்து மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி" வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பிதழாக வெளியிடுவதற்கு ஆலய நிர்வாக சபை வழங்கிய ஒத்துழைப்பிற்காக மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து, நாட்டிலுள்ள ஆலயங்களின் மகா கும்பாபிஷேக நிகழ்வுகளின்போது "இந்து ஒளி" சிறப்பிதழாக வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் செய்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களது

(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

## வாழ்த்துச் செய்தி

'வேழ முகத்து விநாயகனைத் தொழுதால் வாழ்வு மிகுந்து வரும்' என்பர். விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான் எங்கும் நிறைந்த தெய்வம். விநாயகருக்குக் கோயில் இல்லாத இடமே இல்லை. எல்லா ஊரிலும் எல்லா நாட்டிலும் உண்டு. தமிழர் பண்பாட்டில் விநாயகருக்கு உயர்ந்த மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழில் எழுந்த புராணங்களில் விநாயகருக்கு முதலில் காப்பு செய்யுள் படைக்கப்பட்டுள்ளது. எல்லா சுப காரியங்களிலும் விநாயகர் வழிபாட்டை முதலில் நிறைவேற்றும் பாரம்பரியம் இன்று வரை பேணப்படுகின்றது. ஈழ நாட்டில் ஆரியச்சக்கரவர்திகளின் ஆட்சிக்காலத்தில் விநாயகருக்குப் பெருங் கோயில்கள் கட்டப்பட்டதாக அறிகின்றோம். பிள்ளையார் பெருங்கதை, விநாயகர் புராணம் திருக்கோயில்களில் படிக்கும் மரபு பல நூற்றாண்டுகளாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

யாழ் குடாநாட்டிலுள்ள பழைய திருவூர்களில் ஒன்றான ஊரெழு கிராமத்தை அறியாதவர் இல்லை. இக்கிராமத்தில் பேணிப்பாதுகாத்து வரும் வீரகத்தி விநாயகர் திருக்கோயில் இன்று பேரெழுச்சி பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். இங்கு பல தடவைகள் ஆன்மீக விரிவுரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தற்போது இவ்வாலயத்தின் சிறப்பை நன்முறையில் வழிப்படுத்தும் ஆலயக் குருக்கள் குடும்பத்துக்கும், அறங்காவலர் சபைத் தலைவர் திரு. க. சண்முகநாதன் அவர்களுக்கும், திருப்பணிக்கு உதவிய அன்பர்களுக்கும் உளப்பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி அமைகின்றேன்.

# வினையகற்றும் வீரகத்தி விநாயகர்
## ஆலய வரலாற்றுச் சுருக்கம்

**யா**ழ் குடாநாட்டின் வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலுள்ள கிராமம் ஊரெழு. இயற்கை வளமிக்க ஊர் இது. இங்கு பனை தென்னை மரங்கள் நிறைந்து காணப்படுவதுடன் விவசாய பூமியாகவும் சிறப்புப் பெறுகின்றது.



ஊரெழு கிராமத்தின் மடத்து வாசல் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமானுக்குரிய ஆலயம் 180 வருடங்களுக்கு மேலான வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. ஆலயத்தின் மேற்கு வீதியில் இருந்த புளிய மரத்தடியில் கல்லினால் செதுக்கப்பட்ட விநாயகர் சிலையொன்றை வைத்தே ஆரம்ப காலத்தில் பூசைவழிபாடுகள் செய்யப்பட்டன.அதன் பின் 1834 ஆம் ஆண்டில் சிறு கொட்டகையொன்று அமைக்கப்பட்டு வழிபாடு இடம் பெற்றது. ஆலயத்தின் பூசை வழிபாடுகளை நடத்தி வந்த சிவஸ்ரீ வேதாரண்ய ஐயர், காலத்தில் 1925 ஆம் ஆண்டு சிறிய கட்டிடம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என்பது வரலாற்றுப் பதிவு. தொடர்ந்து சிவஸ்ரீ கார்த்திகேச ஐயர், சிவஸ்ரீ சிவஞானஐயர் ஆகியோர் பூசை வழிபாடுகளை நடத்தி வந்தார்கள். திரு. இராமநாதன் வல்லிபுரம் முகாமையாளராகவும், திரு. விஸ்வநாதன் வீரவாகுதேவர் கணக்காளராகவும் பதவி வகித்து ஆலயத்தை பரிபாலித்து வந்தார்கள்.

ஊரெழு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பெரிய குருக்கள் என்று அழைக்கப்பட்ட சிவஸ்ரீ சோமசுந்தர குருக்கள், சின்னக்குருக்கள் என அழைக்கப்பட்ட சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் ஆகிய இருவரிடமும் ஆலய பூசைப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1936 நவம்பர் 26 ஆம் திகதியன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இங்கு வருடந்தோறும் நடைபெற்று வந்த அலங்கார உற்சவத்துக்கு பதிலாக 1944 ஆம் ஆண்டிலிருந்து மகோற்சவம் ஆரம்பமானது. 1946 ஆம் ஆண்டு சித்திரத் தேருக்குரிய அடித்தளம் அமைக்கப்பட்டு தேர்த் திருவிழாவின் போது பயன்படுத்தப்பட்டு வந்தது. 1977 ஆம் ஆண்டில் விநாயகப் பெருமானுக்கும் சண்டேஸ்வரருக்கும் புதிதாக இரு சித்திரத் தேர்கள் உருவாக்கப்பட்டதுடன் புதிதாக தேர்முட்டி மண்டபமும் அமைக்கப்பட்டது.

ஆலய முகாமைத்துவப் பொறுப்பை 1948 ஆம் ஆண்டிலிருந்து திரு. வல்லிபுரம் துரையப்பா அவர்களும் 1950 ஆம் ஆண்டிலிருந்து திரு. வல்லிபுரம் இராசா அவர்களும் ஏற்று நடத்திவந்தார்கள். இக்காலத்தில் வசந்தமண்டபம், மணிக்கோபுரம், மடப்பள்ளி என்பன அமைக்கப்பட்டன. தொடர்ந்து 1966 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் அவர்களும் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர் பிரதம குருமாராக இருந்து மகா கும்பாபிஷேகத்தை நடத்திவந்தார்கள்.

1981 ஆம் ஆண்டில் ஆலயத்தில் வழிபடுவோர் சங்கமும் திருப்பணிச்சபையும் அமைக்கப்பட்டு புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொடர்ந்து 1985 செப்ரெம்பர் 16 ஆம் திகதியன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1980 ஆம் ஆண்டிலிருந்து திருமதி சிவனேஸ்வரி திருநாவுக்கரசு ஆலய முகாமைத்துவத்தை பொறுப்பேற்று நடத்தி வந்தார். 1985 ஆம் ஆண்டில் கிராம மக்களின் துணையுடன் புதிய பரிபாலன சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. திருமதி பொன்னம்மா கிருஷ்ணபிள்ளை ஆலய பரிபாலன சபையின் தலைவராக தெரிவானார். அவரின் பின் திரு. க. கனகசபாபதி பரிபாலன சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆலயம் பழமைவாய்ந்த நிலையில் இருந்ததால் திருத்தியமைக்கப்பட்டு புது மெருகூட்டப்படவேண்டும் என கிராம மக்கள் விரும்பியதால் 2000 ஏப்ரல் 23 ஆம் திகதியன்று புதிய நிர்வாகசபையொன்று உருவாக்கப்பட்டதுடன் ஆலய யாப்பு விதிகளும் திருத்தியமைக்கப்பட்டன. புதிய நிர்வாக சபையின் தலைவராக திரு. க. சண்முகநாதன் தெரிவுசெய்யப்பட்டார். இவரது நிர்வாகத்தில் ஆலயம் பெருமளவு வளர்ச்சி கண்டது. 2001 ஆம் ஆண்டு மூன்று தள இராஜகோபுரம், மணிமண்டபமம், மகரதோரண தெற்குவாசல், ஸ்ரீ ரங்கநாதருக்கும் வைரவருக்கும் பரிவாரக்கோயில்கள், வாகனசாலை, யாகசாலை, மடப்பள்ளி, அலுவலகம், வெளிவீதி, தீர்த்தக் கிணறு, தரிசன மண்டபம் என்பன திருத்தியும் புதிதாகவும் நிர்மாணிக்கப்பட்டு நிலத்துக்கு மாபிள் பதிக்கப்பட்டும் அலங்கார மின்இணைப்பு செய்யப்பட்டும் ஆலயம் புனரமைப்புபெற்றது. இதன் பின் 2002-01-27 ஆம் திகதியன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள்

தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேகத்தை நடத்தியிருந்தார்கள்.

இதன் பின் ஒவ்வொரு வருடமும் ஆலயத்துக்குத் தேவையான திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. க. சண்முகநாதன் அவர்கள் பொறுப்பில் இயங்கும் ஜெயசண்யன் நிறுவனமே மேற்கொண்டு வருகின்றது. ஆலய வளர்ச்சியில் ஏனைய செயற்பாடுகளாக மணிமண்டபமும் தீர்த்தக் கேணியும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 2010 ஜனவரி 17 ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டது. அமரர் சி.த இராஜரத்தினம் குடும்பத்தினரின் உபயமாக தீர்த்தக்கேணி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. திருமதி இராஜேஸ்வரி நடராஜா அவர்களின் உபயமாக ஆலய உள்வீதி பயன்பாட்டிற்காக சிறு சித்திரத் தேரொன்று வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்து சதுர்த்தி உற்சவத்தின் போதும் விநாயகப் பெருமான் இந்த சிறு அலங்கார சித்திரத்தேரில் உள்வீதியுலா வருவது வழக்கமாக இருக்கின்றது.

காலத்துக்குகாலம் செய்யப்பட்டுவரும் ஆலய புனரமைப்புப் பணிகளின் தொடராக ஸ்ரீ மகாலட்சுமி பரிவாரக்கோயில், அனந்தசயனமாக ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் திருவுருவத் தோற்றம், விநாயகப் பெருமானின் 32 திருவுருவ வடிவங்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், ஸ்துபி வேலைகள் வர்ணப்பூச்சு உட்பட ஏனைய புனருத்தாரண வேலைகள் நிறைவு பெற்றநிலையில் ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட மகா யாக கும்பாபிஷேகம் விஜய வருடம் தைத்திங்கள் 9 ஆம் நாள் (22-01-2014) நடைபெறுகின்றது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை. தியாகராஜக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை நடாத்திவைக்கிறார்கள்.

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மாசிமகம் நட்சத்திரதினத்தை தீர்த்தமாகக் கொண்டு ஆரம்பமாவது வழக்கம். பன்னிரண்டு நாட்கள் மகோற்சவம் நடைபெறும். இவ்வருட மகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. பெப்ரவரி 14 ஆம் திகதி இரதோற்சவமும் 15 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறவிருக்கின்றது.

**ஊரெழு அ. கனகசூரியர்**

# மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

[கபிலதேவ நாயனார் இயற்றியது]



திருவாக்குஞ் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை!

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து!

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் – மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்!



களியானைக் கன்றை கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் – அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன்!



# பிள்ளையார் சுழி



பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத்தான் எதையும் எழுதத் தொடங்குவது நமது வழக்கம். 'பிள்ளையாரே! என் எழுத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாமல் நீர் காத்தருள வேண்டும்!' என்பதே இதன் பொருள் இதுவே பிள்ளையார் சுழியைப் பற்றிய பொதுவான கருத்து.

இந்தப்பழக்கம்எப்போதுதோன்றியது? எப்படி தோன்றியது? முன்பெல்லாம் எழுதத் தொடங்கும் போதும் சரி... முடிக்கும் போதும் சரி மங்கலச் சொற்களான 'ஹரி, ஓம்' என்று தொடங்கி 'சுபம்' என்று முடிப்பது வரை உள்ள சம்பிரதாயம் நம்மில் பலருக்குத் தெரியும்.

நமது பழங்காலச் சாசனங்கள் 'ஓம்', "ஸ்வஸ்தி" போன்ற மங்கலச் சொற்களை ஆரம்பத்திலும் முடிவிலும் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மன்னர் அசோகரின் கல் வெட்டுகளிலும் இதைக் காணலாம். இந்தச் சாசனங்கள் ஏறக்குறைய 2,300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

வேறு சில சாசனங்களில் மங்கலச் சொற்களுக்கு பதில் தாமரை முதலான உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இவையெல்லாம் நிலைத்த தன்மையைக் குறிக்கும் மங்கல உருவங்கள். பிள்ளையார் சுழியும் இத்தகையதுதான். இது பிரணவப் பொருளான 'ஓம்' என்பதைக் குறிப்பதாகவும் சங்கின் உருவ மாகவும் கருதுபவர்கள் உண்டு.

பிள்ளையார் சுழி 'ஓம்' எனும் பிரணவப் பொருளைக் குறிக்கும் உருவமாக இருக்க முடியாது. ஏனெனில், புத்த சமண சாசனங் களிலும் இது இடம் பெற்றுள்ளது. தவிர, வங்கத்தில் பிள்ளையாரின் தும்பிக்கையை நினைவூட்டும் குறியாக இந்தச் சுழி கருதப் படுகிறது. 'ஸித்தம்' எனும் மங்கலச் சொல்லைக் குறிக்கும் வடிவம் இது என்றும் ஒரு சிலர் கருதுகிறார்கள்.

பிள்ளையார் சுழி ஓர் எழுத்து போல் தோன்றினாலும் அதற்கென்று ஒரு தனி ஒலிக் குறிப்பு கிடையாது. எனவே, இதை 'பேசா எழுத்து,' 'மோன எழுத்து', 'ஊமை எழுத்து' என்றெல்லாம் கூறுவர். 'சுழி' தலைபோலவும், கீழே இருக்கிற 'கோடு' கால் போலவும் இருப்பதைக் கருத்தில்கொண்டு இதைச் சாகாத்தலை என்றும் 'வேகாக்கால்' என்றும், குறிப்பிடுவர். இந்தச் சுழி ஓங்கார வடிவத்தை ஒத்திருப்பதாலும் பிள்ளையாரின் வடிவமும் அவ்வாறு இருப்பதாலும் இதற்கு பிள்ளையார் சுழி என்று பெயர் வந்ததாகவும் கூறுவார்கள்.

இந்தச் சுழி இறைவனின் – அதாவது பிரபஞ்சத்தையே படைத்த பிரம்மத்தின் திருவடி. இதை இட்டாலே இறைவணக்கம் ஆகிறது என்றும் கூறுகிறார்கள். வேறு சிலரோ இதற்கு ஒரு விசித்திரமான காரணத்தைக் கூறுகிறார்கள். முன்பு காகிதம், பேனா போன்றவை கிடையாது. பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு தான் எழுதுவார்கள். அந்த ஓலைகள் எழுதுவதற்குத் தகுந்தபடி பதமாக உள்ளதா? எழுத்தாணி கூராக உள்ளதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கவே இந்தக் குறியை ஆரம்பத்தில் போட்டுப் பார்த்தார்களாம்!

குளத்து நீரில் ஒரு கல்லை விட்டெறிந்தால் வட்டவடிவமாக அலைகள் தோன்றிப், பரவி, பின் மெல்லக்கரையை வந்தடையும். அதேபோல் உலகம் இயங்குவற்கு ஆதாரமான மூல இயக்கம் – அலை இயக்கம் முடிவில்லாமல் விரிந்து பரவிக் கொண்டே இருக்கிறது. குளத்து நீரில் தோன்றிய அலை இயக்கம் கரையில் மோதி முடிந்து விடுகிறது. ஆனால், பிரபஞ்ச அலை இயக்கமே முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. எல்லா வற்றுக்கும் ஆதாரமான இந்த மூல முதல் அசைவே தெய்வத் திரு நடனமாம். இதிலிருந்தே நாதம் எழுகிறது. இதை பயபக்தியோடு எழுதுவதே 'இறை வணக்கம்' ஆகிறது என்பது மெய்ஞ் ஞானிகள் கருத்து. வட்டமும் நீட்சியுமான சுழியோடு சேர்ந்த கோடு(உ) பிரபஞ்ச விரிவியக்கத்தைக் குறிக்கிறது பிரபஞ்சத்தின் 'நிலைத்த தன்மை'யைப் போல நமது எழுத்தும் செயலும் இருக்க வேண்டும் என்பதையே பிள்ளையார் சுழி உணர்த்துகிறது என்றும் கூறலாம்.

எனினும் இதையெல்லாம்விட பொருத்தமான காரணம் ஒன்று உள்ளது. எழுத்து களை நெடுங்கணக்கு என்று கூறுவ துண்டு. தமிழ் நெடுங்கணக்கு என்றால் 'அ' முதல் 'னௌ' வரையுள்ள மொத்தத் தமிழ் எழுத்துகளையும் குறிக்கும். கணம், கணி, கணக்கு என்ற சொற்கள் தொகுதி, கூட்டம், தொடர் என்று பொருள்படும். கணபதி என்றாலும் கணத்தின் தலைவன் என்றாலும் கணக்குக்கு அதிபதி (தமிழ்) நெடுங்கணக்கின் மூலவர் என்று பொருள்படும். அதாவது எழுத்தை அறிமுகப்படுத்தியவர். திருப்புகழில் வரும்,

*'முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்*
*முற்பட எழுதிய முதல்வோனே!*

என்ற வரிகளும், விநாயகர் துதியில் வரும்,

*'பாசத்தை மேரு வெளீஇ வெளீஇ திகழ்*
*கோடொடித்த நாளில் வரைஇ வரைஇ பவர்*
*பானிறிக் கணேசர் குவா குவாகனர்'*

என்ற வரிகளும் மெய்ப்பிக்கின்றன.

இதனால்தான் வர்த்தகர்களும் கணக்கு எழுதத் தொடங்குமுன் விநாயகரை வணங்கி வழிபட்டு அவரின் மனைவியர் என்று நம்பப்படும் 'லாப', 'சுப' ஆகிய இருவரையும் நினைத்துக் கொண்டு கணக்கு எழுதத் தொடங்குவர். தானிய அளவையில் முதலெண்ணுக்கு வழங்கும் சொல் 'லாப' என்பதே!

கணிதவியலைப் பற்றிக் கூறும் மானவ கிருஹ்ஹசூத்ரத்தில் முதன் முறையாக விநாயகர் வழிபாடு பற்றிக் குறிப்பிடப்படுகிறது. எனவே, எழுத்துக்கும் எண்ணுக்கும் விநாயகரே அதிபதி என்றாகிறது.

எண்ணும் எழுத்தும் வாழுமுயிர்க்கு கண் என்கிறார் வள்ளுவர். அந்தக் கண்களைத் திறந்துவிட்டவர் விநாயகர். அறிவுலகைப் பார்க்க, கதவுகளை (கண்களை)த் திறந்து விட்ட அந்தப் பொற்சாவியை என்றும் நினைத்து வழிபட்டு எழுத்துலகில் நுழையும் நோக்கத்துடன் 'உ' எனும் பிள்ளையார் சுழியை முதலில் எழுதுகிறோம்.

**(நன்றி : பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக மலர் – 2013)**



# ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருப்பதிகம்

ஞானவித்தகர் அருட்கவி சீ. விநாசித்தம்பி

ஆதிடி சக்தி மடப்பிடி யாவர
ஆடு சித்த னருட்களி றாய்த்தரு
பூத முத்தி மகேஸ்வர பூரணா
போத சுத்த சுகாதிப காரணா
நாத வித்தெனு ஞானக ணேசநின்
நாட கப்பதம் பாட நயந்தருள்
வேத வற்புத வூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

காவி ரிப்புனல் காழிசெ ழித்திடக்
காக வித்தை புரிந்தவு மாசுதா
காவி யப்பொருண் மேருவ ரைந்தவா
கான முற்றிடு மாமுறை தந்தவா
ஆவி சித்ததி யானம லர்ந்திட
ஆத ரத்தி னுபாய முணர்த்துவாய்
மேவு கற்பக வூரெழு தேடிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

தண்ண ருட்கலை தாங்கிய வாகமம்
சார்ம றைத்தொகை சாற்றுக ணேசனே
திண்ண ருட்பரன் காலெடுத் தேறிய
தேரி னச்சுச் சிதைத்த பிரணவா
எண்ணு முற்றொட ரேழ்சன னங்கெட
ஏக பத்தி யெமக்கருள் செய்குவாய்
விண்ணி கர்த்திடு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

நாடு தொண்டர் குலம்பெரு கத்திரு
நாரை நற்பதிக் கோயி லமர்ந்தவா
கூடி லிங்கமி ராவணன் தந்திடக்
கோகர் ணத்தல மாக்கிய செல்வனே
தேடு நின்பதச் சேவை பயின்றெழும்
சிந்த னைச்சுவைத் தேனை யெமக்கருள்
வீடு தந்திடு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

தினைவ ளர்த்தவள் வேலனுக் காட்படத்
தேடி யக்கண மோடிய வேழமே
நினைவ முத்திய நீணரை பௌவைக்கு
நீதி முத்தமிழ் வாரிவ ழங்கினாய்
கனைக டற்படு மாயை விலங்கறக்
காணு முத்தம யோகம ளித்தெழும்
வினைய ழித்திடு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

தூண்டு திங்கள் துலங்கு சதுர்த்தியில்
சோக முற்றிடச் சாபமி ழைத்தவா
பூண்ட மங்கல வல்லபை நாயகா
பூத மத்தள நாக வயிற்றனே
பாண்டு ரங்கனி னின்ப மருகனே
பாத முத்திரை பாலித் துயிர்த்துணை
வேண்ட வந்திடு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

பின்னி டும்கஜ மாமுக னாவியைப்
பேண மர்க்கள மூஷிக மாக்கிய
முன்ன வாவிக டாலகண் டாதிமால்
மோது சக்கர மீந்ததி யாகனே
துன்னு பூரண சோதி மகோன்னத
தூய முச்சுடர் ஞானசு கந்தரும்
முன்னெ டும்முடி யூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

துதிவ ரத்தலை குட்டி வழுத்தினால்
தோன்று சர்க்கரை நீட்டு கரத்தனே
கதிமி கத்தரு கௌரி பணித்திடக்
காவ லுற்றிருந் தாய்கண பாலனே
நிதிசெ ழித்திடும் செல்வமும் கல்வியும்
நீய ளப்பதல் லாதுகை கூடுமோ
விதிபு துக்கிடு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

ஊய்வ ளந்தரு மீசன் வலம்புரிந்
தோர ருட்கனி வாங்கிய வீரனே
நெய்வ ளந்தரு மாகுதிப் பூசனை
நேரி யற்றினர்க் காளந்த பேறணி
செய்வ ளந்தரு சிற்பர நாதனே
தீத கற்றிடு மாறெமை யாக்குவாய்
மெய்வ ளந்தரு மூரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

அத்த னேதிக முங்குச பாசனே
ஆண வத்திரை நீக்குமு தல்வனே
முத்த னேயெழு குண்டலி யாதிய
மூல தற்பர மோனசி காரமே
பித்த னேன்கவி யுங்கழற் கேற்றிய
பேர ருட்கட லேவிக்கி னேஸ்வரா
வித்த காவளர் ஊரெழு மேவிய
வீர கத்தி விநாயக மூர்த்தியே!

**இந்த திருப்பதிகம் 1974ஆம் ஆண்டில் ஊரெழு கிராமத்தைச் சேர்ந்த திரு. மு. இராசரத்தினம், அவர்களால் சிறு நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த நூலின் நிழற் பிரதியொன்றை, "இந்து ஒளி"க்காக தந்து உதவிய ஊரெழு ந. து. ஜெயதீஸ்வரன் அவர்களுக்கு மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.**

# வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை



**இந்தப் பாடல்கள் ஊரெழு கிராமத்தை சேர்ந்த திரு. சபா. கதிரவேலு அவர்களால் பாடப்பெற்றவை. இவர் ஊரெழு கணேச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர். 1986 டிசெம்பர் மாதத்தில் இந்நூல் வெளியிடப்பட்டது. நூலில் உள்ள பத்துப் பாடல்கள் இங்கு பிரசுரமாகின்றது.**

சீர்பூத்த ஊரெழுவில் செகம் போற்றும்
சிவநெறியாஞ் செழுமை யாலே
கார் பூத்துக் காப்பாற்றக் கருணைநெறி
களைகட்டி கனிந்தே ஓடி
ஏர்பூத்துக் குலுங்கிடவே எனையாண்டே
ஏத்தநிதம் எதிரே நின்று
ஊர்பூக்க வீரகத்தி உருக்காட்டு
விநாயகனே உன்தாள் போற்றி!

அருந்தமிழால் அவ்வைக்கே அருள்வழங்கி
ஆய்ந்தகன்ற அவளின் வாக்கைப்
பெருந்துணையாம் வீரகத்திப் பெருவயிறான்
உயர்ஞானப் பெருமை சேர
மருந்தாக எடுத்துரைத்து மாநிலமே
கருத்தூறி மயக்கந் தீர
இருந்தருளி ஊரெழுவில் இடங்கொண்டான்
இறைவாநின் இணைத்தாள் போற்றி!

பணிவுடனே கையெடுத்துப் பதமலரில்
சிரந்தாழ்த்திப் பதிகம் பாடி
அணிமலரால் அகங்குளிர அருள்பெறவே
அர்ச்சித்தே அழகாய் ஆடிப்
பணியிதுவாய் இணைவிழியைப் பாதாதி
கேசம்தாய்ப் பதித்தே போற்றின்
பிணிதீர்த்தே ஆட்கொள்வான் பெருமானார்
வீரகத்திப் பொன்தாள் போற்றி!

உருவமிலா இறைவனுக்கே உருக்கொடுத்தே
உலகுய்ய உய்ந்தார் அன்பர்
அருவமாய் அறிவுருவாய் ஐம்பூத
ஆக்கமதாய் அறியா ஞானி
ஒருவனுமாய் ஓங்கார ரூபனுமாய்
இருவருமாய் இகத்தி லெட்டாத்
திருவுருவாய்த் தித்திக்கும் தேனமுதே!
வீரகத்தி திருத்தாள் போற்றி!

ஆணிப்பொன் முத்தழகோ அருங்கொன்றைப்
பூவழகோ அமுதே யன்ன
பாணித்தேன் சுவையழகோ பாவாணர்
கவியழகோ பக்தி பூக்கக்
காணில்உன் கண்ணழகோ கரிமுகத்தின்
அருளழகோ காட்சி! காட்சி!
மாணிக்கப் பிள்ளைதிரு மனந்திறப்பீர்
வீரகத்திப் மலர்த்தாள் போற்றி!

பிடியுருவாய் உமையவளும் பேரின்பக்
களிறதுவாய்ப் பெருமா னும்மே
கடிதெனவே கருத்தொன்றிக் காதலெழுப்
பிரணவமே எழுத்தி ரண்டாய்
வடிவுறவே வீரகத்தி வானவரின்
துயர்துடைக்க வடிவம் பெற்றாய்
இடியுறவே இன்பவெள்ளப் படியேற்றி
இரங்கிடுவாய் இணைத்தாள் போற்றி!

கனைத்தெழுந்தே மூவுலகைக் கலக்கிய
அரக்கனையே கணத்தில் வென்று
அனைத்துலகுங் காப்பாகி அமரர்சி
றைமீட்ட அரங்கன் ராமன்
உனையன்றோ மனச்சிறையி னுள்ளடைக்க
வீரகத்தி உருவாய்ப் பக்தன்
தனைப்பிடித்த பிரமஹத்தி தணித்தாயே
அருள்பொழிதா மரைத்தாள் போற்றி!

செம்பாட்டின் சீர்மையினாற் செழுமையுறு
செங்கதலிப் பாகி னோடே
அம்பலத்தான் உனக்களித்த அருள்ஞான
மாம்பழமும் அருளப் பெய்து
உம்பருக்கே நிழலூட்டும் உயர்வருக்கைத்
தேனூற்றும் உடன்க லந்தே
எம்பரனே யாமளிக்க எமையாண்டாய்
வீரகத்தி எழில்தாள் போற்றி!

பருவத்தாள் முதிர்பச்சைப் பெருமாள்சேர்
பாலரிசி குறுணி சேரக்
கருவத்தால் தலைதெறிக்கும் கன்னலது
கொழுஞ்சாறுங் கலந்து பெய்து
உருவத்தாள் மரகதமாய் ஊர்மணக்க
வறுத்தபய றோடு சேரப்
பெருவிருப்பால் பொங்கலிட்டே போற்றுவரே
வீரகத்தி பொற்றாள் போற்றி!

சீருரும் ஊரெழுவில் சிவமூறி
அருண்மலரும் செழுமை காணப்
பேரூரின் நாப்பண்ணே பெருநிழலாய்
வீரகத்தி பொழித லாலே
காரூந்து வளங்கொழிக்கும் கஜமுகனே
கருத்தூறிக் கரமே கூப்பின்
ஆரூரின் அரன்மகனே! அடியேனை
ஆண்டளிப்பாய் அருட்தாள் போற்றி!



# ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர்மீது பாடப்பெற்ற திருவூஞ்சல் பாடல்கள்



**தே**மதுர வீணையிசைத் தீம்பண மீட்டித்
தேவியுமை பாகனருள் திகழ நின்ற
மாமதயி ராவணன்முன் வாய்ந்த நாட்டின்
மாமகுட வியாழ்நகரம் வாளா வண்மை
சேமதவி சானவுயர் சீர்த்திக் கோட்டம்
தேசுநிறை ஊரெழுவில் எழுந்த ருள்செய்
மீமதுர விநாயகா் மீ தூஞ்சல் பாட
வீரகத்திப் பிள்ளையேநின் பாதம் போற்றி!

**நூல்**

தேரரிய வேதமெனும் தூண்கள் நாட்டித்
திகழுமுயர் சிவஞான விட்டம் பூட்டி
நேரரிய வாகனமாம் இழைகள் காட்டி
நிலவுசலை உபநிடதப் பலகை கூட்டி
ஓரரிய ஓங்காரப் பீடம் ஓட்டி
உலவுதிரு கனகமணி ஊஞ்சல் மீது
வீரமர் ஊரெழுநன் நகரம் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

அம்புலியும் செங்கதிருங் கவிதை தாங்க
அரிபிரமர் அழகுசெயுங் கவரி ஓங்க
உம்பரிடை ஒண்மணியாம் தீபம் தூங்க
உபந்தவிள வசந்தலது தூபம் வாங்க
கிம்புரியில் உம்பர்ஒளி ஓடி நூங்க
கிஞ்சுகவாய் யஞ்சகவல் லபைஓர் பாங்கில்
விம்பவடி வம்புவியூ ரெழுநகர் ஆங்கண்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

பொன்னழக முடியினணி பொலிவி னாடி
புதுமலரி னெழுவிரையும் பரவி நாட
வன்னமருங் கிசையினர்கள் சுருதி பாட
மருவடிய ரிருவிழியும் அருவிஓ
மன்னுமறை யறைபவர்மெய் புளகம் போட
மநுமுறையு நெறியறமும் உலகு சூட
மின்னுமெழில் மிளிருமூ ரெழுவிற் கூடும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

அத்தனுமை அசலமிசை நின்று நோக்க
அரிபிரம ரிந்திரர்கள் வந்து பார்க்க
சித்தனொடு சேய்வில்லி அன்பின் ஊக்க
சிவகணமென் தொடைமலரு கந்து தூங்க
சுத்தநெறி அந்தணர்தஞ் சுருதி கேட்க
துந்துபியு மதங்கமுமாங் கொழுங்கின் ஆர்ப்ப
வித்தகர்வாழ் ஊரெழுநன் நகரம் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

பேழைவயி றோடிவரும் பண்பு போற்றி
பிரணவமெய்ப் பொருளமையுந் தன்மை சாற்றி
மாழைதுதி மேவுகர வண்மை ஏத்தி
மருப்பொடித்து வரைவரைந்த வன்மை தேற்றி
ஏழையடி யார்களுளத் தின்பம் கூட்ட
இலகும்அரு ளொளிபெருகும் அன்பு நாட்டும்
வேழகு சீரமயும் ஊரெழுவூ ரோங்கு
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

கண்ணுதல்மெய்க் கடவுளரின் காட்சி ஆன
கயமுகவெங் கரவுருவே ஆடீர் ஊஞ்சல்
வண்ணவடி வேலவனின் மூத்தோ னாகி
வளர்சக்தி யவர்க்களித்தோய் ஆடீர்ஊஞ்சல்
மண்ணுலகு வளம்பெருக மாண்பின் ஆகு
வானகமீ திவர்பவரே ஆடீர்ஊஞ்சல்
விண்ணழக வூரெழுநன் நகரில் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

மோதகக்கை யகத்தண்டம் முழுதுங் காத்து
மூஷிகவா கனத்திவர்ந்தெம் இருளை நீத்து
பாதகத்துக் கயமுகனைப் படிய வீழ்த்திப்
பணிபவர்க ளுளயெனப் புலவர் போற்றப்
பொரியவல்நற் றனியமுது பொலிவு ஏற்று
வேதகலை விளங்குமூ ரெழுவில் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

அம்மையப்பன் அகிலமென்று வலமும் வந்தே
அருங்கனியைப் பெற்றவரே ஆடீர் ஊஞ்சல்
மும்மதத்தின் மாதங்க முகத்த னாகி
முருகனுக்கு அருள்பவரே ஆடீர் ஊஞ்சல்
கொம்பொடித்து மலைமீதில் பாரதத்தைக்
குலவிடவே வரைந்தவரே ஆடீர் ஊஞ்சல்
அம்புவியில் ஊரெழுவாம் பதியில் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

அவ்வையவள் தமிழகவல் மாந்தி முத்தி
அருள்பவரே ஆனைமுகா ஆடீர் ஊஞ்சல்
செவ்வடிவேற் குமரனவன் வதுவை செய்யச்
சிறந்தருளைப் பொழிபவரே ஆடீர்ஊஞ்சல்
வெவ்வரக்கர் மமதையதன் வேர்க ளைந்தே
வியனருளைச் சொரிந்தவரே ஆடீர்ஊஞ்சல்
திவ்யதல ஊரெழுவாம் பதியில் மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீர் ஊஞ்சல்!

ஒற்றைக்கொம் புடையவரே யாடீர் ஊஞ்சல்
    ஒழுகுபவர்க் குடையவரே யாடீர் ஊஞ்சல்
கற்றைச்செஞ் சடையவர்சேய் யாடீர் ஊஞ்சல்
    கதிகணநற் படையவரே ஆடீர் ஊஞ்சல்
இற்றைக்கெம் கொடையவரே யாடீர் ஊஞ்சல்
    இதயமதில் அடைபரே ஆடீர் ஊஞ்சல்
வெற்றிப்பண் ணுடையவூ ரெழுவில் மேவும்
    வீரகத்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்!

**வாழி**

சத்திசிவ நெறியொழுகு தபத்தர் வாழி
    தருமமுறை தவறாத அரசு வாழி
சத்தியநற் கலைபயிற்று பவர்கள் வாழி
    சற்சனர்கற் புடையோர்கள் தழைத்து வாழி!
சித்திபெற உழவர்வளம் சிறந்து வாழி!
    சிவசமய அறிவுநறி செழித்து வாழி!
வித்தைபொலி குருநாத குலமெய்த் தெய்வ
    வீரகத்தி விநாயகரே வாழி! வாழி!

**எச்சரீக்கை**

கணநாதனே கஜமுகத் தேவா எச்சரீக்கை
    கருணாகர அருள்நாயக நேயா எச்சரீக்கை
மணமாலர்ப் பதியூரெழு வாசா எச்சரீக்கை
    மதவாரண வீரகத்தி நாதா எச்சரீக்கை

கதியேயென அடியார்தொழும் தேவா எச்சரீக்கை
    கழலார்அருள் தரும்மாதங்க முகனே எச்சரீக்கை
மதிசூடிடும் மகாதேவனின் மைந்தர் எச்சரீக்கை
    மகிமைத்தலப் பதியூரெழு வாழ்வோய் எச்சரீக்கை

உமைபாலனே ஓங்காரனே பரனே எச்சரீக்கை
    உவந்தேஅருள் சுரந்தேதரும் வரனே எச்சரீக்கை
எமைஆளவே வரும்வாரள கோனே எச்சரீக்கை
    எழிலார்பதி தலஊரெழு அமர்வோய் எச்சரீக்கை

சுபமங்களம் தருமாதங்க முகனே எச்ச ரீக்கை
    சுகுணர்திப சுரர்போற்றிசெய் பவனே எச்ச ரீக்கை
தவமான ஊர்ப்பதிஊரெழு வாசா எச்ச ரீக்கை
    தருவோய்அருள் வீரகத்தி தேவா எச்ச ரீக்கை.

**பராக்கு**

வேழமுக நாயகனே விமலா பராக்கு
    வீரகத்திப் பிள்ளையாரே சீலா பராக்கு
பேழைவயிற் றுடையவனே பரனே பராக்கு
    பெருந்தலமாம் ஊரெழுக்க ணேசா பராக்கு.

பக்தருக்கு இரங்கியருள் சுரப்போய் பராக்கு
    பரந்தாமன் மருக்கண பதியே பராக்கு
இத்தரையில் ஊரெழுவின் அமர்வோய் பராக்கு
    இனியவீர கத்திவிநாயகனே பராக்கு.

சரணமென வந்தவர்க்கு அருள்வோய் பராக்கு
    சக்தியுமை பாலகஜ முகனே பராக்கு
வரமருளி வாழ்வுதரும் தேவா பராக்கு
    வளர்ஊரெ ழுப்பதியின் நாதா பராக்கு.
வீரகத்திப் பிள்ளையாரே நாதா பராக்கு
    விரிசோலை ஊரெழுவின் தலைவா பராக்கு
சூசன்கஜ முகனைவதம் செய்தோய் பராக்கு
    சுபமங்க ளம்அருளும் சுகுணா பராக்கு

**லாலி**

வீரகத்தி விநாயகர்க்கு லாலி சுப லாலி
    வெவ்வினைகள் தீர்ப்பவர்க்கு லாலி சுப லாலி
சேரமுத்தி கொடுப்பவர்க்கு லாலி சுப லாலி
    சேந்தனவன் சோதரர்க்கு லாலி சுப லாலி
பாரதத்தை வரைந்தவர்க்கு லாலி சுப லாலி
    பதியூரே ழுவாசகர்க்கு லாலி சுப லாலி
சீரகத்தைத் தந்தவர்க்கு லாலி சுப லாலி
    சிந்தூரச் சிற்பரர்க்கு லாலி சுப லாலி.

துங்கமா தங்கருக்கு லாலி சுப லாலி
    தும்பிமா முகத்தருக்கு லாலி சுப லாலி
பங்கஜப் பொற்பாதருக்கு லாலி சுப லாலி
    பதியூரெ ழுக்கோனுக்கு லாலி சுப லாலி
மங்களம் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
    மதவார ணத்தேவர்க்கு லாலி சுப லாலி
நங்கணப தியீசர்க்கு லாலி சுப லாலி
    நல்லூரெழு வாழ்பவர்க்கு லாலி.

**மங்களம்**

வீரகத்தி விநாயகர்க்கு ஜெயமங்களம் - வேத
    சாரமுத்தி தருபவர்க்கு சுப மங்களம்.
ஓங்காரப் பிரணவர்க்கு உமாதேவி பாலகருக்கு
    பூங்காவனப் பதியாம் ஊரெழுவின் வாசருக்கு
மனோன்மணி அம்மைக்கும் மயில்வாகன குகர்க்கும்
    அநாதரக்ஷகன்சிவன் பர்வத வர்த்தனிக்கும்
திரிசூல பைரவர்க்கும் திருமகள் சரஸ்வதிக்கும்
    அரிய ஊரெழுபக்தர் அடியரனைவர்க்கும்.

சுபம்

## பிள்ளையாரின் ஆயுதம்

**அங்குசம் :**



இது யானையை அடக்கப்பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும், குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப்பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக்கருவிகளில் இதுவும் ஒன்று.



# விநாயகர் அகவல்

(ஔவையார் அருளிச் செய்தது)



சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம்நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத் தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகளொடுங்கக் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்ப துங்காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனைக் கபால முங்காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதா ரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுதநிலையும் ஆதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்மு கமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக்கப் பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

# விநாயகர் அகவல் – சிறப்பும் மகத்துவமும்

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்**
முன்னாள் பதில் உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

ஔவையார் தமிழ்நாட்டில் வாழ்ந்த மிகச் சிறந்த விநாயக உபாசகர்களுள் ஒருவர். அவர் அருளிச் செய்த விநாயகர் அகவல் விநாயகரைப் போற்றிப் பிரார்த்தித்து அழைக்கும் பக்தி வெளிப்பாடும் ஆழ்ந்த கருத்துக்களும் பொதிந்த பாராயணத்திற்குரிய ஒப்புயர்வற்றதொரு ஆக்கம்.

அகவல் என்பது அழைத்தல் எனப் பொருள்படும். விநாயகர் அகவல் பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றி ஒரு வரலாறு கூறப்படுகிறது. ஔவையார் சுந்தரமூர்த்தி நாயனாரதும் சேரமான் பெருமாள் நாயனாரதும் சமகாலத்தவர். சுந்தரரை கைலாயத்திற்கு மீள அழைத்துச் செல்ல வெள்ளானை வந்ததை அறிந்த சேரமான் பெருமாள் வெண்குதிரையில் அவரைத் தொடர்ந்து கைலைக்குச் செல்கிறார். சுந்தரரும் சேரமன்னரும் ஔவையாரை நினைக்க தமது நாளாந்த விநாயகர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ஔவையாரின் உள்ளுணர்வில் அது தெரிகிறது. தாமும் அவர்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என விரும்பிய ஔவையார் தனது நாளாந்த கணபதி உபாசனையை அவசர அவசரமாக நிறைவேற்ற முற்படும்போது விநாயகப் பெருமான் ஔவையை அவசரப்படாது அமைதியாக வழிபாட்டை நிறைவு செய்யுமாறும் அவரும் கைலாசத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்றும் உறுதியளிக்கின்றார். அவ்வாறே அமைதியாக வழிபாட்டை நிறைவு செய்த ஔவையார் தனது பார்வையைத் தன்னுட் செலுத்தி தனது இஷ்ட தெய்வமான விநாயகரைப் பிரார்த்தித்து வரவழைத்துப் பாடிய இறுதிப் பாடலே விநாயகர் அகவல். இத்தெய்வீகப் பாடலைப் பாடி முடித்தபோது விநாயகப் பெருமான் காட்சி கொடுத்து ஔவையைத் தனது தும்பிக்கையால் தூக்கி சுந்தரரும் சேரமன்னரும் கைலாயம் சென்று சேருமுன்பாகவே கைலாயத்தில் சேர்ப்பித்து விட்டதாக வரலாறு. விநாயகரை வழிபடுவோர்களுக்குக் கைகூடாதது எதுவுமில்லை என்பது இவ்வரலாற்றின் உட்பொருள்.

விநாயகர் அகவல் சிறந்த வாசக அமைப்பும் உயிர்ப்புள்ள தோற்ற விவரணமும் யோக நுண்விளக்கமும் கொண்ட எழுபத்தியிரண்டு வரிகளாலான பாடலாகும். இவ்வுலகத்தை விட்டு நீங்குமுன் தாம் பெற்ற விநாயகர் திருவருட் கடாட்ச அனுபவத்தை உலகத்தவர்க்கு ஔவையார் எடுத்துச் சொல்கிறார். விக்கின விநாயகராகவன்றி வித்தக விநாயகராக - மெஞ்ஞானமளிப்பவராக-விளித்துப் போற்றிப் பிரார்த்தித்துச் சரணடையும் அற்புத ஆக்கம் விநாயகர் அகவல்.

ஓசைகளுக்கு எல்லாம் (பலவிசை)மூலகாரணமான ஓம் எனும் பிரணவத்தினை முன்னிலைப்படுத்திப் பரம்பொருளின் ஞானசொரூப மூர்த்தமாகக் காட்சிதருபவரும் குருவடிவாக வந்து மெஞ்ஞானத்தை உபதேசித்தவருமான விநாயகப் பெருமானின் திருவடிகளே எனது ஒரே தஞ்சம் ("வித்தக விநாயக விரைகழல் சரணே") என்பது விநாயகர் அகவலின் பொழிப்பு.

திருவருட் கடாட்சத்தின் அடையாளம் திருவடிகள். அத்திருவடிகளை மூன்று வெவ்வேறு நிலைகளில் பார்த்துப் போற்றித் துதித்து சரணடைந்து வரவழைக்கிறார் ஔவையார். விநாயகப் பெருமானின் குளிர்மையான இனிய வாசனையுடைய செந்தாமரைப் பூப்போன்ற பாதங்களில் அணிந்துள்ள சிலம்பு பலவிசை பாடுவதாக ("சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு பலவிசை பாட") முதலிரு வரிகளிலும், இவ்வுலகில் குருவடிவாக வந்து திருவடி தீட்சை அருளியதாக ("குருவடிவாகிக் குவலயந் தன்னில் திருவடி வைத்து") இருபத்தியிரண்டாவது வரியிலும், ஞானத்தின் சொரூபமான விநாயகரின் பாதார விந்தங்களே தமது ஒரே தஞ்சம் ("வித்தக விநாயக விரைகழல் சரணே")என இறுதி வரியிலுமாக மொத்தம் மூன்று இடங்களில் திருவடிகளைக் குறிப்பிடுகிறார்.

எழுபத்தியிரண்டு வரிகளைக் கொண்ட அகவலில் பதினான்காவது வரியில் "கற்பகக்களிறே" எனவும், பதினைந்தாவது வரியில் "மூஷிக வாகன"எனவும், இறுதி வரியில் "வித்தக விநாயக" எனவும் மூன்றே மூன்று இடங்களிலேயே விநாயகப் பெருமானை ஔவையார் விளித்து அழைக்கிறார். கேட்பதைக் கொடுக்கும் கற்பகக் களிறாக ஆரம்பத்திலும் ஞானத்தின் தலைவனாக அகவலின் இறுதியிலும் விநாயகப்பெருமானை விளித்த "ஔவையார் இப்பொழுது தென்னை ஆட்கொள வேண்டி எனும் பதினாறாவது வரிக்கு முன்" முப்பழம் நுகரும் மூஷிகவாகன"என விளித்திருப்பது நோக்குதற்குரியது. விநாயகர் பற்றிய புராணக் கதைகளையோ அவருக்குகந்த நிவேதனங்களையோ பூசை முறைகளையோ அகவலில் எங்குமே குறிப்பிடாத ஔவையார் "மூஷிக வாகன" என விளிக்கும்போது மட்டும் அடைமொழியாக முப்பழ நுகர்வை உபயோகித்திருப்பது சிந்தனைக்குரியது. மூஷிகம் என்றால் சுண்டெலி. மிகச் சிறிய உருக்கொண்ட பிராணியான சுண்டெலி யானையுருவும் பெரும் பாரக்கோடும் பானை வயிறும் கொண்ட விநாயகருக்கு வாகனமானது எவ்வாறு சாத்தியம் என்ற வினாவிற்கான தத்துவ விளக்கம் இவ்வரிகளில் பொதிந்துள்ளது. முப்பழம் என்பது இங்கு மும்மலங்களாகக் கருதப்படவேண்டியது.மும்மல காரியங் காரணமாக விநாயகரை எதிர்த்துப் போரிட்ட கயமுகாசுரன்,விநாயகப்பெருமான் அனுக்கிரகத்தால் மும்மல வலிமை குன்றிச் சுண்டெலி வடிவு கொண்டு சரணாகதி அடைந்தபோது, விநாயகர் அவனுக்கு இன்னருள் சுரந்து அவன் வேண்டுகோளை ஏற்று

வாகனமாக்கிக் கொண்டார் என்பது புராண வரலாறு. சுண்டெலி பெரும் பாரத்தைச் சுமக்க முடியாதென்பது யாருமறிந்தவொன்றென்பதால் விநாயகப் பெருமான் அச்சுண்டெலி சுமையை உணராதிருக்கப் பார்த்துக் கொள்கிறார் என்ற உண்மை புலப்படும். ஆகவே தத்துவ உண்மையென்னவெனில் விநாயகப்பெருமான் தன்னைச் சரணடையும் ஆன்மாக்களது மலபந்தத்தை அடக்கி நல்வழிப்படுத்தி அவர்கள் தங்கள் பிராரத்துவ வினையை அனுபவிக்கும் போது ஏற்படக்கூடிய வலிகளிலிருந்து (துன்பங்களிலிருந்து)காப்பாற்றுகிறார் என்பதாகும்.

ஒளவையார் தனது சொந்த அனுபவத்தைத் தொகுத்துக் கூறும்போது விநாயகப் பெருமானின் தோற்றம் பற்றிய வரலாறு, இந்துமதக் கடவுள் வடிவங்களில் விநாயகருக்குரிய இடம் விநாயகர் பற்றிய புராணக் கதைகள் எவற்றிற்குமே முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அகவலின் முதல் பதினான்கு வரிகளிலும் ஒளவையார் விநாயகப் பெருமானின் திருவுருவ அமைப்பை வருணித்து தமது அகக் காட்சியில் நன்கு கண்டு களித்தபின் பதினைந்து முதல் இறுதியான எழுபத்தியிரண்டாவது வரிவரை விநாயகப் பெருமானிடமிருந்து தாம் பெற்ற ஈசுவர கடாட்சத்தின் செயற்பாட்டைப் படிமுறையில் விபரமாக எடுத்துரைக்கிறார்.

ஒரு தாய் தன் குழந்தையின் தேவையைப் பூர்த்தி செய்வது போல், விநாயகர் குருவடிவாக எழுந்தருளி வந்து தனது மனதை அஞ்ஞான இருளிலிருந்து மீட்டெடுத்து மெஞ்ஞானத்தை உணர வழிகாட்டியதாகக் கூறும் ஒளவையார் விநாயகப்பெருமான் தம் மீது சொரிந்த அளவற்ற கருணையை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்கிறார். ஆன்மாவானது தன்னை அறிதற்குத் தடையாக இருப்பவற்றைக் குருவானவர் அகற்றுகிறார். தன்னை அறியும் முயற்சியின் போது எதிர் கொள்ளும் துன்பங்களையும் சிக்கல்களையும் படிப்படியாக நீக்கியருளுகின்ற குருவாக ஒளவையார் விநாயகரைக் கொள்கிறார். "குருவடிவாகிக் குவலயந்தன்னில் திருவடி வைத்து"என்கிறது இருபத்தோராம் இருபத்தியிரண்டாம் வரிகள்.

விநாயகர் அகவலில் ஒளவையார் வெளிப்படுத்தும் மெஞ்ஞானம் மனதால் உணரப்பட்டதொன்றல்லாது யோக மார்க்கத்திலான ஆன்மீகப் பயிற்சியினால் படிப்படியாகப் பெற்ற நேரடித் தெய்வீக அனுபவமாகும்.தாம் எவ்வாறு அத்தெய்வீக அனுபவ நிலைக்கு படிப்படியாக இட்டுச் செல்லப்பட்டார் என்பதை அகவலின் இருபத்துமூன்று முதல் இறுதி வரையான வரிகளில் விளக்கமாகக் கூறுகின்றார்.

ஒளவையார் விபரிக்கும் யோக மார்க்கப் படிமுறைகளை முற்றாக விளங்கிக் கொள்வது இலகுவானதல்ல. ஆயினும் இத்தெய்வீக ஆக்கத்தைத் தினமும் பாராயணம் பண்ணுவது மூலம் நாமும் மேனிலை அடைய முடியும்.

**(நன்றி : சிவதொண்டன் சிறப்பு மலர் - 2012)**

# முட்டின்றி முற்றுவிக்கும் முதல்வன்



எக்கருமத்தைத் தொடங்கும் போதும் மூத்த நாயகரான ஆனைமுகக் கடவுளை வணங்குதல் கருமத்தை முட்டின்றி முற்றுவிக்கும், வாக்குவன்மையை வழங்கும், செல்வம் பெருக்கும், புகழ் தரும், உடலழகும் தரும். ஆதலால் சுகபோகங்களுடன் அமரத்துவ வாழ்வு வாழும் தேவர்களும் அகத்திலே அப்பெருமானைப் பக்திப் பெருக்குடன் நினைவதுடன் புறத்திலும் கைகூப்பித் தொழுவர்.

***என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துந்***
***தன்னை நினையத் தருகின்றான்-புன்னை***
***விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்***
***அரசுமகிழ் அத்திமுகத் தான்.***

*(திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை)*

புன்னை, மகிழ், அரசு, அத்தி, ஆகிய பெருமரங்கள் ஒன்றோடொன்று நெருங்கி வளர்ந்திருக்கும் அகன்ற குளிர் சோலையுடைய திருநாரையூரிலே முக்கண்களையுடைய ஆனைமுகக் கடவுள் விரும்பி உறைகிறார். அப்பெருமான் என்னை ஒரு பொருட்டாக எண்ணித் தன் அடியருள் ஒருவனாகத் தொண்டு கொள்ளத் திருவுளம் கொண்டான். நில்லாதவற்றையே நினைந்து நினைந்து துன்புறுவதை ஒழித்தான். நிலையான பொருளான தன்னையே நினைந்திருக்கும் வண்ணம் என் நினைவில் நினைவாயிருந்து நினைப்பித்துக் கொண்டிருக்கின்றான். அடியேன் வேறொரு நினைவுமில்லாது அப்பெருமானை நினைந்து பணி செய்யும் பாக்கியம் பெற்றேன்.

**(நம்பியாண்டார் நம்பி)**

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்!

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்!



# விநாயகர் கவசம்

**ஆ**தியில் இக்கவசத்தைக்காசிப முனிவர், முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய. அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மாரீசி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தன ரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்க வேண்டும், இக் கவசத்தை நாடோறும் முறையாக ஓதி வருவோர்க்குப் பிணி, வறுமை, மனக்கவலை முதலியன நீங்கும். நன்மக்கட் பேறு, நல்லோர் நட்பு, எண்ணியது எய்துதல் முதலிய நன்மைகள் எல்லாம் உண்டாகும்.

வளர்சி கையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க!

கவின் வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க!

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க களங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சர்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க!

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கின ரர்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க!

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல் பதுமவத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க!

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க!

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி புயிர்த்திறத்தால்
வருந்துயரு முடி விலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க!

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிருக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க!

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுமுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்!



# அறுகம்புல் அர்ச்சனையின் மகத்துவம்

சிவஸ்ரீ இ. முரளிதர சிவாச்சாரியார்

இறைவனை வழிபடும் போது, ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு குறிப்பிட்ட மலரால் அர்ச்சனை செய்வது வழக்கம். முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை அறுகம்புல்லால் அர்ச்சிக்க வேண்டும் என்பது முறை. எதனால் விநாயகப் பெருமானை அறுகம்புல்லால் வழிபடுகிறோம்? அதன் தத்துவம் என்ன? என்பதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

சிறந்த நகரங்கள் ஏழினுள் ஒன்றான அவந்தி நகரத்தை அறிவும், ஒழுக்கமும், அருளும் கொண்ட சுலபன் என்றோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் தன் நாட்டு மக்களை நன்னெறியில் செலுத்தி அறம் தவறாது ஆட்சிபுரிந்து வந்தான். அவன் மனைவி கலைவாணிக்கு ஈடானவள். அழகும், அறிவும், தவமும் நிறைந்தவர். அரசகாரியங்கள் யாவினும் அன்புக் கணவனுக்கு கைகொடுத்து நிற்பவள். அவள் பெயர் சுபத்ரை. ஏழை எளியவர்களிடத்தில் இருவருமே எப்போதும் கருணை கொண்டு அவர்கள் துன்பத்தை விரைவில் போக்குவர். அந்தணாளர்கள், முனிவர்கள் ஆகியவர்களிடம் அன்பும், மரியாதையும் கொண்டு போற்றும் தன்மை உடையவர்கள். நாட்டுமக்களால் மனதாரப் போற்றப்பட்ட அரசதம்பதியர் அவர்கள்.

ஒருநாள் அரச சபைக்கு அந்தணன் ஒருவன் வந்தான். அவன் பெயர் மதுசூதனன். அவன் கந்தையுடுத்தியிருந்தான்; மெலிந்து குச்சி போல் காணப்பட்டான். அரசனிடம் தன் வறுமை தீரப் பொருள் பெற்றுச் செல்ல எண்ணி வந்தான். அவனை அரசசபையில் கண்டவுடன் அவன் தோற்றம் அரசனுக்குச் சிரிப்பை உண்டுபண்ணியது. விதிவசத்தால் சிரித்து விட்டான். அதைக் கண்ட அந்தணன் பெருஞ்சினம் கொண்டான். 'ஆறுவது சினம்' என்பதையும் மறந்தான்: சினம் ஓர் இருதலை அம்பு என்பதையும், அது எய்தவனிடமே மீண்டும் பாயும் என்பதையும் மறந்தான். ஈசனிடத்தில் எல்லையற்ற பக்தி கொண்டவனாய் இருந்தும், வேதநெறிவழி நடப்பவனாய் இருந்தும் ஒரு கணத்தில் தோன்றிய சினத்தால் தன் நிலை மறந்து "இலம்பாடு அலைப்ப இரந்து வந்த ஏழையெனைக் கண்டு இரக்கம் ஏதுமின்றிப் பண்பாடழிய புல்லைக் காட்டிப் பரிகாசச் சிரிப்பு செய்து காளை போல் நிற்கும் அரசனே நீயொரு காளைமாடுபோலாகித் துன்புற்று உழல்வாயாக" எனச் சபித்தான். அதனைக் கேட்ட அரசன் துணுக்குற்றான். அவன் மனைவி சுபத்ரை கோபித்தாள். அவ்வந்தணனை நோக்கி "குற்றம் ஏதும்செய்யாதகோமகனை குணமென்னும்குன்றின்மேல்ஒளிவீசும் நந்தாவிளக்கை, மக்களின் நல்வாழ்வே தன்வாழ்வு என நிதமும் அறவழி போற்றி ஆட்சி செய்யும் அருளரசனை அறிவின்மையாற் சபித்தாய். கழுதை போலும் அறிவறை போகிய அந்தணனே, நீ ஒரு கழுதையாகி அல்லற்படுவாயாக" எனச் சபித்து விட்டாள். சினம் குறையாத அவ்வந்தணனும் மேலும் வெகுண்டு. "குற்றம் உங்கள் பால் இருக்க என்னிடம் குற்றம் கண்டு கொடுஞ்சாபம் கொடுத்த பேதாய்! நீ ஓர் இழிகுலப் பெண்ணாகி ஏழ்மையால் வாடி அவலமுற்று ஒழிக" எனச் சபித்தான். வேதம் ஓதிய வாயால் கொடுத்த சாபமும், கற்புக்கரசி கண்ணீர்விட்டுக் கொடுத்த சாபமும் உடனேயே தத்தம் விளைவுகளைத் தந்துவிட்டன.

கடல்சூழ் உலகை ஆண்டு வந்த அரசன் காளைமாடாகினான். மன்னுயிர்த் துன்பம் கண்டு மனம் நெகிழாத உழவன் ஒருவன் அக்காளையைத் தனதாக்கிக் கொட்டிலில் அடைத்தான். நாள் முழுவதும் நன்கு வேலை வாங்கினான். ஓய்வென்பதே அறியாது உழன்று கொண்டிருந்தது அக்காளைமாடு. வறுமையைப் போக்கி வளமையைப் பெருக்கிக் கொள்ள வந்த அந்தணன் கழுதை ஆயினான். அக் கழுதையும் அழுக்குத் துணிகளை அணியணியாய் எடுத்துச் சென்று ஆற்றில் தோய்த்து, அழுக்கையும் கறையையும் போக்கும் சலவைத் தொழிலாளி ஒருவனிடம் அகப்பட்டு அல்லற் பட்டுக் கொண்டிருந்தது. அனிச்ச மலர்படினும் நெருஞ்சி முள்ளெனத் துடிக்கும் மென்மைமிகு பாதங்களை உடைய அரசியும் அநாதையாய் இழிகுலமகளாய், கண்டோர் யாவரும் 'சீ சீ' என இகழ ஒருவேளை உணவு கூட இல்லாது அவல வாழ்வு வாழ்ந்தாள். தினம் புல் அறுத்துக் கொண்டுபோய் விற்றுவரும் காசால் உயிர் வாழ்க்கை அமைந்தது.

ஒருநாள் அந்தக் காளை பகல் முழுவதும் கடுமையாக உழைத்தது. மாலையில் அந்த உழவன் அதனை அவிழ்த்து ஆற்றங்கரையில் மேயவிட்டான். அன்று கழுதைக்கும் கடுமையான வேலை. பலமுறை நகரத்திற்கும் ஆற்றங் கரைக்கும் மூட்டைகளைத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அன்றே அவ்விழிகுலப் பெண்ணுக்கும் உணவேதும் கிடைக்காமல் வருந்தினாள். தன்னால் முடிந்த வரை ஆற்றங்கரையில் புல்லறுத்துக் கட்டினாள். மாலை நெருங்கியது. அந்தக் காளையும் மிகவும் களைத்துப் பசியால் வாடியது; கழுதையும் அவ்வாறே, அந்நிலையில் திடீரென்று வானம் கறுத்தது; சூறாவளி வீசத் தொடங்கியது. காளையும், கழுதையும், அப்பெண்ணும் மழைக்கொதுங்க இடந்தேடி அங்குமிங்கும் ஓடினார்கள். ஆற்றங்கரையில் ஓர் அழகிய விநாயகர் கோயில் அமைந்திருந்தது. அக்கோயிலின் பிரகாரத்தின் ஒரு பக்கம் அப் பெண் தன் புல்கட்டை வைத்துவிட்டு மழைக்கொதுங்கினாள். அந்தக் காளையும் அவ்விடமே தேடி வந்தது; அக் கழுதையும் அவ்விடமே வந்தது. மூவருக்கும் பசி. புல்கட்டைக் கண்ட காளை அதனை இழுத்து உருவித் தின்னத் தொடங்கியது. இதனைக் கண்ட கழுதையும் மற்றொரு புறத்தில் புல்லைத் தின்னத் தொடங்கியது. அப் பெண்ணுக்கோ அற்புற்கட்டை விற்றாற்றான் சோறு. ஆகையால் அவள் சீறி அக் காளையை ஒரு குச்சியால் அடித்தாள். காளை விரைந்து பின்வாங்கிக் கழுதைமேல் மோதியது. நகர்ந்தோட இடமின்மையால் 'அம்மா' என அலறியது. காளை மோதியவுடன் கனன்ற கழுதை அதனைத் தன் பின்னங்கால்களால் பலங்கொண்ட மட்டும் உடைத்தது. காளைமாடு திரும்பி அப்பெண் நின்ற பக்கமாக ஓடி வந்தது. அப்பெண் அஞ்சி பிரகாரத்தைச் சுற்றி ஓடினாள். அந்தக் காளையும் ஓடியது; அந்தக் கழுதையும்

ஓடியது. ஒரு முறை சுற்றி வந்தவுடன் மீண்டும் அந்தக் காளை ஒருவாய் புல்லை உருவிக் கொண்டது. கழுதையும் அவ்வாறே செய்தது. அன்று விநாயக சதுர்த்தி. கோயிலினுள் அருமறை தெரிந்த அந்தணர்களும், மறைவழி வாழும் முனிவர்களும் விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து கொண்டிருந்தனர். வெளிப்பிரகாரத்தில் இவ்வாறான குழப்பமும் கூச்சலும் சத்தமும் அவர்களுடைய வழிபாட்டுக்கு இடையூறாய் இருந்தன. ஆகையால் அவர்கள் ஓர் ஏவலனை அனுப்பி அவைகளை விரட்டச் சொன்னார்கள். ஏவலன் விரட்ட விலங்கு இரண்டும் வெளிப்போந்தன. அப் பெண்ணோ அப் பிரகாரத்தில் ஒரு மூலையில் ஒடுங்கி நின்றாள். வெளியில் சூறைக்காற்றுச் சுழித்து வீசியது. போக்கிடமற்ற அவ்விரு விலங்குகளும் மீண்டு அப்பிரகாரத்துக்கே வந்தன. இப்போது அவை ஏதும் சத்தம் செய்யாமல் அமைதியாக பிரகாரத்தைச் சுற்றி வந்தன. மீண்டும் புல்கட்டிலிருந்து புல்லை உருவின. அப் பெண்ணோ மயங்கிக் கிடந்தாள்; பசிமயக்கம்; என் செய்வாள் பேதை? அப்போது சூறைக்காற்று மிகவும் வலுத்தது. புல்கட்டு பறந்தது; அதிலிருந்த சில அறுகம்புற்கள் ஆனைமுகத்து அண்ணலின் திருமுடிமீது சிதறியது. அந்தக் காளைமாட்டின் வாயிலிருந்து ஓர் அறுகம்புல் பறந்தது. அதுவும் உள்நோக்கிச் சென்று விநாயகரின் துதிக்கை மேல் தங்கியது. அந்தக் கழுதையின் வாயினின்றும் சிதறிய ஓர் அறுகம்புல் விநாயகரின் மேல் வீழ்ந்தது.

பூசனை செய்து கொண்டிருந்த பெரியோர்கள் இதனை கண்டனர். கண்ட இடங்களில் முளைத்துக் காலால் மிதிபட்ட அறுகம்புல், மாடு தின்று மிஞ்சிநின்ற அறுகம்புல், கழுதை கடித்துத் தேறிய அறுகம்புல் ஆதியும் அந்தமும் அற்ற எம்பெருமான்மேல் வந்து வீழ்ந்து எச்சிற்படுத்தி அசுத்தமாக்கியதை எண்ணி வருந்தினர். அதனால் மீண்டும் விநாயகருருவைச் சுத்தம் செய்து புனித நீராட்டிப் புண்யாஹவாசனம் செய்து பூசனை முடித்தனர். பூசை முடிந்ததற்பின் அவர்கள் கோயிலுக்கு வெளியே வந்தனர். அங்கு வெளிப்பிரகாரத்தில் காளையும், கழுதையும், கன்னிப்பெண்ணும் பசியாலும் களைப்பாலும் பரிதவித்து, சூறைக் காற்றால் தாக்கப்பட்டு உயிர்போகும் நிலையில் கிடந்தனர். புயலாலும் மழையாலும் இருக்க இடமின்றிப் பிரகாரத்தை அவர்கள் சுற்றிச்சுற்றி வந்ததைப் பிரக்ஷிணம் செய்ததாகவும் அவர்கள் மெய்பட்டு காற்றில் பறந்து சென்று தலையிலும் தும்பிக்கையிலும், தாளிலும் அறுகு வீழ்ந்ததை அறுகால் செய்த அர்ச்சனையாகவும் அறு கெச்சில் தீர்த்த அந்தணாளர்கள் செய்த திருமுழுக்கை அவர்களே செய்த அபிஷேகமாகவும் கொண்ட விநாயகர் அம் மூவரையும் தம் உலகுக்கு அழைத்து வருமாறு தம் கணங்களுக்கு கட்டளையிட்டார். அவ்வாறே தேவகணங்கள் அம் மூவருக்கும் தனித்தனியே விமானங்களைக் கொணர்ந்து அவற்றில் அவர்களை ஏற்றிக் கொண்டு புறப்படத் தயாராயினர். அதனைக் கண்ட அருந்தவ முனிவர்களும் அருமறை போற்றிய அந்தணாளர்களும், பேரருள்மிக்க பெரியோர்களும் அத் தேவகணத்தாரை நோக்கி. "அறிவற்ற விலங்குகளாகிய காளையும், கழுதையும் கணேசப் பெருமானிடம் பக்தி கொண்டவையல்ல; பெருமானை வணங்கவும் இல்லை. அப்பெண்ணோ பசிக்கொடுமை கொண்டவள். பக்தி மேலிட்டால் பரமனைப்பாடிப்போற்றியவள் அல்லள். அங்ஙனமிருக்க அம்மூவருக்கும் முத்தி கிடைக்கும் பாக்கியம் ஏற்பட்டதெவ்வாறு?" என வினவினர்.

அத்தேவகணத்தாரும் அவர்களை நோக்கி, "இழிகுலப் பெண்ணாயினும் பகுத்தறிவற்ற விலங்காயினும் விநாயக சதுர்த்தியன்று விநாயகர் கோயிலை பிரதக்ஷிணம் செய்தார்கள். அறிந்தோ அறியாமலோ செய்த பிரதக்ஷிணத்தாலும், அவர்கள் மெய்ப்பட்ட அறுகம்புல் அற்புதன் உடலத்தை அலங்கரித்ததாலும் அவர்கள் தேவருடல் பெற்றுத் தேஜோ மயமாகி தேவர் விமானமேறி முக்திப்பேற்றை அடைகிறார்கள். அறுகம்புல் அர்ச்சனையே அவர்களுக்கு அத்தகைய பெருமையை அளிக்கிறது" என்று உரைத்தார்கள். உடனே அவ்வந்தணர்களும் முனிவர்களும், "அறுகம்புல் அர்ச்சனைக்கு அத்தனை மகத்துவம் உள்ளதை இது வரை நாங்கள் உணரவே இல்லையே. அறுகம்புல் எவ்வாறு விநாயகருக்கு உகந்த அர்ச்சனைப் பொருளாயிற்று? அதனை விளக்கமாக எங்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்" என வேண்டினர். அத் தேவகணத்தினரும் அறுகம்புல்லின் அருமை பெருமைகளை கூறத் தொடங்கினர். அவர்கள் கூறிய வரலாறுகளை நான்முகன் பிதுர்த்தேவனுக்குக் கூறினார்.

தாபரம் என்றோர் அழகிய சிற்றூர் முன்னொரு காலத்தில் புகழ்பெற்றிருந்தது. அந்நகரை அடுத்துச் சலசலத்தோடும் தெள்ளிய ஓடைக் கரையில் கவுண்டின்ய முனிவர் எளிமையான ஆசிரமம் ஒன்று அமைத்துக் கொண்டு, தம் மனைவியுடன் தவம் புரிந்து கொண்டிருந்தார். அவர் தினந்தோறும் பதினாயிரம் அறுகம் புல் கொய்து கொண்டு வந்து விநாயகமூர்த்திக்கு அர்ச்சனை புரிந்து வந்தார். கொஞ்சமும் சோம்பலின்றி யோகம் புரிவது போன்ற சிரத்தையுடன் தினமும் தன் கணவர் செய்துவரும் அறுகு அர்ச்சனையைக் கண்குளிரக் கண்டு உளமகிழ்ந்த அவருடைய மனைவி ஒரு நாள் அவரை நோக்கி, ஓடைக் கரையில் எத்தனையோ மணமிக்க மலர்கள் இருக்க, வாசனை மிக்க புத்தம்புதிய பத்திரங்கள் இருக்க அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, மனிதர்களின் காலடியிலும் விலங்குகளின் காலடியிலும் மிதிப்பட்டு இழந்த நிலையில் தரைமீது படர்ந்திருக்கும் அறுகைக் கொண்டு தாங்கள் விநாயக பூஜையைச் செய்வது யாது காரணம் பற்றி என்பதை எனக்கு விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும்" என்று வேண்டி நின்றாள். தினமும் அறுகு எடுத்துக் கொண்டு வருதல் முதல், பூஜைக்கு வேண்டிய பல முயற்சிகளிலும் பங்கு கொண்டு பணிபுரிந்து வந்த தன் மனைவீ இவ்வாறு கேட்டதும் அம்முனிவர் அம்மங்கையை நோக்கி, "என் உயிருக்கு உயிராய் விளங்கும் தேவியே! அறுகால் அர்ச்சனை செய்வது ஓர் இரகசியம். இந்நாள் உலகத்தோர் இதனை அறிந்ததில்லை. இன்று உன் மூலம் இவ்வுலகத்தவர் இவ்வரிய இரகசியத்தை அறிந்து பேறுபெறல் வேண்டும் என்ற கணேசமூர்த்தியின் கருணையே உன்னை இன்று இவ்வாறு கேட்கத் தூண்டியிருக்க வேண்டும். அதனைச் சொல்கிறேன். சிரத்தையுடன் கேட்பாயாக" எனக் கூறி பின்வரும் வரலாற்றை விளம்பினார்.

ஆயிரக்கணக்கான கல்பங்களுக்கு முன்னால் ஒரு சமயம் ஒரு திருவிழா நாளில் யமதருமன் திருவோலக்கத்தில் அமர்ந்திருந்தான். சபையில் சித்திரகுப்தன் முதலான ஞானிகளும், பல தேவர்களும், முனிவர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது சபையில் தேவ மாதர்கள் நடனமாடினர். அவ்வாறு நடனம் ஆடியவர்களில் திலோத்தமையும் ஒருத்தி. அவள் அழகைப் புகழ்ந்து எடுத்துச் சொல்லுதல் மிகவும் அரிய செயல். ஒரு சமயம் பிரம்மதேவன் மிகச் சிறந்த அழகுள்ள ஒரு பெண்ணை படைக்க எண்ணினான். அதற்காக உலகத்தில் உள்ள ஒவ்வொரு அழகான பொருளிலிருந்தும் ஓர் எள்ளளவு அழகுத் தன்மையைப் பிரித்தெடுத்து ஒன்றாக்கித் திலோத்தமையை உருவாக்கினான். அத்தகைய பேரழகு வாய்ந்த திலோத்தமை நடனமாடிக் கொண்டிருந்தபோது வைத்தவிழி வாங்காமல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான் யமதருமன். ஆட்ட வேகம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது காற்று கொஞ்சம் வீசி அடித்தது. திலோத்தமையின் மேலாடை நழுவிப் பறந்து விட்டது. அவள் மேலழகை முற்று நோக்கிய யமதருமன் பெருவிரசம் கொண்டான். திலோத்தமை நாணமுற்றுச் சபையைவிட்டு அகன்றாள்.



# விநாயகரின் 32 தோற்றங்கள்

# VARIED FORMS OF VINAYAGAR

## பால கணபதி
## Bala Ganapathy



வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம்
இவற்றை வைத்துக் கொண்டிருப்பவரும்,
பால சூரியனைப் போன்ற சரீர காந்தியை
உடையவருமான பால கணபதி.

## தருண கணபதி
## Tharuna Ganapathy



கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம்,
நாவல்பழம், தன்னுடைய ஒரு தந்தம், நெற்கதிர்.
கரும்பு வைத்துக் கொண்டிருப்பவர்
தருண கணபதி.

## பக்தி கணபதி
## Bakthi Ganapathy



தேங்காய், மாம்பழம், வாழைப்பழம்,
பாயசத்துடன் சரத்கால சந்திரனின்
வெண்ணிற சரீரத்தையுடைய
பக்தி கணபதி

## வீர கணபதி
## Veera Ganapathy



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்ராயுதம்,
கத்தி, கட்வாங்கம், முத்கரம் கதை, அங்குசம்,
நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, த்வஜம் தரித்திருக்கும்
வீர கணபதி.

## சக்தி கணபதி
## Sakthi Ganapathy



சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவராக
இருப்பவரும், பாசம், அங்குசம் இவற்றை வைத்துக்
கொண்டிருப்பவருமான பயத்தைப் போக்கும்
சக்தி கணபதி.

## த்விஜ கணபதி
## Thvija Ganapathy



புத்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் உடையவரும், கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில் அணிந்திருப்பவரும், சந்திரனின் வெண்ணிறமுடைய வருமான நான்முக த்விஜ கணபதி.

## சித்தி கணபதி
## Sithi Ganapathy



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவருமான சித்தி கணபதி.

## உச்சிஷ்ட கணபதி
## Uchishta Ganapathy



இவரை "விஜய கணபதி" என்று ஸ்ரீ தத்துவ நிதி கூறுகிறது. இவருக்கு மற்றொரு தோற்றமும் உண்டு.

## ஷிப்ர கணபதி
## Shipra Ganapathy



தந்தம், கற்பக விருட்சத்தின் கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் இவற்றைத் தரித்துக் கொண்டிருப்பவர். அழகான சிவந்த சரீர காந்தியையுடைய ஷிப்ர கணபதி.

## விக்ன கணபதி
## Vigna Ganapathy



சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்து போல சுருட்டிய மாலை ஆகியவற்றுடன் பொன்மேனி ரூபமாக விளங்கும் விக்ன கணபதி.

## ஹேரம்ப கணபதி
## Aeramba Ganapathy



அபய வரத முத்திரைகளுடன் பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவற்றைத் தரித்துக் கொண்டு சிம்ம வாகனத்தில் ஐம் முகங்களுடனிருப்பவர் ஹேரம்ப கணபதி.

## லக்ஷ்மி கணபதி
## Lakshmi Ganapathy



மிகவும் பிரகாசிக்கின்ற ஜோதியாகிய அமிருதப் பிரவாகத்தையுடையவரும், நீலோத்பலத்தைக் கையில் கொண்டவரும், இரு தேவிகளை இருபக்கத்திலும் கொண்டவரும், வரதஹஸ்தத்தோடு இருப்பவரும் லக்ஷ்மி கணபதி.

## துர்கா கணபதி
## Durga Ganapathy



எட்டுக்கை, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம், பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றைக் கொண்டவர் பொன்னிற மேனியர்.

## சங்கடஹர கணபதி
## Sankatahara Ganapathy



இளஞ்சூரியனின் நிறத்தோடு. இடது தொடையில் அம்மையை உடையவர். நீலநிற மேலாடை அணிந்தவர்.

## மகா கணபதி
## Maha Ganapathy



மாதுளை கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம்,
நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றை ஏந்தியவர்.
செங்கதிர் நிறத்தவர். முக்கண்ணர். பிறை முடியர்.

## விஜய கணபதி
## Vijaya Ganapathy



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்
இவற்றைத் தரித்தவர்.
பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

## நிருத்த கணபதி
## Nirutha Ganapathy



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி ஆகியவற்றை
ஏந்திய, கற்பக விருட்சத்தினடியில் இருக்கும்
நர்த்தன கணபதி.
வேறு தியானத்தில் ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.

## ஊர்த்துவ கணபதி
## Oorthuva Ganapathy



செங்கழுநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ,
கரும்பு வில், அம்பு, தந்தம் இவற்றைக்
கரங்களில் கொண்டவரும், தங்க நிறம்
கொண்டவருமான ஊர்த்துவ கணபதி.

## ஏகாட்சர கணபதி
## Yegatchara Ganapathy



செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர்,
பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர்,
மாதுளை பாசம், அங்குசம், வரதம் இவற்றைத் தாங்கியவர்.

## வர கணபதி
## Vara Ganapathy



செவ்வண்ணர். யானைமுகத்தவர். முக்கண்ணர்.
பிறை முடியர். பாசம், அங்குசம் தரித்தவர்.
தேன் நிறைந்த கபால பாத்திரத்தை ஏந்தியவர்.

## திரயாக்ஷ்ர கணபதி
## Threyashra Ganapathy



பொன்னிறமானவர். நான்கு கரத்தவர்.
பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்
இவற்றைத் தாங்கியவர்.
துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

## க்ஷிப்ரபிரசாத கணபதி
## Kshipraprasade Ganapathy



பாசம், அங்குசம், கற்பகக் கொடியின்
சுவைதரும் மாதுளம்பழம், துதிக்கையில்
தாமரை மொட்டு இவற்றைத் தரித்தவர்.
பேழை வயிற்றை உடையவர்.

## ஹரித்திரா கணபதி
## Harithira Ganapathy



மஞ்சள் நிறமானவர். நான்கு கரத்தவர்.
அவற்றில் பாசம், அங்குசம், தந்தம்,
மோதகம் தரித்திருப்பவர்.
பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

## ஏகதந்த கணபதி
## Yegandantha Ganapathy



பேழை வயிற்றுடன் நீல மேனியர்.
கோடரி, அட்சமாலை, லட்டு,
தந்தம் இவற்றை உடையவர்.

## சிருஷ்டி கணபதி
## Shrishti Ganapathy



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக்
கரங்களில் ஏந்தியவர்.
பெருச்சாளி வாகனத்தையுடையவர்.
சிவந்த திருமேனியர்.

## உத்தண்ட கணபதி
## Uthanda Ganapathy



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம்,
கரும்பு வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை
இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர்.
சிவந்த மேனியையுடையவர்.

## ரணமோசன கணபதி
## Renamosana Ganapathy



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம்
இவற்றைத் தரித்தவர்.
வெண்பளிங்கு நிற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

## துண்டி கணபதி
## Dundi Ganapathy



அட்சமாலை, கோடரி, ரத்ன கலசம்,
தந்தம் இவற்றை ஏந்தியவர்.

## துவிமுக கணபதி
## Thuvimuga Ganapathy



தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம்
இவற்றைக் கையில் ஏந்தியவர். மயில் நீல மேனியர்.
செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர்.

## மும்முக கணபதி
## Mummuga Ganapathy



வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம்
இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம்,
அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர்.

## சிங்க கணபதி
## Singa Ganapathy



வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம்
இவற்றை வலது கைகளில் தாங்கியவர்.
தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம்
இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிற மேனியர்.

## யோக கணபதி
## Yoga Ganapathy



யோக நிலையில், யோக பட்டம் தரித்து,
இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து,
பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு
இவற்றை ஏந்தி இருப்பவர்.

விரகதாபத்தோடு அச்சபையில் அமரமாட்டாத யமன் விருட்டென்று எழுந்து தன் அந்தப்புர முன்வாயிலை அடைந்தபோதே அவன் வீரியம் வெளிப்பட்டது. வெளிப்பட்ட மாத்திரத்தில் அதனின்று ஒரு அசுரன் தோன்றினான். அவன் நெடிதுயர்ந்த வடிவமும், நெருப்பெனப் பொங்கும் செவ்வுருவமும், தீக்கதிர்களென நீண்டு விளங்கும் பங்கியும், மலைகளை எடுத்துப் பந்தாடும் வலிமையும், யானைகளைச் சிற்றுண்டி எனக் கருதும் பசியும், கொடுங்கை எனத் தோன்றும் கோரப் பற்களும், குகையென விளங்கும் வாயும், இடியும் இடிந்து மடங்கும் குரலோசையும் கொண்டிருந்தான். தோன்றிய பொழுதே கொடுங்கோபம் கொப்பளிக்கும் முகம் காட்டி யமனை நோக்கினான். காலனும் அந்நோக்கை எதிர்நோக்க இயலாது கதி கலங்கினான். அச்சம் மிகுதலால் அந்தப்புரக்கதவைச் சாத்தித் தாளிட்டான். 'மலை முழுங்கி மஹாதேவனுக்குக் கதவு ஓர் அப்பளம்' என்பது போல் கோபக்கனல் வீசிக் கொடுமை செய்ய முனைந்திருக்கும் அவ்வசுரனுக்குக் கதவை உடைத்து உள்ளே புகுதல் ஓர் அரிய செயலன்று. ஆயினும் தான் தோன்றக் காரணமாயிருந்த ஜனகன் என்பதால் கொஞ்சம் தயங்கி யமனுக்கு இடையூறு ஏதும் செய்யாமல் திரும்பினான். வெகுதூரம் கனல் வீசித் தீப்பிழம்பாய் நிற்கும் அவ்வசுரன் அனலானசுரன் எனப்பட்டான். யமனுலகின்றும் புறப்பட்ட அவன் முதலில் பூவுலகை அடைந்தான். எதிரில் கண்ட பொருள்களை எல்லாம் அழித்தான்; உயிர்களை எல்லாம் உண்டான். அங்கிருந்து தாவி வானுலகு நோக்கிச் சென்றான். வானவர்களை அழித்துப் புசிக்க ஆர்வம் கொண்டான். அவன் வருகையைக் கேள்வியுற்ற வானவர்கள் அஞ்சி நடுங்கினார்கள். தம்மால் அவனை வெல்ல முடியாதென்பதை உணர்ந்து அமராவதியை நீத்து வைகுண்டத்தை அடைந்தார்கள்.

அங்கே நாராயண மூர்த்தியைச் சரணா கதிபடைந்து அனலாசுரனிடமிருந்து தப்ப அருள்புரிய வேண்டினார்கள். நாராயண மூர்த்தி அனலாசுரனின் தோற்றத்தையும் வலிமையையும் உணர்ந்தார். அவனை வென்றழித்தல் தம்மால் இயலாத காரியம் எனக் கண்டுகொண்டார். ஆகவே அனைவரையும் நோக்கி, 'ஆதிப்பரம் பொருளாய் அடியவற் கெளியராய் அதர்மத்தை அழித்து தர்மத்தை ரக்ஷிப்பவராய் விளங்கும் விநாயகப் பெருமானை அல்லால் வேறொருவராலும் அவனை அழித்தல் இயலாத செயல். ஆகையால் நாம் எல்லோரும் இணைந்து விநாயகப் பெருமானின் பாதமிரண்டையும் போற்றி சரண்புக வேண்டும்.' எனக் கூறினார். யாவரும் அவ்வாறே விநாயகரைத் துதித்தனர். வேண்டிய அடியார்கட்கு வேண்டியவாறே அருள்புரியும் ஆனைமுகத்து விநாயகர் அங்கே ஒரு மாணி உருவாய்த் தோன்றினார் தோற்றத் தைக் கண்டவுடனே, விநாயகப் பெருமானே அவ்வுருவில் வந்துள்ளார் என்பதுணர்ந்த தேவர்களும், நாராயண மூர்த்தியும் அவரிரு பாதம் பணிந்து, அனலாசுரன் வலிமையையும் கொடுமையையும் கூறினர். அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே வானிற் பெருத்த இடிக்குரலொன்று, "அண்டமெல்லாம் தேடியும் அகப்படாமல் ஒளிந்து கொண்ட தேவர்களே, ஒருசேர இப்போது என்னிடம் அகப்பட்டீர்கள். அனைவரையும் ஒட்டுமொத்தமாக உண்பேன் இப்போதே!" என்று கர்ஜித்தது. ஆம்! அது அனலாசுரனின் குரல்தான். அண்டர்கள் யாவரும் நடுங்கினர்; முனிவர்கள் மயங்கினர்; விநாயகப் பெருமானின் பின்னே சென்று அஞ்சி நின்றனர். அவர்களுக்கு அபயமளித்த எம்பிரான் இனிய பேருருக் கொண்டு அவ்வனலாசுரன் முன்பே நின்றார். தூரத்தில் அவன் நின்றபோதே வெப்பக் கதிர் வீசியது. யாவரும் அவ்வெப்பத்தைத் தாங்க முடியாமல் தத்தளித்தனர். அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்தால் அனைவரும் பஸ்மமாவது நிச்சயம் என எண்ணினர்.

அப்போது களிற்றுமுகக் கணபதி தம் நீண்ட துதிக்கையை நீட்டி ஆரவாரம் செய்து கொண்டு வந்த அனலாசுரனை வளைத்து பிடித்து அரைநொடியில் விழுங்கிவிட்டார். ஐயனின் வியத்தகு செயலைக் கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அணுகவும் முடியாத அனலாசுரனை ஐயன் வயிற்றில் அடக்கினார். அண்டமெல்லம் நடுக்க வந்த அனலாசுரன் தேவரும் முனிவரும் விநாயகர் அடி போற்றிப் பணிந்தனர். அனலாசுரன் அழிந்தான் என்று மகிழ்ந்தனர். ஆனால் ஒன்றை மறந்தனர்.

அண்டமெல்லாம் தானேயாய் அணுவெல்லாம் தானேயாய் சராசரப் பொருள்கள் அனைத்தும் தானேயாய் தன்னையன்றி வேறொன்றில்லையாய் நிற்கும் பராபரப்பொருள் கணேசமூர்த்தி என்பதை மறந்தனர். அக் கணேசமூர்த்தியின் அகட்டினுள் அனலாசுரன் நுழைந்தவுடன் அவர் வயிறு முழுவதும் கொதித்தது. அவ்வாறே எல்லாத் தேவர்களின் வயிறுகளிலும் வெப்பம் எழுந்து வாட்டியது. முனிவர்களும் வயிற்றினுள் வெப்பம் தாங்காமல் வேதனை உற்றனர். உலகத்தில் உயிரினங்கள் யாவும் வயிற்றுள் தோன்றிய வெப்பமிகுதியால் வருந்தினர். ஏது செய்தால் இவ்வெப்பம் தீருமென்று இமையவர்கள் ஆய்ந்தனர். இந்திரன் சந்திரனை நோக்கி விநாயகக் கடவுளின் முடிமீது அமிர்தத்தை வர்ஷிக்கும்படி ஆணையிட்டடான். சந்திரனும் அமிர்தத்தை வர்ஷித்தான். வெப்பம் குறையவில்லை. கணேசப் பெருமானின் வயிற்று வெப்பம் தணிந்தால்தான் அண்டசராசரங்களிலும் வாழும் உயிர்களின் வயிறு வெப்பம் தணியும் என்பதை யாவரும் உணந்தனர். கிரியா சக்தியும் ஞான சக்தியும் விநாயகப் பெருமானின் இருபாலும் நின்று இதம் செய்ய முயன்றனர். திருமாலோ தண்ணென்ற தாமரைப் பூவால் தந்திமுகம் உடல் முழுவதையும் தடவிக் கொடுத்தார். குளிர்ச்சி மிக்க உடல் வாய்ந்த அரவப் பணிகளை எல்லாம் அரனார் ஐயம் மீது அணிவித்தார். எதனை செய்தும் வெப்பம் நீங்கவில்லை. கூடியிருந்த முனிவர்கள் வெப்பம் நீங்க வழிநாடினர். நெடிய ஆய்வுக்குப் பின் ஒவ்வொரு முனிவரும் இருபத்தொரு அறுகம்புல் எடுத்து வந்து ஐயனின் உச்சிமுதல் உள்ளங்கால் வரை போர்த்தினர். அங்கு வந்து கூடியிருந்த முனிவரர் எண்பதாயிரம் பேர். அத்தனை பேரும் அறுகம்புல்லால் எம்பெருமான் திருவுருவை அணிசெய்து மறைந்தனர். அறுகம்புல்லின் குளிர்ச்சி அனலாசுரனின் வெப்பத்தை அடக்கியது. ஐயன் அகடு குளிர்ந்தது. அனைத்து உயிர்களின் வயிறும் குளிர்ந்தது. அப்போது களிற்றுமுகக் கணபதி யாவரையும் முகமலர்ந்து நோக்கி, "அன்பர்கள் சொரிந்த அறுகம்புல்லே அதிகமான வெப்பத்தை அடக்கியது. அதுபோல் கழிதற்கரிய பாவங்களும் அறுகம்புல் அர்ச்சனையால் கழியும். எத்தகைய மணமலரிட்டு எம்மை அர்ச்சித்தாலும் அறுகம்புல் இன்றிச் செய்யும் அர்ச்சனை வீணேயாகும். ஏராளமான அறுகம்புல் எடுத்துவந்து வழிபாடு செய்ய இயலாதவர் இருபத்தொரு அறுகம்புல்லாவது எடுத்து வந்து அர்ச்சனை புரிய வேண்டும். அறுகுக்கு நிகரான அலரோ தளிரோ இல்லை" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

விநாயகப் பெருமான் நின்ற அவ்விடத்தில் தேவர்கள் ஒரு கோயில் எழுப்பினர். ஐயனின் திருவுருவைக் கருவறையில் பிரதிஷ்டை செய்து காலானலப் பிரசமனர் என்று நாமமிட்டு அனுதினமும் வழிபாடு செய்து வரலாயினர். அறுகம்புல் அர்ச்சனை அளவிலாப் பயன்தரும் என்பதை அன்றுதான் அமரரும் முனிவரும் உணர்ந்தனர்.

**(நன்றி : பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக மலர் – 2013)**

# ஸ்ரீ கணேசாஷ்டகம்



இச் சுலோகங்கள் புராணத்தின் ஒரு பகுதியாகிய உபாசனா காண்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றின் தமிழ் வடிவம்.

**யதோSநந்த சக்தேரநந்தாச்ச ஜீவா:**
**யதோ நிர்க்குணதப் பிரமேயா குணாஸ்தே I**
**யதோ பாதி ஸர்வம் த்ரிதா பேத பின்னம்**
**ஸதா தம் தம் கணேசம் நமாமோ பஜாம : II**

1. முடிவற்ற சக்தி படைத்த எவரிடமிருந்து கணக்கற்ற ஜீவன்கள் உண்டாகின்றனவோ, நிர்க்குணமான எவரைப் பற்றி எண்ணற்ற தெய்வீகக் குணங்கள் சொல்லப் பெறுகின்றனவோ, அந்த உலகில் மூன்று காலங்கள், மூன்று நிலைகள், மூன்று குணங்கள் போன்று மூன்று வகையாக அமைந்தவை எல்லாம் எவரிடம் விளங்குகின்றனவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதச்சாவிராஸீத் ஜகத் ஸர்வமேதத் ஸர்மேதத்**
**ததாப்ஜாஸநோ விச்வகோ விச்வ கோப்தா I**
**ததேந்த்ராதயோ தேவஸங்கா மனுஷ்யா :**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம : II**

2. எவரிடமிருந்து இந்த உலகங்களெல்லாம் உண்டாயிற்றோ, பிரம்மா விஷ்ணு சிவன் ஆகியோரும், இது போலவே இந்திரன் முதலிய தேவர்கள் கூட்டமும், மனிதர்கள் எல்லோரும் தோன்றினார்களோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதோ வஹ்நி பானு பவோ பூர் ஜலம் ச**
**யத : ஸாகராச்ச சந்த்ரமா வ்யோம வாயு : I**
**யத : ஸ்தாவரா ஜங்கமா விருக்ஷஸங்கா :**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம: II**

3. எவரிடமிருந்து நெருப்பு சூரியன் பூமி ஜலம் ஆகியவையும், சமுத்திரம் சந்திரன் ஆகாயம் காற்று ஆகியவையும், அசைவன அசையாதன மரங்களின் கூட்டம் போன்றவையும் தோன்றினவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதோ தானவா: கின்னரா: யக்ஷஸங்கா:**
**யதச் சாரணா: வாரணா: ச்வாபதாச்ச I**
**யத: பக்ஷிகீடா: யதோ வீருதச்ச**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம: II**

4. எவரிடமிருந்து அசுரர்கள், கின்னரர்கள், யக்ஷ கூட்டங்கள், சாரணர்கள், யானைகள் மற்ற துஷ்ட மிருகங்கள், பறவைகள், புழுக்கள், செடி கொடிகள் ஆகியவைகளெல்லாம் தோன்றினவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதோ புத்திரஜ்ஞான நாசோ முமுக்ஷோ:**
**யத: ஸம்பதோ பக்த ஸத்தோஷிகா: ஸ்யு: I**
**யதோ விக்ன நாசோ யத: கார்யஸித்தி:**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம: II**

5. மோக்ஷத்தை விரும்புவர்களுக்கு எவரால் அஞ்ஞானம் அறவே ஒழிந்து போகிறதோ, எவரிடமிருந்து பக்தர்கள் செல்வம் பெற்று மகிழ்ச்சி அடைகிறார்களோ, எவரால் தடைகள் நீங்குகின்றனவோ, எவரால் நினைத்த காரியங்கள் கைகூடுகின்றனவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யத: புத்ர ஸம்பத் யதோ வாஞ்சிதார்த்த:**
**யதோSபக்த விக்நாஸ் ததாSநேக ரூபா: I**
**யத: சோகமோஹௌ யத: காம ஏவ**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம : II**

6. எவரிடமிருந்து மக்கட் செல்வமும் மற்றும் விரும்பிய பொருள்களெல்லாமும் கிடைக்கின்றனவோ, எவரால் பக்தி இல்லாதவர்களுக்குப் பல விதமான இடையூறுகளும் சோகம் மோகம் ஆசை போன்றவையும் உண்டாகின்றனவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதோSநந்த சக்தி: ஸ சேஷோ பபூவ**
**தராதாரணேSநேகரூபே ச சக்த: I**
**யதோSநேகதா ஸர்வ லோகா ஹி நாதா**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம: II**

7. எவரிடமிருந்து ஆதிசேஷன் தோன்றி எல்லையற்ற சக்தி பெற்று பல வடிவங்களில் பூமியைத் தாங்கும் வல்லமை உடையவராக ஆனாரோ, எவரிடமிருந்து பல சமயங்களில் உலகங்கள் பலவாக உண்டாயினவோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**யதோ வேத வாசோ விகண்டா மநோபி:**
**ஸதா நேதி நேதீதி யத்தா க்ருணந்தி I**
**பரப்ரஹ்ம ரூபம சிதாநந்த பூதம்**
**ஸதா தம் கணேசம் நமாமோ பஜாம: II**

8. எவரிடமிருந்து மனதிற்கு எட்டாத வேத வாக்கியங்கள் தோன்றினவோ, எவரைப் பற்றி நினைக்கும் போது, இது அல்ல, இது அல்ல' என்று காணப்படும் பொருள்களெல்லாம் தவிர்க்கப்படுகின்றனவோ, எவர் சைதன்ய மயமும் ஆனந்த மயமும் ஆன பரம்பிரம்ம ரூபமாக இருக்கிறாரோ, அந்த கணேசரை எப்போதும் வணங்குகிறோம். பூஜிக்கிறோம்.

**(நன்றி : பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக மலர் – 2013)**

# தைத்திங்களின் மகத்துவம்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

## தையின் சிறப்பு

"தைபிறந்தால் வழிபிறக்கும்" என்பது முதுமொழி. நம்முன்னோர் தைப்பிறப்பிற்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதையே மேற்போந்த முதுமொழி சுட்டிநிற்கின்றது. ஜோதிட ரீதியில் சூரியனின் உத்தராயண செல்கை தைப்பிறப்புடன் ஆரம்பமாவதால் சூரியனின் அருளினால் உலகத்திற்கு வாழ்வுண்டு. வாழ்வில் வளமுண்டு என்ற நோக்கிலேயே முதுமொழி தோன்றியிருக்க வேண்டும்.

## இந்துசமயத்தின் சிறப்பு

பரமாத்மாவாகிய கடவுளுக்கும் ஜீவாத்மாவாகிய மனிதனுக்கும் உள்ள நெருங்கிய உறவினை அறிவியல் நோக்கில் ஆன்மீக வழியில் எடுத்துக்காட்டி மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைப்பதே சமயம் ஆகும். சமயம் என்ற ஒளிமூலமே வாழ்வு பிரகாசம் பெறுகின்றது. எனவே சமயவழியிலன்றி வாழ்க்கையை அதன் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாது. உலகில் மிகப் புராதனமானதும் மிகவும் நவீனமானதுமாகவும் உள்ளதாக விளங்குவது இந்துமதம். முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் உரியதான தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் 'சநாதன தருமம்' என்ற பெயர் உண்டு. இத்தகைய சமயம் காலங்களூடாக காலத்தை ஒட்டி மனிதன் ஆற்றவேண்டிய கடமைகளை எடுத்துக்கூறி அவற்றை ஆற்றுவதன் மூலம் மனிதன் மனமாசு நீங்கி ஒளிபெற்று தெய்வீக நிலையை அடைய முடியும் என்று கூறுகின்றது.

## இயற்கையும் சூரிய வழிபாடும்

இயற்கை காலத்தினூடாகச் செயற்படுவதையும் அக்கால மாற்றங்களூடாக இயற்கை மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் கொண்டமைந்த செயற்பாடுகள் விழாக்களாக இந்து சமயத்தவரால் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாக்களின் பின்னே பொதிந்துள்ள மிகமுக்கியமான உன்னதமான கருத்து என்னவென்றால் நாம் இயற்கையுடன் ஒருங்கிணைந்து வாழவேண்டும் என்பதும், இயற்கையை அழித்து அதை நமக்கு அடிமையாக மாற்றக்கூடாது என்பதும், இயற்கை கால மாற்றத்தினூடாக செயற்பட்டு நமது வாழ்வுக்கு வளம் சேர்ப்பதை உணர்ந்து அதற்கும் காலத்திற்கும் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்பதாகும்.

இவ்வகையில் இயற்கைப் பொருளாகிய சூரியனுக்கும் பூமிக்கும் எருதுகளுக்கும் நன்றி பாராட்டும் நாட்களாகத் தைப்பொங்கல் விழா அமைந்துள்ளது. தைமாதப் பிறப்பன்று சூரியன் தனுராசியில் இருந்து மகரராசிக்குப் பிரவேசிக்கும் தைப்பிறப்பை மகரசங்கிராந்தி எனவும் அழைக்கப்படும். ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்குப் பிரவேசிக்கும் சூரியனை வரவேற்று வாழ்த்து வணங்கிச் செய்யப்படும் வழிபாடே சூரிய பொங்கல் எனப்படும். சூரியனால் உலகம் ஒளிபெறுகின்றது. இதனால் வாழ்வு வளம் பெறுகின்றது. அத்தகு சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அமைந்ததே சூரிய பொங்கல்.

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு*

என்பது திருக்குறள். செய்நன்றி மறவாது அதனை நினைத்து நமக்கு உதவுகின்ற அனைத்தையும் நாம் வழிபட வேண்டியது நமது கடமையென இந்துமத சாத்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. செய்நன்றியை நாம் மனப்பூர்வமாக நினைக்கும்போது நமது உள்ளம் மகிழ்ச்சி பெறுகின்றது. அந்நிலையில் நாம் தெய்வீகத்தை அனுபவிக்க முடியும். வழிபாடென்பது அருள்வழிப்படுதலாகும். நன்றியுணர்விலே அன்பு பொங்க இடம்பெறும் நிகழ்வே உண்மை வழிபாடாகும். கைம்மாறு கருதாத சூரியனின் பேருபகாரத்தை நினைத்து கொண்டாடுவதே சூரியப் பொங்கல் விழாவாகும். காலை பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து முற்றத்தைச் சாணியால் மெழுகிக் கோலமிட்டுக் கும்பம் வைத்து சூரியன் உதயமாகும் நேரம் பொங்கற் பானையிலிருந்து பால்பொங்கிவர "பொங்கலோ பொங்கல்" என்று மக்கள் ஆனந்தமாகச் சூரியனை வணங்கி வரவேற்று விழாவாகக் கொண்டாடி வரவேற்கும் நாளே சூரிய பொங்கல் நாள். இந்நாள் பல்வேறு வகையான பட்சணங்களைச் சூரியனுக்குப் படைத்து குடும்பத்தினருடன் மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்று மணிவாசகர் கூறுவது இங்கு நோக்கப்பட வேண்டியது. நமது உள்ளத்தில் உண்மை அன்பிருக்கும் போதே நாம் இறைவனுடன் தொடர்புகொள்ள முடியும். "பக்தி வலையிற்படுவோன் காண்க" என்ற மணிவாசகரின் மேற்போந்த தொடரும் இதை அரண் செய்கின்றது. இத்தகைய பக்தி அனுபவம் பெறும் செயற்பாடுகளே நம்முன்னோர்களாகிய சான்றோர்களால் உருவாக்கப்பட்ட பண்டிகைகளாகும். உள்ளம் அன்பிற் பொங்கும் போதே மனிதனால் இதயபூர்வமாகக் கொண்டாட முடியும். இதயபூர்வமாகக் குடும்பத்தினர் அயலவர் உறவினர், ஊரவரெல்லாம் கூடி மகிழும் போது விழா இடம்பெறுகின்றது.

கண்கண்ட தெய்வம் சூரியன் - மனிதர் விலங்குகள், புல், பூண்டுகள் யாவும் சூரியனொளியின்

வெப்பத்தினாற்றான் உயிர்பெறுகின்றன, வாழ்கின்றன. சூரிய வணக்கம்தான் ஆதியில் மனிதன் அறிந்த வழிபாடெனக் கூறப்படுகின்றது.

இந்துக்களின் மூலநூலான வேதங்களில் இயற்கை சக்தியான சூரியன் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சூரியனைப் பரம்பொருளாகச் சூரியபுராணம் கூறுகின்றது. இதில் துவாதச (பன்னிரண்டு) ஆதித்தியர்கள் பற்றியும் அவர்களின் பன்னிரு வகைச் செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. மேற்போந்த பெயர்களைத் தவிர சூரியனுக்கு மேலும் பன்னிரண்டு சிறப்புப் பெயர்கள் உள்ளமை பற்றியும் சூரியபுராணம் குறிப்பிடுகின்றது. சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிப் பயணிக்கின்றான் எனச் சூரிய புராணம் கூறுகின்றது. இது அறிவியல் ரீதியான ஒளியின் ஏழு வண்ணக் கூறுகளை உணர்த்துவதாக அமைந்ததெனலாம்.

தொல்காப்பியம் தொடங்கி தமிழிலக்கியங்களில் பரவலாகச் சூரியனைப் பற்றிய செய்திகள் உள்ளன. "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என உலகம் மகிழ்ச்சி எய்தும் வண்ணம் சூரியன் உலகை வலம் வருகின்றான் என்ற கருத்துடன் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை தொடங்குகிறது. "ஞாயிறு போற்றுதும்" என்று சிலப்பதிகாரம் சூரியனைப் போற்றுகின்றது.

கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய கிழக்கு நாடுகளில் சூரியனை மித்திரன் என்ற பெயருடன் வழிபட்டனர். எகிப்தியர்கள் சூரியனை இறக்கைகள் உடைய கடவுளாக வழிபட்டனர். கிட்டைட் என்ற இனத்தைச் சார்ந்த மக்கள் சூரியனைத் தெய்வங்களின் தலைவனாகக் கருதி வழிபட்டனர். தென்அமெரிக்கப் பழங்குடியினரின் சடங்குகளில் சூரியனுக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. இந்தோனேசியர்கள் சூரிய வழிபாடு செய்துள்ளனர். சீனர், யப்பானியர், பாரசீகர்கள் இன்றும் வழிபடும் இறைவன் சூரிய பகவானே. இவ்வாறு உலகனைத்தும் கண்கண்ட தெய்வமான சூரியனை இன, மத வேறுபாடின்றி வழிபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

புதுயுகக் கவிஞனான மகாகவி பாரதியார் சூரியனைப் போற்றும் வகையில் சூரிய தரிசனம், ஞாயிறு வணக்கம், ஞானபானு போன்ற தலைப்புக்களில் வசன கவிதைகள் எழுதியுள்ளார். சூரியனுக்கு வணக்கம் செலுத்தும் காயத்திரி மந்திரத்தை "செங்கதிர்த் தேவனைத் தொழுகின்றோம். அவன் இங்கெம் அறிவைத் தூண்டி நடத்துக" எனத் தமிழாக்கம் செய்தமை சூரிய வணக்கத்துக்கு பாரதியார் கொடுத்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

**பட்டிப் பொங்கல்**

சூரிய பொங்கலுடன் இணைந்ததாக மகரசங்கிராந்திக்கு அடுத்தநாட் கொண்டாடப்படுவது "கோபூசை" என்னும் மாட்டுப் பொங்கல் பண்டிகையாகும். சைவர்கள் தர்மத்தின் வேரான பசுக்களையும் எருதுகளையும் நீராட்டிச் சந்தனம், குங்குமம், மாலை யாவும் அணிவித்து கொம்புகளுக்குத் தங்க, வெள்ளிப் பூண்கள் பூட்டி, சதங்கைகள் கோர்த்த வெள்ளிச் சங்கிலிகளை அணிவித்து எருதுகளை இடபமாகவும், பசுக்களை கோமாதாவாகவும் வழிபட்டு ஆராதிப்பர். 'ஏரின் பின்னது உலகம்' ஏரைச் செய்வதற்கு உறுதுணையாக உள்ளது எருது. பண்டைக் காலத்தில் செல்வம் என்ற பொருளில் மாடு என்ற சொல்வழக்கு ஏற்பட்டது. எருதியின் உதவியினாலேயே தொழில்நுட்பம் வளராத முற்காலத்தில் விவசாயம் செய்யப்பட்டது. எனவே அதனை அன்புடன் போற்றிப் பேணி நன்றியுடன் மதிக்கும் நாளே மாட்டுப் பொங்கல் என்றும், பட்டிப் பொங்கல் (மாட்டுப் பொங்கல்) விழா என்றும் கொண்டாடப்படுவது. பண்டைத் தமிழரிடையே "ஆக்காத்தல்" பெரும் தருமமாகக் காணப்பட்டது. வேற்றரசர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றால் அதை மீட்டுக் கொண்டு வருபவன் பெருந்தலைவனாகவும் அவன் இறந்து விட்டால் தெய்வமாகவும் வழிபடப்பட்டான். எனவே வீரர்களுக்கு நன்றி செலுத்தும் வழிபாட்டைப் பேணிய சிறப்புடையோர் ஆவர்.

சைவக் கிரியைகளில் பஞ்ச கௌவியப் பூசைக்கு பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன இன்றியமையாதனவாகும். இதனைச் சம்பந்தர் "ஆனைஞ்சு ஆடுமுடியான்" எனவும், "ஆவினுக்கு அருங்கலம் அரணஞ்சாடுதல்" என அப்பரும், ஆனஞ்சு ஆடும் வழிபாட்டு முறையைச் சிறப்பித்துக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்தில் கோவாசம். தசதானம் இவற்றுள் பசுவும் ஒன்று. முதலான கிரியைகளில் பசுக்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றது. "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என சம்பந்தர் சிந்தண்மை பூண்ட அந்தணர்களையும், வானவர்களையும் ஆனினத்தையும் வாழ்த்திப் பாடுவது நோக்கற்தக்கது. சைவம் கூறும் 32 அறங்களில் பசுவுக்கு உணவிடுதல் முக்கியம் பெறுகின்றது. பசுக்களின் தினவை (சொறி) நீக்குவதற்கு ஆவுரோஞ்சிக் கற்கள் நடுதல், பசுவின் தாகம் தீர்க்க நீர்த்தொட்டிகள் அமைப்பது புண்ணியச் செயல்களாகும். திருமூலநாயனார் "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு கற்சிலை, யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை" என இறைவனுக்கு ஒரு பச்சிலையாவது பசுவிற்கு ஒருபிடி உணவையாவது கொடுத்தலின் மேன்மையை எடுத்துக் கூறுகின்றார். சைவ வாழ்க்கையில் சுபகாரியங்கள், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவற்றைக் கணித்தே பின்பற்றப்படுகின்றன. ஆனால் இதற்கு விதிவிலக்காக பசு மேய்ச்சலுக்குச் செல்லும் உதயகாலம், மேய்ச்சலில் இருந்து தம் இருப்பிடம் திரும்பும் காலம் "கோதூளி" என அழைக்கப்பட்டு இக்காலத்தில் எந்தச் சுபகாரியமும் ஆற்றலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே மாட்டுப் பொங்கல் என்பது தெய்வீகமான பசுக்களையும், காளைகளையும் பூசித்து வணங்குவதும், அவற்றுக்கு நன்றி பாராட்டும் விழாவாகவும் கொண்டாடப்படும் சிறப்புக்குரியது.

**தைப்பூசத் திருநாள்**

தைமாதத்தில் வரும் பூசநாளே தைப்பூசத் திருநாள். இந்நாள் சிறந்ததொரு புண்ணிய காலமாகும். தைமாதத்தில் பௌர்ணமி சேரும் பூசநாள் மிகவும் விசேடமானதாகும். தைப்பூசத் திருநாளின் சிறப்பைப்பற்றி ஞானப்பால்

உண்ட திருஞானசம்பந்தர் "பூம்பாவைப் பதிகத்தில்" குறிப்பிட்டுள்ளார்.

*"மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்*
*கைப்பூசு நீற்றான் கபாலீச்ச்ர மமர்ந்தான்*
*நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்*
*தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"*

தைப்பூசம் சிவனின் அருள் பிரவாகிக்கும் திருநாள். தில்லை மூவாயிரவர்களுக்கும் இரணியவர்மனுக்கும் தில்லை நடராஜர் தரிசனங் கொடுத்த நாளும் இத்திருநாளே. தைப்பூசத் திருநாட் சிறப்பைப் பற்றி நாவலர் மேல்வருமாறு குறிப்பிடுகின்றார். "தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடுஞ் சித்தயோக தினம்வர அந்த மத்தியானத்திலே ஆயிரமுகத்தையுடைய பானுகம்பர் ஆயிரஞ் சங்கூத ஆயிரந் தோளுடைய வாணாகரன் குடமுழவு ஒலிப்பிக்க, பஞ்சதந்துமியொலியும் வேதவொலியுங் கந்தவருடைய கீதவொலியும் இசைக்க ஞானசபையிலே சிவபெருமான் உமாதேவியாரோடு நின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளினார் எனவும், வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலி முனிவர் என்னும் இருவரும் பிரம்மா விட்டுணு முதலிய தேவர்களும், திருவுடையந்தணர் மூவாயிரவரும் பிறரும் சிவபெருமானுடைய திருவருளினாலே ஞானக் கண்ணைப் பெற்று சிவனின் ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்து உரோமஞ் சிலிர்க்க நெஞ்சு நெக்குருகக் கண்ணீர் பொழியச் சிவானந்தக் கடலில் மூழ்கியதாகவும் பதஞ்சலி முனிவர் "எம்பெருமானே இந்த ஞானசபையிலே உமாதேவியாரோடு இன்றுமுதல் எக்காலமும் ஆன்மாக்களுக்கு ஆனந்த திருத்தத்தைப் புலப்படுத்தியருளும்" என்று வேண்டிக் கொண்டதாகவும் அதற்குச் சிவபெருமான் உடன்பட்டருள் செய்தார் எனவும் கூறப்படுகின்றது. எனவே பூசநாள் சிவன் சக்தியுடன் இணைந்து ஆனந்த தாண்டவம் செய்து தேவர்களுக்கும் அந்தணர்களுக்கும் ஏனையோர்களுக்கும் அருள் புரிந்த திருநாளாகும்.

மேலும் இச்சிறந்த நாளில் காதுகுத்தல், சோறூட்டல், ஏடு தொடக்குதல் முதலிய சுபகாரியங்களைச் செய்யும் நாளாகவும் விளங்குகின்றது. 'புதிதுண்ணல்' என்ற புத்தரிசி அன்னத்தை உண்ணும் திருநாளாகவும் இந்நாள் பெருமை பெறுகின்றது.

### தைநீராடல்

கன்னிப்பெண்கள் இறைவனை வேண்டி நோன்பு நோற்று நோன்பின் நிறைவு நாளன்று நீராடுவது தைநீராடலாகும் என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. இந்நோன்பினால் கன்னிப்பெண்கள் சிறந்த கணவரைப் பெறுவரெனக் கலித்தொகை குறிப்பிடுகின்றது. கன்னிப் பெண்கள் தம் தாயின் துணையுடன் நீராடியதால் இந்நீராட்டு "அம்பாவாடல்" என்றும் அழைக்கப்படுகின்றது. நல்ல கணவரைப் பெறுவதற்கும் நாடு செழிப்பதற்கும் மழையைப் பெய்விப்பதற்காகவும் இந்நோன்பு நோற்கப்படுவதாகப் பரிபாடல் கூறுகின்றது. மேற்போந்தவற்றை நோக்கினால் கன்னிப் பெண்கள் வாழ்வில் நல்ல வரனை வேண்டியும், நாடு செழிக்க நல் மழை வேண்டியும் மார்கழியில் விரதம் இருந்து தைப்பிறப்பில் தைநீராடலைச் செய்து தமது விரதத்தைப் பூர்த்தி பண்ணினர் என்று சங்கப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

### முடிவு

தொகுத்து நோக்கினால் இயற்கைச் சக்தியாகிய சூரியனுக்கும், மாடுகளுக்கும் நன்றிக்கடன் செலுத்தும் வகையில் அமைந்த சூரிய பொங்கலும், மாட்டுப் பொங்கலும் நம்மை இயற்கையுடன் அன்பைப் பேணும் திருவிழாக்களாக அமைந்திருப்பது புலனாகும். அத்துடன் தைநீராடல் கன்னியர்களை தெய்வீகத்துடன் இணைக்கும் சிறந்த செயலாகவும் விளங்குகின்றமை புலனாகும். சமயம் என்பது திருநெறி. எல்லா உயிர்களுடனும் இயற்கையுடனும் நம்மை இணைத்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கும் பரம்பொருளை அடையும் வழி. அவ்வழிச் செலவுக்கு அடிப்படை நன்றி உணர்வே என்பதை நாம் எல்லாம் உணரும்படி வழிகாட்டுவதே தைமாதத்தின் மகத்துவமாகும். மேலும் தைப்பூச விழா சிவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்குளிரக் கண்டு சிவானந்தத்தில் மகிழும் விழாவாகவும் பூசத்தில் நிகழும் "புதிதுண்ணல்" அறுவடை செய்த தானியங்களைத் தான் மாத்திரம் உண்ணாது அயலவரும் உறவினரும் வீட்டிலும் சமூகத்தவருடன் ஆலயத்திலும் சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடி உண்ணுதல் சிறந்த மானிடப் பண்பாட்டை வெளிப்படுத்துவதாகும். தைநீராடல் கன்னிப் பெண்கள் சிறந்த கணவரைப் பெறும் பொருட்டும், நாட்டு வளம்வேண்டியும் கொண்டாடும் ஒரு விழாவாகும். மனித சமுதாய வரலாற்றில் விழாக்கள் மனிதனை இறைவனுடன் மாத்திரமல்லாமல் சமூகத்துடன் ஒன்றுபடவும் அதன் மூலம் ஆனந்தமான வாழ்க்கையை வாழவும் வழிப்படுத்துவனவாகும். இந்தவகையில் தையில் இடம்பெறும் விழாக்கள் மானிட மேம்பாட்டுக்கான சிறப்பான விழாக்களாக அமைவது குறிப்பிடத்தக்கது.

## விநாயகர் வணக்கம்

ஆனை முகனை அனைத்துலகும் காப்பவனை
சோனை மதம்பொழியும் சுந்தரனை -வானோர்
கணம்போற்றும் தெய்வக் கணபதியை நாளும்
வணங்குவார் எய்துவர்நல் வாழ்வு!

சித்தி விநாயகனை சிந்தைவைத் தெஞ்ஞான்றும்
பக்தியுடன் பாடிப் பரவுவார் -இத்தரையில்
பொன்னும் பொருளும் புகழ்மலிந்த மக்களுமாய்
மன்னிமிக வாழ்வர் மகிழ்ந்து!



# தைத்திருநாளாக சிறப்புப்பெறும் தைப்பொங்கல்

கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

இந்துக்கள் கொண்டாடும் விழாக்களுள் தைப் பொங்கல் மிக முதன்மை வாய்ந்ததாகும். **"தை பிறந்தால் வழி பிறக்கும்"** எனத் தமிழ் மக்கள், தை மாதத்தைத் தமக்கு வழிகாட்டும் மாதமாகக் கொண்டு சிறப்பிப்பர். தைமகளை, குதூகலத்துடனும், ஆசாரத்துடனும் புதியன அணிந்து மன நிறைவுடனும், புத்துணர்ச்சியுடனும், தொன்றுதொட்டு கொண்டாடி வரவேற்று மகிழ்வது எமது மரபு. தைத்திருநாள், தைப்பொங்கல் நன்னாள் உழவப் பெருமக்களின் பெருநாள். காலமெல்லாம். தமது தொழிலிலே, உறுதுணையாக நின்ற சூரிய பகவானுக்கு, புது நெல்லரிசி கொண்டு, கரும்பும், கனியும், தேனும், பாலும், பயறும், சர்க்கரையும் கலந்து பொங்கிப் படைத்து நன்றி கூறும் நன்னாள் - இது ஒரு பொன்னாள்.

தைத்திருநாளைத் தொடர்ந்து பட்டிப்பொங்கல், ஆன்மீகப் பொங்கல், காணும் பொங்கல், கன்னிப் பொங்கல் என இத்திருநாள் பல வகைகளில் முக்கியமாகத் தமிழ் நாட்டிலே கொண்டாடப்பெற்று வருகின்றது. எம்மவரைப் பொறுத்தளவில், தைப்பொங்கலும் பட்டிப் பொங்கலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருதல் கண்கூடு.

எமது உடம்பை, ஒரு சிறு குடிசையாகக் கொண்டு அதனுள் இருந்து ஆன்மாவை அடக்கி ஆளும் ஐவரான ஐம்புலன்களை யாம் அடக்கி ஆள்வதே மதுரப் பொங்கலான ஆன்மீகப் பொங்கலாம்.


காணும் பொங்கல் என்பது, பொங்கல் திருநாளன்று உயர்ந்தோர், வசதி படைத்தோர், தங்கள் பொங்கல் விழாவை முடித்துக் கொண்டு ஏழைகள், வசதி குறைந்தோர் இல்லங்கட்குச் சென்று பேதம் பாராது "உங்கள் வீட்டில் பால் பொங்கிற்றா?" எனப் பண்போடு விசாரித்து, அவர்கட்கு இயன்ற உதவியை, தர்மத்தை செய்தலாம். அத்தோடு உற்றார் உறவினரையும் அழைத்து உணவிட்டுக் கௌரவித்து கொள்ளலாகும்.

கன்னி என இளம்பெண்களை அழைப்பதோடு, ஆற்றையும் கன்னி என்றழைப்பர். ஆற்றைக் கன்னிப் பெண்தெய்வமாக வழிபடும் மரபும் தமிழ் மக்களிடையே உண்டு. இத்திருநாளிலே சிற்றிளம் பெண்கள் ஆற்றங்கரை சென்று கும்மியடித்து, களிப்போடு குட்டான்சோறு ஆக்கிப் படைத்து தாமும் உண்டு மகிழ்தல் கன்னிப்பொங்கலாம்.

தைப்பொங்கலின் நாயகனே சூரியன் தான். சிவனாரின் நெற்றிக்கண்ணாகவும், சூரியன் கருதப்படுகின்றான். தைப்பொங்கலின் விசேட அம்சமே சூரிய பொங்கல் தான். நெல்லுக்கு முதற்காரணம் மழை, மழைக்கு அடிப்படைக் காரணம் சூரியன். சூரிய பகவானை **"சூரிய நாராயணன்"** என வைணவர்கள் வழிபடுவர். சைவர்கள், **"சிவ சூரியாய நம-"** என வழிபடுவர்.

தை மாதம் முதல் நாளன்று உழவுப் பெருமக்கள் தமது உழைப்பின் பயனை உணரத் தொடங்குவர். முதலில் பொங்கல் ஆதவனுக்குப் படைத்து பின்னர் தாம் நுகர்தல் தமிழ் பண்பாடுமாகும். அன்று காலை இல்லத்து முற்றத்தைப் பெருக்கி, சாணத்தால் மெழுகி, மாக்கோலமிட்டு அவ்விடத்தே ஒரு சிறு பந்தல் அமைத்து, வாழை நாட்டி, மாவிலை தோரணம் கட்டி, பிள்ளையார் பிடித்து வைத்து, குங்குமம் வைத்து, குத்து விளக்கேற்றி, பொங்கலுக்கு அடுப்பு அமைப்பர். பின்னர் இல்லத்தலைவன், தலைவி, பிள்ளைகள் புத்தாடை அணிந்து, இல்லத்தலைவி புதுப்பானையில் பாலும் நீரும் நிரப்பி அடுப்பில் ஏற்றி, கற்பூரம் கொண்டு விறகில் அக்னி மூட்டி, பால் பொங்கி வரும் போது இல்லத்தலைவன் புத்தரிசியை பொங்கல்பானையில் இடுவன, தொடர்ந்து தலைவியும், பிள்ளைகளும் இடுவர். தொடர்ந்து சர்க்கரையும் பயறும் உடனிட்டு பொங்கல் ஆக்குவர். பால் பொங்கி வரும் போது "பொங்கலோ பொங்கல்" என எல்லோரும் சேர்ந்து குரல் எழுப்புவதில் ஒரு தனி ஆனந்தம். பொங்கல் தயாரானதும் பொங்கலோடு நெய், தயிர், கனிகள் சேர்த்து தாம்பளத்தில் இட்டு சூரியபகவானுக்கும் தேவர்களுக்கும், அக்கினி பகவானுக்கும் படையல்களாகப் படைத்து, தீப தூபம் காட்டி, மலர்களால் அர்ச்சித்து தோத்திரம் பாடி, பட்டாசு கொளுத்தி களிப்போடு பொங்கல் பூசையை நிறைவு செய்வர். பின்னர் குடும்பத்தவரும், சுற்றத்தவரும் ஒருங்கமர்ந்து பொங்கல் உண்டு ஏழைகட்கும் கொடுத்து மனம் நிறைவு பெறுவர்.

அடுத்த நாள் பட்டிப் பொங்கல் என்றழைக்கப்பெறும் மாட்டுப் பொங்கல் இடம்பெறும். மாடு என்றாலே "செல்வம்" என்று பொருளுண்டு. அன்று தம்மோடு காலம் முழுவதும் உழைத்த எருதுக்கும், பால் தந்த பசுவினத்துக்கும் உழவன் நன்றி செலுத்துகின்றான். மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டி, மாலையணிவித்து பொட்டு இட்டு அவற்றை அலங்கரித்து, மாலையில் பொங்கல் பொங்கிப் படைத்து ஊட்டி மகிழ்வர். சில இடங்களில் அவற்றை அலங்கரித்து அழகாக ஊர்வலம் வருவர். அவற்றிடம் அன்று ஒரு வேலையும் வாங்க மாட்டார்கள். அன்றைய தினம் பசு இனத்துக்கு ஒரே கொண்டாட்டம் தான். பெற்ற தாய் போன்று சகல சந்தர்ப்பங்களிலும் உதவி நிற்கும் பசு இனத்தை பண்டைய தமிழ் மக்கள் தெய்வமாகவே வணங்கிப் போற்றிக் கொண்டாடி வந்தனர். இன்றைய காலகட்டத்திலே, கிராமப்புறங்களிலே பசுவினம் சீராக, சிறப்பாக வளர்க்கப்பெற்றாலும், நகர்ப்புறங்களிலே நெருங்கிய வீடமைப்புக்களாலும், இட நெருக்கடியாலும் பசுவை யாம் வளர்க்க எவ்வளவு விரும்பினாலும் எமது இல்லங்களிலே அவற்றை வளர்க்க போதிய இட வாய்ப்பு அமைவதில்லை. இருப்பினும் "கோமாதா என்றும் எங்கள் குலமாதா தான்."



# மகத்துவமிக்க சூரிய வழிபாடு




நிதர்சனா நடராஜா
சிவதொண்டர் அணித்தலைவி
பொல/திம்பு ஹெவன்பிட்டி தமிழ் மகா வித்தியாலயம், பொலநறுவை


*"உழவா நலகத்தார்க் காணி ய:.தாற்றா*
*தோழுவாரை யெல்லாம் பொறுத்து"*

என்கிறார் வள்ளுவர் பெருமான். இவற்றால் உழவன் பெருமையும், உழவின் சிறப்பும், தைப்பிறப்பு, தைப்பொங்கல், என்பவற்றின் மகிமையும் புலப்படுகின்றன. இதனையுணர்ந்துதான் இன்றைய அரசாங்கமும் உயிரைக் காக்கும் உழவனுக்கு ஊக்கமூட்டுகிறதுபோலும். உழவுத் தொழில் நிலைத்து நிற்கும்வரை பொங்கல் பண்டிகையும் நிலைத்தோங்கும். சங்ககாலந் தொட்டே இவ்விழாவை நம் முன்னோர் எதற்காகச் செய்து வந்தனரோ அந்த இலட்சியத்தை மறக்காமல் நாம் இருத்தல் வேண்டும்.

தைப்பொங்கல் சூரிய பொங்கலெனவும் கொள்ளப்படும். சூரியனுக்குப் பொங்கப்படுவதால், சூரியன் உதிக்கும் நேரத்திலேயே பொங்குதல் வேண்டும். தமது கோரிக்கைகள் நிறைவேறுவதற்குச் சூரியன் எவ்வளவு அவசியம் என்பதை இது விளக்குகிறது. அதனாலேயே பொங்கல் நாளில் சூரியனை வணங்குகின்றனர். வீதி வெளியாகாச மீதினில் தோன்றும் ஒளி, அந்தகாரத்தை போக்குகிறது. பிரகாசத்தை ஆக்குகின்றது. சீவராசிகள் வாழ்வதற்கு உறுதுணையாக விளங்குகிறது.

உயிர்கள் உய்ய இன்றியமையாதனவாகிய பயிர்களை அறுவடை செய்து, அக மகிழ்ந்து, நல்லாடையணிந்து, நகைமுகந்தோன்ற, நட்பும் சுற்றமும் சூழ, அப்பயிர்களுக்கு உயிரளித்த பகலவனுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பொங்கலிட்டு வாழ்த்துகின்றோம். இது சூரிய நமஸ்காரம் எனவும்படும். நமஸ்காரம் என்பது பணிவு. பணிவில் மனங்கசிந்து, மனங் குளிர்ந்து, பிழைகளை மன்னித்து ஆசீர்வாதம் செய்வதால் ஏற்படுவது பலன்.

சில சிறு கருமங்களுக்குச் சாதாரணமாக ஒருவரை நாம் வணங்குவதற்குப் பலன் கிடைக்கும் போது, சூரியனை வணங்கினால் எத்தனை மடங்கு பலன் கிடைக்கும். சூரியனைச் சூரிய நாராயணன், சூரிய பகவான் எனவும் குறிப்பிடுவர். சூரியனை வணங்கும் போது அதன் வீரிய சக்தியை வணங்குகின்றோம். உயிர்ச் சக்தியை வணங்குகின்றோம், தெய்வீக சக்தியை- சிவ சக்தியை வணங்குகின்றோம். இத்தகைய சக்திகளைத் தந்து அளவுகடந்த பலனையும் நமக்கு அது அளிக்கின்றது. இறைவன் இயற்கையோடியைந்து எங்கும் விளங்குகின்றார். அவன் ஒளி வடிவினன் என்பதனையே இது குறிக்கிறது.

சோதிக்கு வணக்கஞ் செலுத்துவது சைவ சமயத்தவர்களுக்குப் புதிதல்ல. வேத காலத்திருந்தே சோதி வழிபாடு பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இறைவனை ஒளி வடிவாகக் கண்டு வணங்கியவர்கள் அவர்கள்.

*"வானிலிருந்து வரம்பி கந்த மாபூதத்தின் வைப்பெங்கும்*
*ஊனுமுயிரு முணர்வும் போல உள்ளும் புறத்துமுளன்"*

"அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்தமூர்த்தியாகி" நின்றவன் அவனே. அப்படிப்பட்ட இறைவனை எந்த உருவில் வணங்குவது என்பது பிரச்சினை தானே.

இறைவன் ஆக்குவான், காப்பான், அழிப்பான், மறைப்பான், அருள் செய்வான், உருவாய், அருவாய், அருவுருவாய், விளங்குவான் பற்றின்றியே எல்லா உயிர்களிடத்தும் பொருந்தி நின்று கருமம் புரிவான். உள்ளத்திருளைப் போக்குவான், மனமாசுகளை யெல்லாம் அழிப்பான்.

இத்தகைய மிக நுண்ணிய பண்புகளையெல்லாம் பஞ்ச பூதங்களுள் தீயினிடத்தேதான் மிகுந்திருக்கின்றன. சூரியன் ஒரு பெரிய தீப்பிழம்பு. ஆதலின் ஒளியின் வாயிலாக இறைவனை வழிபடும் முறை சாலச் சிறந்தது.

நமக்கெல்லாம் கண்கண்ட தெய்வம் சூரியன். மனிதர், விலங்குகள், புல் பூண்டுகள் யாவும் சூரியன் ஒளியால் - வெப்பத்தினாற்தான் உயிர் பெறுகின்றன, வாழ்கின்றன. இவற்றை நோக்கும் போது சூரிய வணக்கந்தான் ஆதியில் முதன் முதல் மனிதனறிந்த இறைவழிபாடெனக் கொள்ளக் கிடக்கின்றது.

சீனர், யப்பானியர், பாரசீகர்கள் எல்லோரும் இன்னும் வழிபடும் இறைவன் சூரிய பகவானே, 'அருக்கனாவான் அரனுரு வல்லவோ' எனவே இறை வழிபாடு முதலில் சூரிய வழிபாடாயிற்று. பின்னர் அது ஒளி வழிபாடாகப் பரிணமித்தது.

சூரியன் அட்டமூர்த்திகளுள் ஒருவர். சூரியனுடைய இருதயத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்வதாலும், ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளில் முதலிலே சூரிய பூசைபுரியும் படி ஆகமங்கள் கூறுகின்றபடியாலும், தேவர்களுக்கு உதயமாகிய உத்தராயண புண்ணிய காலத்திலே கொண்டாடப்படும். தைப்பொங்கல் சூரிய பொங்கல் எனவும் வழங்கப்படும். இதனைச் சைவசமயிகள் யாவரும் அவசியம் செய்தல் வேண்டும்.

சகல லோகத்திலும் நவநாயகர்களுள் தலை சிறந்து விளங்கும் சூரிய பகவானுடைய அளவற்ற மகிமையை எடுத்துக்கூற யாவராலும் இயலாது. சூரிய நாராயணனு டைய பெருமையை எல்லையற்றதெனக் கூறுகிறதென்றால் சாமானிய சக்தியுடைய மனிதனால் எவ்விதம் உணர முடியும்?

வட்ட வடிவத்தின் மத்தியில் எட்டுப்பத்ம தளங்களும், அதனுள் புறத்தில் ஷட்கோணங்களும், அதன் மத்தியில் ஓம், ஹ்ராம், ஹ்ரீம் என்ற பீஜாட்சரரூபமாயும் கத்தி, கதாயுதம், சங்கம், பதீமம் என்னும் ஆயுதங்களை கையிலேந்தி வேத சொருபியாய் விளங்குபவரும், மும்மூர்த்தி சொருபங்கள் உடையவரும், இராவணனை வென்ற இராமராற் துதிக்கப்படத்தக்க, தேவாதி தேவர்கள் கூட வணங்கும்படி போற்றத்தக்க நற்குணங்கள் நிறைந்த சூரிய பகவானைப் பக்தி சிரத்தையுடன் பிரார்த்தித்தால் சகல சம்பத்துடன் வாழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆறுமுகநாவலர் அவர்கள் நித்திய கருமவியலில் சூரிய நமஸ்காரத்தைப் பற்றி "சூரிய மண்டலத்தைத் தரிசித்து, வெண்டாமரைப் பூவின் மேலே, செவ்வொளியையுடைய வட்ட மண்டலத்தினடுவே உள்ளவராய், மாதுளம் பூ நிறத்தினராய் ஒரு திருமுகமும் இரண்டு திருக்கண்ணும் இரண்டு திருப்புயத்திலும் பொருந்திய அலர்ந்த வெண்டாமரைப்பூ நாளம் இரண்டு பிடித்த திருக்கையும் உடையவராய்ச் சிவந்த வஸ்திரம் தரித்தவராயும் உள்ள சூரிய மூர்த்தியைத் தியானித்துச் சிவ சூரியாய நம என்று செந்தாமரைப்பூ முதலிய செம் பூக்களைத் தூவி தோத்திரம் பண்ணி இரண்டு தரம் ஆன்மப் பிரதஷணம் செய்து, வைகர்த்தனாய நம முதலான பன்னிரண்டு திருநாமங்களைச் சொல்லிப் பன்னிரண்டு நமஸ்காரஞ் செய்து, எழுந்து கும்பிட்டு விரும்பிய வரங்களை வேண்டிக் கொள்க" என்கிறார். இவற்றால் சூரிய நமஸ்காரத்தின் மகிமையும், பெருமையும் விளங்குகிறது.

ஆகவே தைத்திருநாளில் பொங்கல் பண்டிகையின் மகத்துவம் உணர்ந்து நன்றி எனும் விழுமியப்பண்போடு பாரெல்லாம் விழாவெடுப்போம், மகிழ்வோடு மாண்புறுவோம்!

## கணபதி–தத்துவ விளக்கம்

விநாயகப் பெருமான் பலவிதமான பெயர்களில் அழைக்கப்பட்டாலும்இ ஒவ்வொரு பெயருக்கும் காரணங்களும் உண்டு.விநாயகப் பெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று கணபதி.இவரது தந்தையான சிவபெருமானை சுற்றியிருப்பது பூதகணங்கள். சிவனை வணங்க வருவோர் தேவகணங்கள். அசுர கணங்களின் ஒப்பற்ற கடவுளாகவும் சிவன் விளங்குகிறார்.

இந்தக் கணங்களுக்கெல்லாம் தலைவராக விளங்குபவர் விநாயகரே. இதனால்தான் "கணபதி"என அழைக்கப்படுகிறார்.கணபதி என்ற சொல்லில் உள்ள "க்" என்ற எழுத்தானது ஞானத்தைக் குறிக்கிறது. "ண" என்பது மோட்சத்தைக் குறிக்கிறது. "பதி" என்பது பரம்பொருளைக் குறிக்கிறது. தம்மை, எவர் ஒருவர் வழிபடுகின்றாரோ அவரை ஞானத்திலே நிறுத்தி முடிவிலே முத்தியை நல்கக்கூடிய பரம்பொருளான ஞானமூர்த்தியே விநாயகர் பெருமான்.

இதனால் இந்து மக்கள் தங்களுடைய எந்த விதமான சடங்குகளிலும் கொண்டாட்டங்களிலும் விழாக்களின் போதும் எந்தக் கடவுளுக்குரிய பூஜையாக இருந்தாலும் விநாயகப் பெருமானை முதற் தெய்வமாக பூஜை செய்து வணங்கி வருகிறார்கள்.

## விக்கினேஸ்வரர்

விநாயகப் பெருமானுக்குரிய இன்னொரு பெயர் விக்னேஸ்வரர். வினைகளை நீக்கி வைக்கக்கூடிய இறைவன் அல்லது தலைவன் என்ற பொருள் வரும் விதமாக இப்பெயர் சொல்லப்படுகிறது. விக்னஈஸ்வரர் என்று பிரிக்க வேண்டும். "விக்னம்" என்றால் தடை என்று பொருள்.

இவரை வணங்காமல் செய்யப்படக்கூடிய காரியங்களுக்கு தடையாக இருப்பார். ஒருமுறை இவரது தகப்பனாரான சிவபெருமான் திரிபுர தகனம் செய்வதற்கு செல்லும்போது விநாயகர் தன் மகன்தானே என்று அவருக்குரிய மரியாதை செய்யாமல் தேரில் ஏறிவிட்டார். ஆனால் விநாயகர் தேரின் அச்சை முறித்து தன்னுடைய நினைப்பினை உண்டாக்கி விட்டார்.

தன்னை வணங்குபவர்களின் தடைகளை உடைத் தெறியக் கூடியவர். வள்ளி திருமண விஷயத்தின் போது தன்னை வேண்டி வணங்கிக் கொண்ட முருகப் பெருமானுக்கு அருள்புரிந்து அவர்களது காதல் மலர வளர கல்யாணம் வரை செல்ல வழிவகுத்தவர் விநாயகர் தான்.

## கஜானனன், கரிமுகன்

விநாயகப் பெருமானுக்கு கஜானனன், கரிமுகன் என்ற பெயர்களும் உண்டு. "கஜம்" என்ற வடமொழிச் சொல்லுக்கு யானை என்று பொருள். "கஜானனன்" என்றால் யானை முகத்தையுடைய தலைவன் என்று பொருள் படும். "கரி" என்ற வார்த்தைக்கு யானை என்று பொருள். இதுவும் யானை முகத்தையுடைய இறைவன் என்பதைக் குறிக்கிறது.



# திருமூலரின் வாழ்வியல் சிந்தனைகள்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
தலைவர், மாமன்ற சமய விவகாரங்கள் குழு

திருமூலர் உண்மையை தேடியவர், நாடியவர் அம்முயற்சியில் இடையறாது ஈடுபட்டவர். தாம் பெற்ற ஞானத்தை உண்மையை உணர்வதற்காகவே பயன்படுத்தியவர். அச்செயன்முறையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் ஞானத்தையும் தமிழில் மூவாயிரம் பாடல்களில் திருமந்திரம் நூலாக வடித்துத் தந்தவர்.

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் திருமூலரின் பெருநோக்கிற்கமைய அவர் தாம் பெற்ற மெஞ்ஞான அனுபவ இன்பத்தை இவ்வுலகில் உள்ள எல்லா மனிதர்களும் சகல ஜீவராசிகளும் எக்காலத்திலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக திருமந்திரம் அருளப்பட்டது.

உண்மை கால தேச வர்த்தமானங்களைக் கடந்து நிற்பது. உண்மையோடு ஒன்றித்து நின்று உயிர்களுக்கு அன்போடு பணிசெய்வதால் பெறப்படும் இன்பமே உண்மை இன்பம் எனத் திருமூலர் கண்டவர். உண்மை இன்பத்தை எல்லோரும் அடைய வேண்டும் என்பது திருமூலரின் வாழ்வியல் நோக்கு.

உலகம் உடல் உயிர் மனித வாழ்வு என்பன பற்றிய உண்மை நிலைகளை தெளிவாக்கும் அதே வேளை இவை அனைத்துக்கும் மேலாக மனிதன் மனிதத் தன்மைகளோடு மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய உண்மை நெறி முறைகளையும் உலகில் வாழ்வாங்கு வாழும் வழிகள் பற்றிய வாழ்வியல் நடைமுறைச் சிந்தனைகளையும் மனிதன் தீயவற்றிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர மனிதனாகச் சமுதாயத்தில் வாழ மேற்கொள்ளவேண்டிய உபாயங்களையும் திருமூலர் வழங்கியுள்ளார். இந்த வகையில் திருமந்திரம் ஓர் வாழ்க்கை நூல் ஆகும்.

பண்டுதொட்டு சமுதாயத்தில் மாறுதல்கள் பல நிகழ்ந்து வந்தாலும் தற்காலத்தில் தீவிரமாகி வந்தாலும் மனித வாழ்க்கையில் அடிப்படை உண்மைகளில் மாற்றம் இல்லை என்பது உணர்தற்பாலது. திருமூலர் அத்தகைய நிலையான வாழ்க்கை உண்மைகள் பலவற்றை செம்மையாக உணர்ந்து தெளிவாக உணர்த்திய சான்றோர் என்பதில் சிறப்புப் பெற்றவர். திருமந்திரம் இன்று வாழும் நூலாக விளங்குவதற்கு அதுவே காரணம்.

திருமூலர் வரலாறு வாழ்ந்த காலம் என்பன பற்றி முரண்பாடான கருத்துக்கள் உள்ளன. அவையாவும் பெருமளவில் ஊகங்களே. அவற்றை நீக்கி அவர் வழங்கியுள்ள காலத்தையும் இடத்தையும் வாழ்ந்த சூழ்நிலைகளையும் கடந்து நிலைத்து நிற்கின்ற வாழ்வியல் சிந்தனைகளை அவற்றின் உண்மையை நோக்க வேண்டும்.

திருமந்திரத்தை திருமூலர் தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழில் செய்தார். ஆயினும் தமிழ் மக்களுக்கென மாத்திரம் செய்யவில்லை. உலகமாந்தர்களின் உய்விற்காக செய்தார். உலகினை ஒன்றாகக் கண்டவர் திருமூலர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றவர் அவர். மனித குலம் முழுவதற்குமான பொதுக்கருத்துக்களை வாழ்வியல் உண்மைகளை உணர்த்தி எழுதி என்றும் வாழும் உலகப் பொது நூலாக திருமூலர் திருமந்திரத்தை தந்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினரின் பழங்காலத்து வாழ்க்கை நிலையையும் முறையையும்: அவர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகளையும் தத்துவங்களையும் நிரல்படுத்தி நூலில் விரிவாகக் கூறியிருக்கலாம். திருமூலர் அவர் வாழ்ந்த காலத்துத் தமிழ் நாட்டு வாழ்க்கை முறைகளை அப்படியே உரைத்திருக்கலாம். தற்காலத்தில் அவை பயனற்றவையாகப் போயிருக்ககூடும். இன்றைய சூழ்நிலையில் அக்கருத்துக்கள் தேவைப்படாமல் இருத்திருக்கலாம். இன்று நிலைமைகள் மாற்றம் பெற்றுவிட்டன. ஆனால் மனித வாழ்வின் உயர் நோக்கு வாழ்வு சிறப்பதற்கான நெறிமுறைகள் வாழ்வில் உண்மை இயல்பு வாழ்க்கை விழுமியங்களில் சிறப்பு வாழ்க்கை நெறிகளைத் தவறவிட்டவர்களின் இழிவு மற்றும் வாழ்வியல் சிந்தனைகள் ஆகியவற்றைப் பொதுவாக்கி உலகத்தவர் அனைவருக்கும் எக்காலத்தவர்களுக்கும் பொருந்தக் கூடிய முறையில் திருமந்திர நூலில் தெளிவாக விளக்கியிருத்தலால் இன்றைய தலைமுறையினரும் திருமூலரின் அச்சீரிய உண்மைகளைப் படித்துப் பயன் பெறக்கூடியதாக உள்ளது. வருங்காலத்தவர்க்கும் பயன் தரத்தக்கதாக உள்ளன. மனித வாழ்வுக்கு அடிப்படையான, எல்லாச் சமூகத்தவர்க்கும் உடன்பாடானஇமனித குலத்திற்குப் பொதுவான வாழ்க்கை உண்மைகளைத் தூய நிலையில் கண்டு, உணர்ந்து, தெளிந்து திருமூலர் வெளிப்படுத்தியுள்ளார்.அதனால் அவற்றைக் கற்கும் மக்கள்இதாம் வாழும் காலத்து உணர்வோடு பொருத்திப் பார்த்துஇஅங்கு பொருத்தம் கண்டுஇஏற்று வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள முடிகின்றது.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் ஏற்றதாய் விளங்குவது உண்மை. அப்படியானால் உண்மைக்குப் பழமைஇபுதுமை என்ற நிலைகள் இல்லை.உண்மை மாறா அழகும்இநிரந்தரமும் கொண்டு விளங்குகின்றது

உண்மையோடு மனித வாழ்வு தொடர்புபட்டு இருக்கும் வரை அது சிறப்பாக அமையும். திருமூலர் மனித வாழ்க்கையை உண்மையோடு தொடர்புபடுத்தி இணைத்து அதன் பயனாக வாழ்வினைச் செம்மைப்படுத்தியும்

ஒழுங்குபடுத்தியும் அமைத்து சிறப்பெய்துவதற்கு வேண்டிய நெறியும் முறையும் தந்துள்ளார்.

மனுக்குலத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நெறி காட்டும் திருமூலர் வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் பகுத்து ஆராய்ந்து அவற்றின் இயல்புகள் இயல்பினின்றும் விலகுவதால் ஏற்படும் விளைவுகள் மனித இயல்புகள் மனித உரிமைகள் என்பவற்றைப் பேணுவதால் ஏற்படும் பயன்கள் ஆகியவற்றை விளக்கியுள்ளார். அவற்றைத் தேர்ந்தெடுத்து வாழ்வின் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பையும் சுதந்திரத்தையும் மக்களிடமே விட்டுள்ளார். இந்த அணுகுமுறை இவற்றைச்செய், இவற்றைச் செய்யாதே எனக் கட்டளைகளாக வழங்கும் தத்துவ ஞானிகள் பலரின் அணுகுமுறையினின்றும் வேறுபட்டு உள்ளது.திருமூலர் சிந்தனைகள் அறிவுக்கு விருந்து படைப்பதாக மாத்திரம் அமையாமல் அவை உணர்வதற்கும் ஒழுகுவதற்கும் உரியவை ஆக விளங்குகின்றன. வாழ்வின் முழுமைத்துவம் உணரப்பட்ட நிலையில் வாழ்வியல் சிந்தனைகள் திருமந்திரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகமங்களின் பிழிந்தசாரம் அதன் உள்ளடக்கம்.

திருமூலரின் சமயச்சிந்தனைகள், சமூகச்சிந்தனைகள், ஒழுக்கச்சிந்தனைகள், கல்விநெறிச் சிந்தனைகள், என்பன ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்க முடியாதவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஆன்மீகமும் உலகியலும் இணைந்துள்ளன. இங்கு தான் முழுமைத்துவம் உணரப்படுகின்றது. இவையனைத்தும் வாழ்வியல் சிந்தனைகளாக மலர்கின்றன. மனிதரை மனிதர்களாக வாழ்வாங்கு வாழவைக்கின்றதும். அதன் மூலம் வாழ்வின் தரத்தை உயர்த்துவதுமான சிந்தனைகளாக அமைவது திருமூலர் சிந்தனைகள்.

இக்கட்டுரையில் வாழ்வியல் சிந்தனைகளாக சைவசமயம், சமூகம், ஒழுக்கம், கல்வி, சார்ந்த திருமூலரின் சிந்தனைகள் ஆராயப்படுகின்றன. இவையனைத்தும் சுருக்கமாக கூறவேண்டியுள்ளதால் விரிவாக ஆராயும் வாய்ப்பும் சுருங்கிவிட்டது சமயம், சமூகம், ஒழுக்கம், கல்வி, என்பன மனித வாழ்க்கையோடு தொடர்புபட்டவை. எனவேதான் வாழ்க்கை நெறிகளாக அவை நோக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றாக இணைக்கப்படவேண்டியவை. வாழ்வு முழுமைத்துவம் எய்துவதற்கு அவற்றின் ஒன்றிணைப்பு அவசியம்.

திருமந்திரத்தில் உள்ள ஒன்பது தந்திரங்கள் முறையே நல்லொழுக்கம், அறவாழ்க்கை, யோகப்பழக்கம், மந்திரநுட்பம், சமய ஒழுக்கம், குருநெறிநிற்றல், அகப்புற உணர்வு, அருள் நுகர்வு, பேராப்பெருவாழ்வு, என்பனவற்றை விளக்குகின்றன. திருமந்திரத்தின் பொருள் அடக்கமாக மழை, செல்வம், ஆட்சி, கல்வி, கேள்வி, ஒழுக்கம், உடலோம்பல், ஆயுள்வரை, மருத்துவமுறை, மூச்சொழுங்கு, மனவொருமை, போன்ற மனித நல்வாழ்வுக் குறிப்புகள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த வகையில் திருமந்திரத்தை வாழ்வியல் நூலாகக் கொள்வது பெரிதும் பொருத்தமுடையதாக இருக்கின்றது.சமயச் சிந்தனையில் சிவம் என்று குறிப்பிடப்படும் பரம்பொருளை சமூக வாழ்க்கைச் சிந்தனையில் அன்பு என்று கூறுகிறார். திருமூலர். "அன்பே சிவம்"என்பதை உணர்ந்துவிட்டால் ஒவ்வொருவரும் குடும்பம், சுற்றம், சமூகம், தேசியம், மண்டலம் என்னும் குறுகிய எல்லைகளைக் கடந்து உலகக் குடிமகன் ஆகிவிடமுடிகின்றது. இந்த இலக்கை அடைவதற்குத் திருமந்திரம் வழிகாட்டுகின்றது. சர்வதேசியம் என்னும் தற்கால எண்ணக்கருவுக்கும் அதன் வளர்ச்சி எவ்வாறு அமைய வேண்டுமென்பதற்கும் திருமந்திரம் விளக்கம் தருகின்றது. ஆன்மீக ஒருமைப்பாட்டின் மூலமே உலக ஒருமைப்பாடு காண முடியும் என்பதும், வன்மிக முறைகள் போர் என்பன மூலம் முரண்பாடுகளுக்கு தீர்வு காணமுடியாது என்பதும் திருமூலரின் முடிந்த முடிவுகள் ஆகும்.

*(சிந்தனைகள் தொடரும்....)*



# சிவயோக சுவாமிகள்
# ஐம்பதாவது குருபூசை வைபவம்

சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை வைபவம் விஜய வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (10.04.2014) நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் யாழ்ப்பாணம் நல்லூரில் நற்சிந்தனைப் பிரார்த்தனை நிகழ்ச்சியொன்று நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகளை நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல பாரெல்லாம் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி ஏனைய சங்கங்களிடம் மாமன்றம் வேண்டுகோள் விடுக்கின்றது. யோகர் சுவாமிகள் அறநிதியம் போன்ற ஈடுபாடுள்ள சங்கங்களும் மாமன்றத்துடன் இணைந்து குருபூசை நிகழ்வுக்கான ஒத்துழைப்பை வழங்குகின்றன.

சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசையையொட்டி நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியையும் மற்றும் கவிதை போட்டி, பேச்சுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

இதுவிடயமாக மாமன்ற தலைமையகத்துடன் தொடர்புகொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் பெரியபுராணம்

சைவவித்தகர் யோ. மோகததாசன்

**ப**ண்டைக்காலந்தொட்டே தமிழகம் - தமிழினம் சமய நெறியைக் கண்டும் அந்நெறியில் நின்று ஒழுகி பண்பட்டும் வந்துள்ளது. வாழ்க்கைக்கு நெறியும் முறையும் உண்டு. வாழ்க்கை இலட்சிய நோக்குடையது. குறிக்கோளில்லாத வாழ்க்கை கூடைச்சாம்பலுக்கே. குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையே குவலயம் போற்றும் வாழ்க்கை என்று வாழ்க்கைக்கொரு சிறப்பான குறிக்கோளைச் சமய நெறி வழியாகத் தந்து மனித வாழ்க்கையை வளப்படுத்திய மொழியும் தமிழே என்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

பரிபாடல், திருமுருகாற்றுப்படை, தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா என்று கடவுள் வழிபாட்டைக் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துக் கூறும் பனுவல்கள் பற்பல காலந்தோறும் தோன்றித் தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் பக்குவப்படுத்தி வந்துள்ளன.

அறிஞர் தனிநாயகம் அடிகளார் குறிப்பிடுவது போல், ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜேர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலி மொழி என்றும் ஏற்றுக் கொண்டால், தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும். இது பக்தி மொழி என்றும் கூறப்படுகின்றது. இத்தகைய விழுமிய பக்தி நெறியில் தலைநின்று, வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றியவர்கள் இறையடியவர்கள். இவ்வடியவர்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறியைச் சுட்டி இது ஒரு வழிகாட்டி நூலாக விளங்குவதை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## நால்வர் காட்டிய வழி

**"நாலு பேர் நடந்த வழியில் நட"** என்பது இன்றும் பேச்சு வழக்கில் வழங்கும் சொல்நடை, நாலு பேர் என்பது சைவ சமயத்தின் தூண்களாக விளங்கிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைக் குறிக்கும். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" இறைவனை வழிபட்டவர்கள் அவர்கள். இறைவனை அடைய அவர்கள் காட்டிய வாழ்க்கை நெறிகள் நான்கு அவையாவன:-

*நன்மகன்மை நெறி (சத்புத்ர மார்க்கம்)*
*தொண்டு நெறி (தாச மார்க்கம்)*
*தோழமை நெறி (சக மார்க்கம்)*
*யோக நெறி (ஞான மார்க்கம்)* ஆகியன ஆகும்.

## குறிக்கோளும், இறையடியார்களும்

சமணம், பௌத்தம், காளாமுகம் எனப் பல்வேறு மதங்கள் தோன்றி மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில் 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருஞானசம்பந்தர், ஊர் ஊராகச் சென்று, கோயில்கள் தோறும் இறைவனை வழிபட்டு வணங்கி, பாடல்களைப்பாடி ஒன்றிணைத்தார். சமய குரவர்களான இவர்கள் செல்வாக்கிழந்த சைவசமயத்தை மீண்டும் நிலைநிறுத்திய கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களைப் பின்பற்றிய அடியவர்கள், இறைவனுக்கு தொண்டு செய்தல், இறையடியவர்களுக்குத் தொண்டு செய்தல் என்று ஏதேனும் ஒரு குறிக்கோளைத் தம் வாழ்வியல் நெறியாகக் கொண்டு ஒழுகினர். வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றிய இறையடியார்களின் வரலாற்றை இனிதே எடுத்துரைப்பதுதான் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும். இதனை பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவல்லவர் "சேக்கிழார்" ஆவார்.

இடைக்காலத்து இலக்கியங்களில், நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றி அறிவிக்கும் வழிகாட்டி நூலாக விளங்குகிறது பெரியபுராணம். சேக்கிழார் காட்டும் இறையடியார்கள் நம் மேனி மேல் பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள் அவர்கள். ஐம்பூதங்கள் தம் நிலையில் கலங்கினாலும் மாதொரு பாகம் மலர்த்தாள் மறவாதவர்கள், கோதில்லாத குணப் பெருங்குன்றனையவர், ஈர அன்பினர், ஈசன்பணி அல்லது ஒன்று இலர், பக்தி வழிபாடு தவிர, முத்தியையும் மதித்து நாடாத பெருமிதமான மனப்பான்மை உடையவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்,

*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடவே யன்றி*
*வீடம் வேண்டா விறலின் விளங்கினார்"*

என்று அவர்களைப் போற்றிப் பாடுகிறார் சேக்கிழார். இத்தகைய அடியவர்களைப் பாடும் பெரியபுராணம் இவ் அடியவர்களின் வழி, சமுதாயத்திற்கு மனிதனுக்கு- வாழும் நெறி முறைகளைக் காட்டிச் செல்கின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய வழிமுறைகளைக் கூறிச் செல்கின்றது.

## அன்பு நெறி

*"அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*
எனப் பாடினார் திருமூலர்.

*"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்*
*ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கு என்*
*ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே"*
என்றார் மாணிக்கவாசகர்.

### இறைவன் முன் எல்லோரும் சமம்

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்று பாடினார் வள்ளலார். இறையடியவர்கள் எந்நிலையில் உள்ளவராயினும், எக்குலத்தில் பிறந்தவராயினும் எல்லோரையும் இணைத்து நின்றது அன்புநெறி ஒன்றே ஆகும். இறைவன் மீது கொண்ட அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது பெரியபுராணம். வேடவராயினும், பாணராயினும், குயவராயினும் எல்லோரும் இறைவன் முன் சமம் என்பதை எடுத்துக் காட்டுவது பெரியபுராணம். உள்ளத்தில் உள்ள அன்பேயன்றிப் புறத்தோற்றங்கள் எதுவும் இறையன்புக்குத் தடை ஆகா எனக் காட்டியது பெரியபுராணம்.

வெட்டு, குத்து, கொல்லு என நாளும் வாழும் வேடவர் குலத்தில் பிறந்த கண்ணப்பநாயனார். மலையில் குடுமித்தேவர் என்று அழைக்கப்பட்ட சிவபெருமானைக் கண்டவுடன் காதலாகி அவர்மீது பற்றுக்கொண்டு, பிற எல்லாவற்றையும் மறந்து வாழ முற்படுகின்றார். இறைவனுக்காகவே மான், பன்றி, கடா முதலான விலங்குகளை வேட்டையாடுகிறார். இறைச்சியைச் சுட்டு பதம் பார்த்து இலையில் எடுத்துக் கொள்கிறார். இறைவனுக்கான மலரைத் தலையில் தாங்கி, அவரை நீராட்ட நீரை வாயிலும் நிரப்பிக் கொண்டு வந்து அன்பு உமிழ்வார் போல் அந்நீரை உமிழ்கிறார். அவர் வலது கண்ணிலிருந்து குருதி வழிவதைக் கண்டு, தன் வலது கண்ணையே பெயர்த்து அப்புகிறார். இடது கண்ணிலும் குருதி வழிவதைப் பார்த்தவுடன், தம் இடது கண்ணையும் தோண்ட முற்படுகிறார். தமக்கு எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக் கொள்ளும் தாய், தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்தாலும் துடிக்கின்ற துடிப்பைப் போன்றே கண்ணப்பரின் செயலும் விளங்குகிறது. தாயினும் சாலப் பரிந்து, அவர் செய்யும் செயலை,

*"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்*
*அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்*
*அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்*
*அவனுடைய நிலையில் வாறு நீ என்றருள் செய்வார்"*

என்று இறைவனே சிவகோதியாருக்குக் கூறுவதாக குறிப்பிடுகிறார் சேக்கிழார். அதனால்தான் மாணிக்கவாசகர், திருக்கோத்துபியில், கண்ணப்பாது அன்பையே அன்பின் மேல் எல்லையாக வரையறுத்துக் கூறுகின்றார்.

*"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்*
*என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி*
*வண்ணப்ப பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்*
*அண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"*

என்று கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு தமக்கு இல்லையே என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம். பெரியபுராணம் அன்பு நெறியே இறைவனை அடையும் வழி என்பதை அழுத்தமாக எடுத்துரைக்கும் உயர்ந்த சமய நூல் ஆகும்.

கடவுளை நம்புதல், இன்ப அன்பே தவம் ஆதல், திருத்தொண்டில் இன்பம், ஆறுதல் ஆகிய அனைத்து உலகிற்கும் பொதுவான கொள்கைகளையே பெரியபுராணம் அடியவர் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றது.

### பெரியபுராணம் சமுதாய நூல்

அடியவர்க்கு மண், ஓடு வழங்கும் நெறியில் நின்றார் திருநீலகண்ட நாயனார். சிறு கோவணத்தை வழங்கித் தொண்டு செய்தார் அமர்நீதி நாயனார். அடியவரின் துணியை வெளுத்துக் கொடுத்துப் பணிபுரிந்தார் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். மாடுகள் இன்புறப் பாடித் தொண்டு புரிந்தார் ஆனாயநாயனார். திருஞானசம்பந்தருடன் அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று அவர் பாடும் பாடல்களுக்குப் பண் அமைத்துப் பாடித்தொண்டு செய்தார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார். வறுமையுற்ற நிலையிலும் புல்லை வெட்டி விற்று இறைவனுக்கு நெய் விளக்கேற்றித் தொண்டு செய்தார், கணம்புல்ல நாயனார். நெய் கிடைக்காத நிலையில் புல்லையே விளக்காக எரித்தார். அதுவும் கிடைக்காத நிலையில் தம் தலைமுடியையே எரித்து விளக்கொளி ஏற்படுத்தினார்.

திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இறைவனை வணங்கிப் படிக்காசு பெற்றுக் கஞ்சித்தொட்டி அமைத்துப் பணி புரிந்தனர். மேலும் திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட கோயில் திருக்கதவு திறக்கவும் அடைக்கவும் பாடி, அக்கோயிலை மக்கள் வழிபாட்டிற்கெனத் திறந்து விட்டனர் இவ்விருவரும்.

*"படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈயில்*
*நடமாடும் கோயில் நம்பற்கு ஆகா*
*நடமாடும் கோயில் நம்பற்கு ஒன்று ஈயின் அது*
*படமாடுங் கோயில் பரமர்க்கும் ஆகுமே"*

என்று திருமூலர் குறிப்பிடுவது போல் "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என வாழ்ந்தனர் சிவனடியார்கள். இங்ஙனம் தொண்டில் ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்த நாயன்மார்கள் அத்தொண்டில் இடையூறுகளும், தடைகளும் நேர்ந்தவிடத்து, அவற்றைப் பொருட்படுத்தாது, எதிர்கொண்டு தம் உயிரை ஈய்ந்தேனும் தம் குறிக்கோள் நெறியில் உறுதியுடன் நின்றனர். எவ்விதக் குறியெதிர்ப்புமில்லாமல் திருவருளையே முன்னிட்டு இவ்வடியார்கள் செய்த தொண்டுகளையே, நாம்-இச் சமுதாயத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை என்பதையே பெரியபுராணம் வலியுறுத்திக் கூறுகின்றது. சூழல் சங்கங்களும், செஞ்சிலுவைச் சங்கங்களும், அகில இலங்கை இந்து மாமன்றமும் மற்றும் பல்வேறு சமூக நிறுவனங்களும் தோன்றித் தொண்டாற்றுவதற்கு ஓர் அடிப்படையை அமைத்துத் தந்திருப்பது இப்பெரியபுராணம் ஆகும்.

### முடிவுரை

பெரியபுராணம் சமயநூல் மட்டுமன்று, சமுதாய நூலும் கூட. அது ஒரு புதுமைக்காப்பியம் மட்டுமன்று, புரட்சிக் காப்பியமும் ஆகும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வள்ளுவர் வாய்மொழியை மெய்ப்பித்துக் காட்டுவது பெரியபுராணம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் திருமூலர் வாக்கை செயற்படுத்துவது பெரியபுராணம். சாதி, சமயங்களைக் கடந்து அன்பும், தொண்டுமே சமுதாயத்திற்கு – அதில் வாழும் மக்களுக்கு இருகண்கள் எனக் காட்டுவது பெரியபுராணம்.

நல்லூர் கந்தன் வருடாந்த மகோற்சவத்தையொட்டி மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை இது




# அன்பே சிவம்

செல்வன் ரா. நித்தியராஜ்
ஹெவன்பிட்டி தமிழ் ம. வி., பொலனறுவை.

**சி**வத்தை முழுமுதலாகக் கொண்ட சமயம் சைவ சமயமாகும்.

*" யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே*
*மாதொரு பாகனார் தான் வருவார்"*

என்பது சைவக் கோட்பாடு. இது சிவன் ஒருவனே என்ற தத்துவத்தை விளக்கி நிற்கின்றது. தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்'' என்று திருமந்திரம் மொழிகின்றது. தனக்கென ஈடிணையற்ற யாவர்க்குமான ஒரே தலைவனாகிய சிவபிரானே சைவத்தினதும் முதல்வன்.சிவனே பரம் பொருள் : அவனே மெஞ்ஞானம் எனப் போற்றி வாழ்வது சைவ சமயமாகும்'' தனக்குவமை இல்லாதான்'' எனப் போற்றப்படும் சிவபெருமானின் எண் குணங்களில் ஒன்றான பேரருள் உடைமை அவர் சகல ஜீவராசிகள் மீதும் கொண்டுள்ள அன்பாகிய கருணை வெளிப்பாட்டை உணர்த்தி நிற்கின்றது. ஆகையால்தான் அவ்வேத நாயகனை ''பசுபதி '' என அழைக்கின்றோம். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ''என்பதற்கு வரைவிலக்கணமாக வாழ்ந்து காட்டிய நாயன்மார்களும் அன்பு வழி நின்று அருளுரை வழங்கிய ஆன்மீகத் தலைவர்களும் சைவம் காட்டும் அன்பு நெறிக்கு உதாரண புருஷர்களாகத் திகழ்கின்றனர்.

உயிர்களுக்கு நாம் செய்கின்ற அன்பே இறைவனுக்கு நாம் செய்த அன்புக்கு சமானம் என்பது மூதாதையர் வாக்கு. இதற்கு எடுத்துக்காட்டாய் ''மக்கள் சேவையே மகேசன் சேவை ''என்ற வாசகத்திற்கிணங்க வாழ்ந்தவர் இளையான் குடிமாற நாயனார். தமக்கு உணவில்லாத போதும் வரும் சிவனடியார்களுக்கெல்லாம் தமது துன்பம் நோக்காது திருவமுது அளித்து வந்தவர். பின் சிவபெருமான் திருவருளால் சிவலோகம் அடைந்தவர். அன்பின் சிறப்பை மேலும் வலியுறுத்துவதற்காக,

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

என்ற அடிகள் உள்ளத்திலே அன்புடையவர் தமது உயிரையும் பிறர்க்காய் கொண்டு வாழ வல்லவர் எனத் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இதற்கு சான்று பகருவதாக மலை வேடராம் கண்ணப்பர் திருக்குடுமித் தேவர் மீது கொண்ட அன்பை ''வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு'' என்று இனிமையாகப் பாடி வெளிப்படுத்தியிருக்கிறார். சேக்கிழார். மரப்பொந்தை விட்டு விலகாத உடும்பு போல தேவரை எப்போதும் விட்டுப் பிரியா கண்ணப்பர் தம் இறைவனுக்காகத் தன்னிரு கண்களையும் அர்ப்பணித்தார். அன்றியும் ஆதியும் அந்தமும் இல்லாதவனே அன்பின் நிமித்தம் தனது உதிரத்தைப் பாலாக்கி தாயிழந்து ஊணின்றித் தவித்த பன்றிக்குட்டிகளுக்கு கொடுத்தார். இதிலிருந்து சிவபெருமான் சகல உயிர்களின் மீதும் அன்புடையவர் என்பது தெட்டத் தெளிவாகின்றது. இதனாலன்றோ இவர் சகல சீவதயாபரன் என்றும் அன்பினில் விளைந்த ஆரமுது என்றும் புகழுக்குரியவராகின்றார்.

மனிதர்கள் ஏனைய மனிதர்கள் பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும் கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன.திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும் இன்றியமையாமையும் எடுத்துரைத்துள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன் அவர் யார்? அவன் இயல்பு எத்தகையது என்ற வினாக்களுக்குத் திருமூலர் தரும் விடை ஆழ்ந்த பொருட்சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன் 'சிவம் வேறு : அன்பு வேறு' என்பார். அறியாமை மிக்கவர்கள். 'இரண்டும் ஒன்றே' என்று உணரும் உணர்வில் இறைமைப்பேறு வாய்க்கும்

*"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமானது ஆரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"*

என்பது அன்பின் சிறப்புரைக்கும் பாடலாகும்.

சைவம் மனித நேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறிசிற்றுயிர்கள் இடத்தும் கருணை காட்ட வேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது. இறைவன் உலகத்தையும் நுகர் பொருள்களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத்தவிர வேறு யாது ஒன்றும் பெற விரும்புவதில்லை. ஆனால் சமயவாதிகள் சடங்கு நெறியில் பற்றுக் கொண்டு நின்று மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது இறைவனுக்கு படையலிட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும் படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும் கணக்கிலும் அவனுக்கு படைக்கப்படும் படையல் இடம் பெறுவதில்லை. அவன் கணக்கிலும் இடம் பெற விரும்பினால் பசித்திருப்போருக்கு உணவு அளியுங்கள்.அதுவே அவனைச் சென்றடையும் அரிய பெரு நெறி என்று காட்டுகின்றார் திருமூலர்.

*"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்*
*நட மாடக் கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"*

நம்பர் என்ற சொல் நம்மவர் எம்மைப்போன்ற மனிதர்கள் என்ற பொருள் தரும். மனிதனின் உள்ளத்தில் இறைவன் குடி கொண்டுள்ளான். எனவே மனிதர்கள் இறைவனின் நடமாடும் கோயில்கள். நடமாடும் கோயில்களாகிய நம் போன்ற மனிதர்க்கு ஒன்று கொடுப்பது இறைவனுக்கு கொடுப்பதற்கு ஒப்பாகும்.

வாழ்க்கை நிகழ்விலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அமைச்சராகப் புகழ் கொண்டு வலம் வந்த திருவாதவூரருக்கு மர நிழலிலே தியானித்து நின்று தேவாசிரியரைக் கண்டு பக்திப்பரவசம் மேலிட அவர் மேல் கொண்ட அன்பினால் தம் பதவியைத் துறந்தார். தேனினிய திருவாசகம் பாடினார். அன்பினால் இறைவனுடன் ஐக்கியமானவர் மாணிக்கவாசகர்.

*"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியிணைக்கு வாய்ந்த மலரெதுவோ*
*வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல......"*

என்று பாடிய ஈழத்துப் பக்திமான் விபுலானந்த அடிகளார் எல்லோர் உள்ளத்திலும் அன்பெனும் வற்றாத பேரூற்றாய் நிலைக்க வேண்டும். என்பதை உணர்த்த விரும்புவார் போல, உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று அற்புதமாக சைவத்தின் மெய்கருத்தை புலப்படுத்துகின்றார்.அந்நியர் வருகையால் சைவம் அழிந்து சென்ற போது சைவம் மீது பேரன்பு கொண்ட நாவலர் பெருமான் ''புலால் உண்ணாதவன் மெய்ச்சைவ சமயி ''என்று அடித்துரைக்கின்றார். இதினின்று சகல ஜீவராசிகளையும் எம் உடன் பிறப்புக்களாய்க் கொண்டு அன்பு நெறி வழுவாது வாழ வேண்டும் என்ற கருத்தைக் கூறுகின்றார் நாவலர். இதே போன்று அன்பு மார்க்கம் நின்று முத்தி எய்திய சைவப் பெரியார்கள் பலர். அவர்கள் சைவ மதத்திலேயே ஒழுகி தம் இறைவன் வழி பற்றி அகத்துறுப்பென நன்னூலாளரால் சிறப்பிக்கப்படுகின்ற அன்பு வழியில் வாழ்ந்தெய்தியவர்கள்.

ஒரு முறை வணிகர் மரபில் அவதரித்த இயற்பகை நாயனார் சிவனடியார் மேல் கொண்ட அன்பை உலகறியச் செய்வதற்காக சிவபெருமான் அடியார் வேடம் பூண்டு அவர் மனைவியாரைத் தம்மிடம் தருமாறு கேட்டார். "எனக்குரிய பொருட்கள் எல்லாம் சிவனடியார்க்குரியதே" என்று திருவாய் மலர்ந்து தம் காதல் மனையாளை ஈந்தார். இதனைக் கண்டு "அன்பனே செயற்கரியன செய்த தீரனே" என்று ஈசனார் விளித்து "அன்பர்க்கு இல்லை என்னாது ஈந்த நீ மனைவியுடன் முக்தி அடைவாய்'' என்று அருள் கூர்ந்தார்.

ஈஸ்வரனின் அடியவராய் இறைவனிடத்தே மிக்க அன்புடையவராய் விளங்கிய செம்மனச்செல்வியாரிடம் கூலியாகப் பிட்டைப் பெற்று மண் சுமந்த கதை உள்ளத்தை உருக்குவது. இத்தகையதோர் பாக்கியத்தைப் பெற்று சிறப்புடன் வாழ்ந்தார் செம்மனச் செல்வி.

இதே போன்று இறைவனிடத்தே மிகுந்த அன்பு கொண்ட பூசலார் அவர் மனத்திலேயே சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த மூலஸ்தானம் கோபுரங்களுடனான சிவாலயம் அமைத்து வழிபட்டார். அவர் மனக்கோயிலுக்குப் பிரதிஷ்டை செய்யும் நாளில் காடவ மன்னனும் தான் அமைத்த கோயிலுக்குப் பிரதிஷ்டை செய்ய எண்ணியிருந்தான். இதை உணர்ந்த பரம் பொருள் பூசலாரின் மேம்பட்ட அன்பிலே திளைத்து அவருடைய ஆலயத்திலேயே கோயில் கொண்டருளினார்.

இறைவனின் திருநாமத்தைச் சொல்லுவதனால் மட்டுமே இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரர்களாக ஆகிவிட முடியாது. உள்ளத்தே பூரண அன்புடன் நாம் இறைவனின் திருநாமத்தை தியானித்தோமானால் இறைவனும் நம்மிடம் நெருங்கி வருவான். இறைவனின் அருள் பூரணமாக நமக்குக் கிடைக்க வேண்டுமானால் இறைவனின் அருகாமையில் நாம் இருக்க வேண்டும். உள்ளத்தே தோன்றும் தூய அன்புதான் பக்தியாகப் பரிணாமம் கொள்கின்றது.சுயநலம் சார்ந்ததாக இருக்கும் வரை அது வெறும் அன்பு.சுய நலமற்ற நிலையில் அதுவே உன்னதமான பக்தியாக பரிணாமம் கொள்கின்றது.நாம் நம் உறவுகளிடம் செலுத்தக் கூடிய அன்பானது பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் சுயநலம் சார்ந்ததாகவே இருக்கின்றது.அதே வேளையில் ஒரு தாய் தன் குழந்தையிடம் செலுத்தும் அன்பானது சுயநலமற்று இருப்பதால், அந்தத் தாயன்பை தன் தெய்வத்திடம் அவள் கொண்டிருக்கும் பக்தி என்றே சொல்லலாம்.

இறைவனிடமான நம்முடைய பக்தியானது இரண்டு வகைப்படும். ஒன்று அச்சத்தினால் விளைவது.மற்றது மாசற்ற அன்பினால் மலர்வது.இறைவனை பூஜிக்கா விட்டால் நமக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்து விடுமோ? வாழ்க்கையில் சோதனைகளை சந்திக்க நேரிடுமோ என்பது போன்ற எண்ணங்களினால் தோன்றும் பக்தியானதுதான் அச்சத்தினால் தோன்றும் பக்தி என்பது. இது உண்மையான பக்தி இல்லை.

வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்பர் சிவபெருமானிடம் கொண்ட பக்தியும், சபரி இராமபிரானிடம் கொண்டிருந்த பக்தியும் அவர்கள் மாசற்ற அன்பினால் மலர்ந்ததுதான். அதனாலேயே காலங்களைக் கடந்தும் அவர்களுடைய அந்த பக்தியானது போற்றப் பெறுகின்றது.இறைவனிடம் இப்படி உள்ளன்புடன் பக்தி செலுத்தாதவர்களுக்கெல்லாம் இறைவன் அருகில் இருந்தாலும் கூட தொலைவில் இருப்பவனாகவே திகழ்வான்.இதைத்தான் இருந்தும் இல்லாத நிலை என்பது.

குருஷேத்திர யுத்தம் தொடங்கப்போகும் நிலை. துரியோதனனும் அர்ஜுனனும் கிருஷ்ணரிடம் உதவி கேட்டுப் பெறுவதற்காக வருகின்றார்கள். துரியோதனனைப் பொறுத்தமட்டில் அவனுக்குப் படை வலிமையே பெரிதாகத் தோன்றுகின்றது. அர்ஜுனனோ கிருஸ்ணன் பரப்ரம்ம ஸ்வரூபி என்பதனாலேயே அர்ஜுனன் கிருஷ்ணனை நேசித்தான். அந்த நேசமானது இறைவனாம் கிருஷ்ணனை

எப்போதும் அவனுக்கு அருகிலேயே இருக்குமாறு செய்தது.

துரியோதனுக்கு கிருஷ்ணன் தன்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதன் தானே என்ற அலட்சியம். எனவே அவனால் கிருஷ்ணனை நேசிக்கவோ-பூஜிக்கவோ முடியவில்லை. ஆகையினால் இறைவன் துரியோதனை விட்டு வெகு தூரத்திலேயே இருந்துவிட்டான். இப்படி துரியோதனனைப் போல் இறைவனை அறியாமலும் உணராமலும் இருப்பவர்க்கெல்லாம் இறைவன் வெகு தூரத்தில் இருப்பவன் ஆவான் என்பதையே மாணிக்கவாசகர். "புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்குழல்கள் வெல்க" என்கிறார். அதே மகாபாரதத்தில் மற்றொரு நிகழ்ச்சி. கௌரவ சபையில் பாஞ்சாலி அகௌரவப் படுத்தப்பட்ட போது கௌரவர்களின் கௌரவமற்ற செயல் கண்டு ஆன்றோரும் சான்றோரும் தலைகுனிந்து நின்றனர். அநாதரவான நிலையில் தன் இரு கரங்களாலும் மார்பினை இறுகப் பிடித்தபடி "கிருஷ்ணா கோவிந்தா" என்றெல்லாம் கதறிக் கதறி கண்ணனை அழைக்கின்றாள் பாஞ்சாலி கிருஷ்ணனின் உதவி அவளுக்குக் கிடைக்கவில்லை.

காரணம் அவள் என்னதான் கதறிக் கதறி கிருஷ்ணனை அழைத்தாலும் கூட இரு கரங்களினால் தன் மார்பை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள். இச் செயலானது பூரணத்துவம் பெறாததையே எடுத்துக் காட்டுகின்றது.தான் கதறியும் கண்ணனின் அருள் கிடைக்காத நிலையில் ஒரு கட்டத்தில் மார்பை இறுகப் பிடித்திருந்த தன் இரு கரங்களையும் கூப்பியவளாக பாஞ்சாலி கிருஷ்ணனை அழைக்கிறாள். அவ்வேளையில் பகவான் கிருஷ்ணனின் அருளால் அவளது கௌரவம் கௌரவ சபையில் காப்பாற்றப்படுகின்றது.

பாஞ்சாலியைப் போல், தான் என்னும் எண்ணம் அகற்றி கரம் கூப்பி இறைவனை வணங்கும்போது நம்முடைய உள்ளமெல்லாம் மகிழும்படியாக இறைவனுடைய பூரண அருள் நமக்குக் கிடைக்கின்றது. "கரம் குவிவார் உளமகிழும் கோன் கழல்கள் வெல்க" என்றும், "சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க" என்றும் சொல்கிறார். அதாவது தலையால் பணிந்து வணங்குபவர்களை இறைவன் ஆன்மீகத்தில் உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்றானாம்.

யோக நெறியில் ஆறு ஆதாரங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவைகளே அவை. சாதகன் ஒருவன் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி ஒவ்வொரு ஆதாரமாக உயர்த்திக் கொண்டு செல்லும் நிலையில் அந்தந்த நிலைக்கேற்ற சக்தியை அடைகின்றான். இவ்விதமாக குண்டலினியை ஆக்ஞா எனப்படுகின்ற நெற்றியைப் புருவங்களின் மத்தியில் கொண்டு நிறுத்தும் போது பல அபூர்வ சித்திகள் கைவரப் பெறுவதுடன் சாதகனுடைய உள்ளமும் சதாசர்வ காலமும் ஆனந்தத்திலேயே திளைத்திருக்கின்றது. இந்நிலையினை கரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிட்டால் ஆக்ஞா சக்கரத்தில் சங்கமப்படுத்தி இறைவனுடன் ஐக்கியமாகும் நிலையை சிரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிடலாம்.

பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் இறைவனிடமே சென்று ஐக்கியமாக வேண்டும் என்பதுதான் இலட்சியமாக இருக்க வேண்டும். அந்த இலட்சியம் ஒரு பிறவியிலேயே நிறை வேறிவிடும் என்பது சாத்தியமல்ல.அதற்கும் பல பிறவிகள் தேவைப்படலாம். பல பிறவிகள் கடந்த ஒரு நிலையில் நாம் இறைவனுடன் ஐக்கியமாக வேண்டுமானால் ஒவ்வொரு பிறவியிலும் இறைவனை நாம் நினைத்துப் போற்றியபடியே இருக்க வேண்டும்.

பதி, பசு, பாசம், ஆகிய முப்பொருள்களில் பாசம் என்பது உலகிலுள்ள அனைத்து ஆன்மாக்களிலும் குடி கொண்டுள்ளது. பற்று எனப்படும் இப் பாசமானது உலகியல் வாழ்வில் எம்மை ஈடுபடச் செய்து எமது ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடையாய் அமைவதுடன் பொறாமை வஞ்சகம் போன்ற தீய நெறிகளுக்கும் எம்மை இட்டுச் செல்லும். உலகப் பற்றுக்களிலிருந்து நீங்கி உயிர்களிடத்தே அன்பும் இறைவனிடத்தே பக்தியும் கொண்டு வாழ்ந்தால் உயர்வு அடையலாம் என்பது சைவ சமயத்தின் நோக்கமாகும். இவ்வடிப்படையில் பற்றுப் பாசங்களை வேரோடு களைந்து வீடு பேற்றை அடைந்தவர் காரைக்காலம்மையார். உலக வாழ்வை வெறுத்த இவர் தமது தலையாலே நடந்து கைலாசத்தை அடைந்தார். அங்கு ஒளி பொருந்த வீற்றிருந்த மாதொருபாகரைக் கண்டு அன்புப் பெருக்குத் தெளிந்த நீராய் ஓட "ஐயனே!"என்று உணர்ச்சி பொங்க அழைத்தார். பின் பெரும் ஆனந்தப் பரவசத்தால் "நான் பாட நீ ஆட வேண்டும் அதை நும் திருவடிக்கீழ் இருந்து நான் இரசிக்க வேண்டும்" என வேண்டினார். அப்பக்தையின் பேரன்பைக் கண்டு வியந்த நடராஜப் பெருமான் அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்.

இவ்வாறு இன்ப ஊற்றாம் அன்பு சைவ சமயத்தோடு எவ்வாறு ஒன்றித் தொடர்பு உடையதாய் விளங்குகின்ற தென்பது இதினின்று தெளிவாகின்றது. ஆனால் இன்றைய சமுதாயத்தில் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை என்பன ஓங்கி நிற்கின்றன. இத்தகைய அஞ்ஞானத்தால் மக்களிடையே அன்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி வருகின்றது.அதனாலேயே பஞ்சமாபாதகங்கள் உலகில் தலைவிரித்தாடுகின்றன. இதை விடுத்து மீண்டுமோர் ஒளிமயமான அன்பு வாழ்க்கையை நாம் கடைப்பிடிப்பதற்கு கடவுள் வழிபாடு, ஞானநூற் கல்வி, தொண்டு செய்தல், குரு வழிபாடு, நல்லோர் சேர்க்கை, நற்செயல்கள் புரிதல், போன்ற சில செயற்பாடுகளை நம்மிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும். இக் கருமங்களைச் சிரமேற் கொண்டு அன்பு நெறியில் ஒழுகும் போது ஆணவத்தின் வலி குறைந்து மானிடர் மனித நிலை பெறுவர், வளர்ச்சி கருணை கைவரப் பெறுவர், தெய்வீகத் தன்மையை அடைவர்.

## 12.01.2014 அன்று சக்தி இல்லத்தில் நடந்த கொழும்பு (இரத்மலானை) இந்துக் கல்லூரி விடுதி மாணவர் பிறந்தநாள் விழா




விழாவில் உரையாற்றிய ஆன்மீகச் சுடர். மாமன்றத் தலைவர்




மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர்




விடுதிப் பிள்ளைகளுடன் பிறந்த தினத்தை கொண்டாடிய மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா



நடனமாடும் செல்வன் தனுஷன்




இறை வழிபாடு



சபையில் ஆன்மீகச் சுடருடன் கல்லூரி முதல்வர் திரு. ஜெயக்குமார்




பிறந்த தின பரிசில்களை வழங்கும் ஆன்மீகச் சுடர்; அருகில் மாமன்ற விடுதிகள் குழுத் தலைவி திருமதி. அ. கயிலாசபிள்ளை






பிறந்த தினத்தைக் கொண்டாடிய மாணவ மாணவிகள் சிலர்


## கொழும்பு விவேகானந்த சபை 18.01.2014 அன்று நடாத்திய சுவாமி விவேகானந்தரின் 151வது பிறந்ததின விழா



பிரதம விருந்தினர் இந்திய தூதரக அதிகாரி திருமதி ஈஷா ஸ்ரீவற்சவா அவர்களை திருமதி அ. கயிலாசபிள்ளை கௌரவிக்கிறார்.



சிறப்பு விருந்தினர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களை திருமதி ரேனுகா சுரேந்திரன் கௌரவிக்கிறார். நடுவில் விவேகானந்த சபை செயலாளர் திரு. க. விவேகானந்தன்




அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் உரையாற்றுகிறார்.



தலைமை தாங்கிய விவேகானந்த சபை தலைவர் திரு. இரத்தினவேல் சுரேந்திரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)

## 09.01.2014 அன்று நடந்த சேர் பொன். அருணாசலம் நினைவுதின வைபவம்



மனிதநேயமாமணி இறைசிரோரத்தினம்
கயிலாசபிள்ளை அவர்கள் மங்கள விளக்கேற்றுகிறார்




சக்தி இல்ல மாணவர்களின் இறை வழிபாடு




சேர் பொன். அருணாசலம் நிதியம் ஒழுங்கு செய்த வைபவத்தில் இறைவழிபாடு (இ-வ)
திரு. எஸ். பி. சாமி, திரு. ஜெயந்தா சுவாமிநாதன், திரு. வி. கயிலாசபிள்ளை, களனி
பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம, மாண்புமிகு அமைச்சர் வாசுதேவ
நாணயக்கார, திரு. சேகா. நாகேந்திரா, சிவாச்சாரியார், நிதியத்தின் தலைவர் திரு. நீலகண்டன்



மங்கள விளக்கேற்றும் நிதியத்தின் செயலாளர் கலாநிதி
முத்தையா கதிர்காமநாதன்



பிரதம விருந்தினர் மாண்புமிகு அமைச்சர்
வாசுதேவ நாணயக்கார உரையாற்றுகிறார்



உபவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம
நினைவுப் பேருரையாற்றுகிறார்



தலைமை தாங்கிய
நிதியத்தின் தலைவர்

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- ஆசிச் செய்திகள் / வாழ்த்துச் செய்திகள் 4
- வினையகற்றும் வீரகத்தி விநாயகர் ஆலய வரலாற்றுச் சுருக்கம் 6
- பிள்ளையார் சுழி 8
- வீரகத்தி விநாயகர் திருப்பதிகம் 9
- வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை 10
- வீரகத்தி விநாயகர்மீது பாடப்பெற்ற திருவூஞ்சல் பாடல்கள் 11
- விநாயகர் அகவல் 13
- விநாயகர் அகவல் - சிறப்பும் மகத்துவமும் 14
- விநாயகர் கவசம் 16
- அறுகம்புல் அர்ச்சனையின் மகத்துவம் 17
- ஸ்ரீ கணேசாஷ்டகம் 20
- தைத்திங்களின் மகத்துவம் 21
- தைத்திருநாளாக சிறப்புப்பெறும் தைப்பொங்கல் 24
- மகத்துவமிக்க சூரிய வழிபாடு 25
- திருமூலரின் வாழ்வியல் சிந்தனைகள் 27
- வாழ்க்கைக்கு வழிகாட்டும் பெரியபுராணம் 29
- அன்பே சிவம் 31


# விநாயகர் வணக்கம்



*ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்*
*நால்வாயைங் கரத்தன் ஆறு*
*தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்*
*தருமொருவா ரணத்தின் தாள்கள்*
*உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே*
*இரவுபகல் உணர்வோர் சிந்தைத்*
*திருகோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்*
*றோவென்னச் செய்யுந் தேவே.*

**இதன் பொருள்:-**

ஆறு – கங்கையையும், கோட்டம் தரு பிறை – வளைவு பொருந்திய பிறையையும், இதழி – கொன்றை மாலையையும் அணிந்த, தாழ் சடையான் தரும் – தாழ்ந்த சடையையுடைய சிவபெருமான் தந்தருளிய, ஒரு கோட்டன் – ஒரு கொம்பையுடையவரும், இரு செவியன் – இரண்டு செவிகளையுடையவரும், மும் மதத்தன் – மூன்று மதங்களையுடையவரும், நால்வாய் ஐங்கரத்தன் – தூங்குகின்ற வாயையும் ஐந்து கைகளையுமுடையவரும் ஆகிய, ஒரு வாரணத்தின் தாள்கள் – ஒப்பற்ற யானைமுகம் போலும் முகத்தையுடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகள், உருகு ஒட்டும் அன்பொடும் வணங்கி – பேரன்போடு தம்மை வணங்கி, ஓவாதே இரவு பகல் உணர்வோர் – இடைவிடாமல் இரவும் பகலும் தியானிப்பவரது, சிந்தைத் திருகு – அறிவிற் பொருந்திய மலக்குற்றத்தை, ஒட்டும் நீக்கும், அதுவுமின்றி அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்ன – பிரம விட்டுணுக்களுடைய வாழ்வும் ஒரு பொருளோ என்று அதனை வெறுக்கும்படி, தேவு செய்யும் – தெய்வத் தன்மைப் பெருவாழ்வையும் தரும்.

## பிள்ளையார் நோன்பு



*கல்லா தவர்நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்*
*இல்லா தவர்நோற்கின் இன்மைபோம் - பொல்லாத*
*பாவம்போம் மிக்க பழவினைநோய் தானும்போம்*
*வேகமலம் போமே மிக*



*வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த*
*பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி*
*கற்றவரும் நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்*
*பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு*

*பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்து நீண்மௌலிக்*
*கற்பகத்தின் நோன்பைக் கருத்துடனே - சொற்றபடி*
*நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை*
*கேட்போர்க்கும் வாராது கேடு*


## தைப்பொங்கல் நிகழ்வு (14.01.2014)



கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மாமன்றத்தின் அனுசரணையில் நடந்த தைப்பொங்கல் நிகழ்வின் போது பொங்கல் பானையில் அரிசியிடும் ஆன்மீகச்சுடரும் மாமன்றத் தலைவரும்




சுவாமி வீதிவலம் வரும் காட்சி



ஆலய உற்சவ மூர்த்திகள் முன்னிலையில் ஆன்மீகச்சுடரின் அருளுரை



மாமன்றத்தில் தைப்பொங்கல் அமுதை சூரியனுக்கு படைக்கும் மாமன்றப் பிரதித் தலைவர்




மாமன்றத் தலைமையகத்தில் தைப்பொங்கல் பூசை

---

## 12.01.2014 அன்று திருமுறை முற்றோதல்




கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடந்த திருமுறை முற்றோதலில் ஆன்மீகச் சுடரின் அருளுரை




ஸ்ரீ நடராஜர் சந்நிதானத்தில் திருமுறை முற்றோதும் சிவனடியார் கூட்டம்

### சிட்னியில் மாமன்றத் தலைவர்




26.12.2013 அன்று சிட்னி ஸ்ரீ முருகன் திருத்தலத்தில் சிட்னி சைவ மன்றத்தின் ஒழுங்கில் மாமன்றத் தலைவர் திரு. நீலகண்டன் சிறப்புரையாற்றும் காட்சி.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/52/NEWS/2014



ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள விநாயகரின் 32 திருவுருவத் தோற்றங்கள் - இச்சிறப்பிதழின் நடுப்பக்கத்தில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன



ஆலய தீர்த்தத் தடாகத்தின் எழில்மிகு தோற்றம்

இவ்விதழ் இல. 46B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.